beseem *(v)* : be fit for, be suitable, பொருந்து, ஏற்றதாய் இரு
beset *(v)* : surround, encircle, attack from all sides, சூழ்ந்து கொள், முற்றுகையிடு, தாக்கு
beside *(prep)* : by the side of, close to, பக்கத்தில், அருகில்
besides *(adv & prep)* : in addition to, other than, too, மேலும், அல்லாமலும், தவிர, கூடவும்
besiege *(v)* : lay siege, முற்றுகையிடு
besmirch *(v)* : soil, to stain, அழுக் காக்கு, மாசுபடுத்து, நிறம் மங்கச் செய்
besom *(n)* : a kind of broom, குச்சித் துடைப்பம்
besotted *(adj)* : stupefied mentally or morally, மன மயக்கத்துக்கோ உடல் மயக்கத்துக்கோ ஆளான, கண் மூடித்தனமான
besought *(v)* : past tense and past participle of beseech, 'beseech' என்பதன் இறந்த கால, இறந்த கால முடிவெச்சம்
bespatter *(v)* : splash with dirt, water,etc., cover with abuse, வாரித் தெளித்து அழுக்காக்கு, பழி கூறு
bespeak *(v)* : order in advance,

engage beforehand to speak for, be evidence of, முன் கூட்டியே பேசி வை, முகம் கொடுத்துப் பேசு, சான்று கூறு

best *(adj)* : good in the highest degree, மிகச் சிறந்த

bestial *(adj)* : of or like a beast, barbarous, brutal, carnal, irrational, விலங்கின் தன்மையுள்ள, அநாகரீக மான, முரட்டுத்தனமான, இழிந்த, சிற்றின்ப நாட்டமுள்ள, அறிவுக்குப் பொருந்தாத

bestow *(v)* : give, கொடு, வழங்கு

bet *(v)* : to pledge, to lay as a wager, பந்தயம் கட்டு, பணயம் வை

betake *(v)* : to resort, to apply oneself to, முயற்சியை மேற்கொள், அணுகு

bethink *(v)* : try to remember, reflect, நினைவுகூர், நினைத்துப்பார், எண்ணிப்பார்

betide *(v)* : to happen to, நேரிடு, நிகழ்

betimes *(adj)* : at the right time, early, சரியான நேரத்தில், முன் கூட்டி, விரைவில்

betoken *(v)* : signify, show beforehand, குறிப்பிடு, முன்னறிவி

betray *(v)* : deceive, be false to, reveal, ஏமாற்று, நம்பிக்கை துரோகம் செய், வெளிப்படுத்து

betroth *(v)* : promise in marriage, திருமண நிச்சயம் (உறுதி) செய்

betrothal *(n)* : promise of marriage, திருமணம் உறுதி செய்தல்

better *(adj)* : good in a higher degree, மேலான, சிறந்த

between *(adj)* : in the middle of two, இடையில், இரண்டின் நடுவில்

beverage *(n)* : something t , drink, பானம்

bewail *(v)* : to moum loudly, புலம்பி அழு

beware *(v)* : be careful, எச்சரிக்கை யாயிரு

bewilder *(v)* : confuse, தடுமாறச் செய்

bewilderment *(n)* : confusion, குழப் பம், தடுமாற்றம்

bewitch *(v)* : affect by magic, charm, மந்திரம் போடு, உள்ளத்தைக் கவரு

bewitching *(adj)* : charming, அழகான

beyond *(adv & prep)* : on the other side of, farther than, மறுபக்கத்தில், தொலைவில்

bias *(n)* : a leaning to one side, partiality, bent, leaning, ஒரு பக்கச் சார்பு, தனிப்பற்று, சாய்வு

bib *(n)* : a napkin fastened under a child's chin to keep the dress clean, குழந்தையின் கழுத்தாடை

Bible *(n)* : The sacred book of Christians and Jews, வேத நூல்

bibliography *(n)* : description of books, their authors and subjects, நூல் விவரப் பட்டியல், நூலடைவு

bibliophile *(n)* : a lover of books, நூல் விரும்பி

bibulous *(adj)* : addicted to drink, thirsty, குடிச்சும் பழக்கத்துக்கு அடிமையான, தாகமுடைய

bicentenary *(n)* : the two-hundredth year of an event, இருநூறாம் ஆண்டு விழா; *(adj)* : of the two-hundredth anniversary, இருநூறு ஆண்டுகளுக்குரிய, இருநூறு சார்ந்த

biceps *(n)* : the muscle on the front side of the upper arm, மேற்கை தசை

bicker *(v)* : quarrel over small or unimportant matters, move quickly, சின்னச் சின்ன காரணங்களுக் காகச் சண்டையிடு, சச்சரவு செய், ஓடு

bicycle *(n)* : a cycle with two wheels, மிதிவண்டி

bid *(v)* : tell, command, order, offer to pay, கூறு, கட்டளை இடு, விலை கூறு; *(n)* : offer at an auction, (ஏலத்தில்) விலை கூறு

bidding *(n)* : order, bargaining, கட்டளை, ஏலத்தில் விலை கூறுதல்

bide *(v)* : wait or remain, continue, காத்திரு, தங்கு, தொடரு

bier *(n)* : coffin, a carriage for taking the body to the grave, சவப்பெட்டி, பாடை

biennial *(adj)* : lasting for two years, recurring every two years, இரண்டாண்டு வாழ்வுடைய, இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறையான

bifurcate *(v)* : divide into two branches, இரண்டாகப் பிரி; *(adj)* : with fork like end, இரு பிரிவாக உள்ள, இரு கிளைகளை யுடைய

big *(adj)* : large, great in size, பெரிய, பேரளவான

bigamy *(n)* : having two wives or two husbands at a time, இரு மனைவியர் அல்லது இரு கணவருடன் வாழ்தல்

bigot *(n)* : a narrow-minded person, one who blindly believes or supports a faith, குறுகிய மனப்பான்மை உடையவன், குருட்டுப்பிடிவாத முடையவன், கண்மூடித்தனமான நம்பிக்கையுடையவன்

bigwig *(n)* : a very important person, பெரிய மனிதன்

bilberry *(n)* : a dark blue fruit of a hardy shrub growing on heaths and mountain woods in North Europe, வட ஐரோப்பாவில் உள்ள மலைக் காடுகளில் வளரும் ஒரு வகை புதர்ச் செடியின் கருநீலப் பழம்

bile *(n)* : a thick bitter fluid coming from the liver, bitter feeling, பித்த நீர், சிடுசிடுப்பு

bilge *(n)* : nearly horizontal part of a ship's bottom, the belly of a cask, foulness that collects inside the bilge, கப்பலின் அடிப்பகுதி, பீப்பாயின் பருத்த பகுதி, சேர், தூர்

bilingual *(adj)* : speaking two languages, இருமொழிப் பயிற்சியுள்ள

bilk *(v)* : cheat, dodge, ஏமாற்று, மோசம் செய், தட்டிக்கழி

bill *(n)* : the beak of a bird, an account of dues, a written notice, a suggestion for a kind of battle-axe, பறவை அலகு, பணம் வரவேண்டிய சீட்டு, விலை விவரச் சீட்டு, எழுத்து மூல அறி விப்பு, மசோதா, ஒரு வகை போர்க் கோடாரி

billet *(n)* : a temporary lodging for soldiers, a small log, a short letter, படை ஒய்விடம், சிறு விறகுக் கட்டை, சிறு குறிப்பு; *(v)* : accommodate, தங்க இடமளி

billiards *(n)* : an indoor game played with sticks & balls, பந்துகளையும் கோல்களையும் பயன்படுத்தி மேசையில் ஆடும் ஒரு வகைப் பந்தாட்டம்

billion *(n)* : a million millions in Britain, a thousand millions in U.S.A & France, பிரிட்டன் வழக்கில் லட்சம் கோடி, அமெரிக்க-பிரெஞ்சு வழக்கில் நூறுகோடி

billow *(n)* : a large wave, பெரிய அலை
bin *(n)* : a large box, தொட்டி
bind *(v)* : tie, put the cover on a book, promise to do something, கட்டு, அட்டையிடு, உறுதி அளி
binding *(n)* : book cover, anything that binds, நூல் அட்டை, கட்டுப் பாடு
binnacle *(n)* : box on deck in which ship's compass is kept, கப்பலில் திசை காட்டும் கருவி வைக்கப் பட்டுள்ள பெட்டகம்
binoculars *(adj)* : an optical device having two eye pieces, இரு கண் தொலை நோக்காடி
biography *(n)* : life history of a person written by another person, வாழ்க்கை வரலாறு
biology *(n)* : the science of living things, உயிரியல்
biped *(n)* : an animal with two legs, இரண்டு கால் விலங்கு
birch *(n)* : a kind of tree, ஒரு வகை பர்ச்சு மரம்
bird *(n)* : a feathered animal with wings, பறவை
birth *(n)* : being born, origin, beginning of anything, பிறப்பு, தோற்றம், தொடக்கம்
birth day *(n)* : the day on which one is born, yearly celebration of the day, பிறந்த நாள்
birth right *(n)* : any claim or right to which one person is entitled by birth, பிறப்புரிமை
bisect *(v)* : cut into two equal parts, இரு சம பகுதிகளாகப் பிரி, இரு சம கூறாக்கு
bishop *(adj)* : a Christian priest of high rank, கிறித்துவ மதத்தலை மைப் பாதிரியார்
bison *(n)* : a variety of wild ox, ஒரு வகைக் காட்டெருது
bit *(n)* : a small piece, mouth piece of bridle, a tool used for making round holes; *(v)* : past tense and past participle of bite, சிறு துண்டு, கடிவாளத் தின் ஒரு பகுதி, வெட்டிரும்பு, 'bite' என்பதன் இறந்தகால, இறந்தகால முடிவெச்சம்
bite *(v)* : to seize and chop with teeth, கவ்வு, கடி
bitter *(v)* : having an unpleasant taste, கசப்பான, துன்பம் தருகிற
bivouac *(n)* : temporary encampment without tents or other cover, வான வெளியாக உள்ள இடத்தில் தற்காலிகமாகத் தங்குதல்
bizarre *(adj)* : very strange, fantastic, புதுமை வாய்ந்த, இயல்புக்கு மாறான
blab *(v)* : talk foolishly, reveal, let out a secret, உளறு, பிதற்று, வெளியிடு, இரகசியத்தை வெளியிடு
blabber *(n)* : one who talks much, one who leaks out a secret, உளறுபவன், இரகசியத்தை வெளியிடுபவன்
black *(adj)* : of dark colour, கறுப் பான; *(n)* : dark colour without light, கறுப்பு, இருட்டு
black board *(n)* : a black painted smooth board to write on with a chalk, கரும்பலகை
blacken *(v)* : make black, defame, கறுப்பாக்கு, பெயரையும் புகழை யும் மங்கச் செய்
black-guard *(n)* : a wicked person, scoundrel, துன்மார்க்கன், நீசன்
black lead *(n)* : a black mineral, பென்சில் செய்ய உதவும் காரீயம் போன்ற ஒரு வகைக் கரி

black-leg (*n*) : a gambler, one who works when his co-workers are on strike, சூதாடி, கருங்காலி

black-mail (*n*) : extortion of money by threats of exposure or denuncia-tion, மிரட்டிப் பணம் பறித்தல

black-mark (*n*) : a disgraceful mark, களங்கம்

black market (*n*) : illegal buying or selling, கள்ளச் சந்தை, கறுப்புச் சந்தை

black-out (*n*) : darkness formed by putting out all the lights, இருட்டடிப்பு

black sheep (*n*) : one having bad character, scoundrel, குணங் கெட்ட வன், கயவன்

black-smith (*n*) : a person who shapes iron into different articles, கருமான், கொல்லன்

bladder (*n*) : a thin bag, மெல்லிய பை

blade (*n*) : any flat part, the leaf, cutting part of a knife, தட்டைப் பகுதி, இலை, கத்தி போன்ற கருவிகளின் வெட்டும் பகுதி

blame (*n*) : fault, guilt, பழி, குற்றச் சாட்டு; (*v*) : accuse, find fault with, நிந்தனை செய், குற்றஞ்சாட்டு

bland (*adj*) : gentle in manners, mild, ironical, இனிமையான, அடக்க முள்ள, மெதுவான, வஞ்சப் புகழ்ச்சியான

blank (*adj*) : empty, வெற்றிடமான; (*n*) : an empty space, வெற்றிடம், வெறுமை

blanket (*n*) : a covering for beds, துப்பட்டி, போர்வை

blare (*v*) : cry loudly, roar, உரக்கக் கத்து, முழங்கு, எக்காளமிடு; (*n*) : sound of a trumpet, முழக்கம்

blarney (*n*) : flattery, cajoling talk, முகத்துதி, பசப்புரை

blaspheme (*v*) : abuse, ஏசு

blast (*n*) : a gust of wind, an explo-sion, பெருங்காற்று, வெடிப் பொருள்; (*v*) : blow up, கேடு விளைவி

blatant (*adj*) : noisy, too plain, கூச்சல் மிக்க, வெளிப்படையான, மிகத் தெளிவான

blaze (*n*) : a flash of light, bright flames, திடீர் ஒளி, தீக்கொழுந்து, ஒளி வீச்சு; (*v*) : burn brightly, பிரகாச மாய் சுடர் விட்டு எரி

blazon (*v*) : to blaze, to make known, அணி செய், பலரறியச் செய்; (*v*) : coat of arms, மெய்க் கவசம்

bleach (*n*) : make white, வெளிறச் செய், நிறமகற்று

blear (*adj*) : dim sighted, inflamed, மங்கலான, வீங்கிய

bleat (*n*) : the cry of a sheep, calf, etc., a thin cry, ஆட்டின் குரல், கன்றின் குரல், மெல்லிய குரல்

bleb (*n*) : small blister on skin, bubble in water or glass, சிறு கொப்புளம், குமிழி

bleed (*v*) : give out or lose blood, இரத்தப் பெருக்கெடு

blemish (*n*) : stain, defect, flaw, கறை, கோளாறு, குறை; (*v*) : to stain, கறைப்படுத்து

blend (*v*) : mix together, harmonize, கல, ஒன்று சேர்; (*n*) : a mixture, கலவை, இணைவு

bless (*v*) : bring good to, invoke God's favour upon, praise, நன்மை செய், கடவுளருளை வேண்டு, வாழ்த்து, போற்று

blessed (*adj*) : happy, prosperous, மகிழ்ச்சியான, புனிதமான, போற்றுதலுக்குரிய

blessing *(n)* : a prayer or wish, a good or desirable thing, வேண்டுதல், வழிபாடு, வாழ்த்து, நன்மை தரும் செயல்

blew *(v)* : past tense of blow, 'blow' என்பதன் இறந்தகால வடிவம்

blight *(n)* : a disease in plants, anything that ruins, செடிகளில் ஏற்படும் ஒரு வகை நோய், அழிக்கும் காரணி; *(v)* : destroy, நாசம் செய், அழி

blind *(adj)* : without eye sight, குருடான, பார்வையற்ற; *(v)* : make blind, குருடாக்கு, ஏமாற்று; *(n)* : a window shutter, சன்னல் தட்டி

blindfold *(adj)* : having the eyes covered so as not to see, கண்கள் கட்டப்பட்ட

blindly *(adv)* : recklessly, without question, கண்மூடித்தனமாக, மறு பேச்சில்லாமல்

blind-man's buff *(n)* : a game in which a player with his eyes covered tries to catch others, கண்ணாமூச்சி விளையாட்டு

blink *(v)* : shine shakily, wink, see with the eyes half-closed, கண்சிமிட்டு, இமை, அரைக் கண்ணால் பார்

bliss *(n)* : perfect happiness, பேரின்பம், பெரு மகிழ்ச்சி

blister *(v)* : cause a swelling or thin boil on the skin with water or air underneath, கொப்புளங்கள் உண்டாக்கு; *(n)* : a swollen injury, கொப்புளம்

blithe *(adj)* : gay, lively, மகிழ்ச்சியான, உவகை மிக்க, சுறுசுறுப்பான

blithering *(adj)* : contemptible, talking without sense, கேவலமான, பொருளின்றிப் பிதற்றும்

blizzard *(n)* : severe storm of wind & snow, பனிச்சூறாவளி

bloat *(v)* : swell, வீங்கு, உப்பு, பெருகு

bloater *(n)* : salted and smoked herring, ஒரு வகை மீன்

blob *(n)* : drop of liquid, small round mass, நீர்மத்துளி, சிறிய உருள் வடிவம்

block *(n)* : a body of supporters, a piece of stone, wood, etc., a large building or group of buildings, obstruction, மரத்துண்டு, கல்துண்டு, கட்டிடத் தொகுதி, தடை; *(v)* : obstruct, stop, தடைநிறுத்து

blockade *(v)* : sorround a fort or a country so as to prevent movement, முற்றுகையிடு, போக்குவரத்தைத் தடை செய், வழியடை; *(n)* : seige, முற்றுகை

blockhead *(n)* : stupid, மரமண்டை, முட்டாள்

blond *(n)* : a person of fair skin and light coloured hair, பொன்னிறமான

blood *(n)* : the red liquid running through the arteries and veins of men and animals, one's parentage, இரத்தம், குடிப்பிறப்பு, மரபு

blood-feud *(n)* : bloody quarrel within the family, குடும்பச் சண்டை

blood-hound *(n)* : a large dog with a keen sense of smell used for tracing, மோப்பம் பிடிக்கும் நாய்

blood-shed *(n)* : the spilling of blood, murder, இரத்தம் சிந்துதல், கொலை

blood-shot *(adj)* : marked with blood, tinged, இரத்தம் தெறிக்கும்

blood-stain *(n)* : mark of blood, இரத்தக்கறை

bloody *(adj)* : cruel, கொடிய

bloom *(n)* : a blossom or flower, பூ, மலர்ச்சி; *(v)* : to blossom, to flower, மலரு

blossom *(n)* : a flower bud, flower; அரும்பு, மலர்; *(v)* : produce flowers, மலரச் செய்

blot *(v)* : remove, absorb, அகற்று, உறிஞ்சு; *(n)* : spot, stain, புள்ளி, கறை, அழுக்கு

blotch *(n)* : an inflamed patch or spot on the skin, mark caused by ink or colour, கொப்புளம், மைக்கறை, வண்ணக்கறை; *(v)* : to mark with blotches, கொப்புளங்களால் நிரப்பு, தழும்பு ஏற்படுத்து

blotting paper *(n)* : a soft fuzzy paper used for absorbing ink, மை ஒற்றும் காகிதம்

blouse *(n)* : a garment reaching upto waist worn by women, ரவிக்கை

blow *(n)* : a stroke, a shock, அடி, அதிர்ச்சி; *(v)* : to drive air upon or into, breathe with difficulty, காற்று ஊது, மூச்சுவிடத் திணறு

blubber *(v)* : weep, the fat of sea animals like whale, விம்மி அழு, திமிங்கலக் கொழுப்பு

bludgeon *(n)* : short, heavy stick, குண்டாண்தடி

blue *(adj)* : of the blúe colour, நீல நிறமான; *(n)* : colour of the sky, ஆகாய நிறம்

blue-print *(n)* : a photographic print on white paper, a sketch plan (usu. building plan), நீல அச்சுப் படிவம்

bluff *(adj)* : blustering, rough, steep, out-spoken, முழுப் பொய் கூறி ஏமாற்றுகிற, முரட்டுத்தனமான, செங்குத்தான, மனந்திறந்த; *(n)* : boasting, a high steep cliff, வீண் பேச்சு, செங்குத்தான மேடு; *(v)* : deceive, ஏமாற்று

blunder *(n)* : a bad or stupid mistake, பெரும்பிழை, மடத்தனமான தவறு

blunder buss *(n)* : a short hand-gun with a large bore, கைத்துப்பாக்கி

blunt *(adj)* : not sharp, dull, stupid, plain-spoken, மழுங்கிய, மந்தமான, முட்டாள்தனமான, ஒளிவு மறை வின்றிப் பேசுகிற

blur *(n)* : an indistinct state, stain, தெளிவற்ற நிலை, கறை

blurt *(v)* : speak without thinking, உளறிக் கொட்டு

blush *(n)* : a red glow on the face caused by shame or embarassment, நாணம், வெட்கம்; *(v)* : turn red, வெட்கப் படு

bluster *(v)* : to make noise like the roaring of wind or waves, act in boastful way. to bully, be rough or violent, குமுறி எழு, அமளி பண்ணு, தற் புகழ்ச்சி செய், வீறாப்பு பேசு, கடுமையாக இரு, அடித்து நொறுக்கு; *(n)* : noise of violent wind or waves, boastful language, கொந்தளிப்பு தற்புகழ்ச்சி மொழி, வீறாப்பு

boa *(n)* : a kind of large non-poisonous snake which kills its prey by compressing it, a long scarf, மலைப்பாம்பு, கழுத்துச் சுற்றாடை

boar *(n)* : a male wild or domestic pig, ஆண் பன்றி, ஆண் காட்டுப் பன்றி

board *(n)* : a stiff flat strip of timber, food, dining table, a group of persons appointed to look after the business matters of an organization, பலகை, உணவு, உணவு மேசை, குழு

boarder *(n)* : one who receives food from a boarding house, விடுதியில் உணவு உண்பவர்

boarding house *(n)* : a building where food is served to customers, உணவு விடுதி, உணவகம்

boast *(v)* : speak too much about oneself, தற்பெருமை கொள்; *(n)* : something said in such a manner, வீண் பெருமையடித்தல்

boat *(n)* : a small open vessel for travelling on water, படகு, ஓடம்

boatswain *(n)* : an officer who is in charge of a ship's rigging, flags, etc., கப்பல் பாய்மர அலுவலர்

bobbin *(n)* : a small piece of wooden or metal cylinder or roller for holding thread or wire, நூல் உருளை, கம்பியிழை உருளை

bode *(v)* : signify, foretell, குறிப்பிடு, குறி சொல்

bodkin *(n)* : a small dagger, a large pointless thick needle, குறு வாள், கூர் முனையற்ற பெரிய தடித்த ஊசி

body *(n)* : the whole frame of a person or animal, a large mass of people, a collection of anything, a dead person or animal, an inner wear, உடல், குழு, தொகுதி, திரள், பிணம், உள் சட்டை

bodyguard *(n)* : an escort who goes about with a person to protect him from any attack, மெய்க்காவலர், மெய்க்காப்பாளர்

bog *(n)* : a soft wet ground,a marsh, சதுப்பு நிலம், சகதி, சேற்று நிலம்

bogey, bogie *(n)* : a trolly, an under-carriage with many wheel-pairs, a railway carriage, கூண்டில்லாத சரக்கு வண்டி, தாழ்வான இரண்டுக்கு மேற்பட்ட சக்கரங்களையுடைய சரக்கு வண்டி, இரயில் வண்டிப்பெட்டி

boggle *(v)* : hesitate., start with shyness, தயங்கு, வெட்கத்தால் தடுமாறு

bogus *(adj)* : false, போலியான

bogy *(n)* : a goblin, bug-bear, an evil spirit, பேயுருவம், பூச்சாண்டி, ஆவியுருவம்

boil *(n)* : an inflamed sore place with pus in it, கொப்புளம், சீழ்க்கட்டி; *(v)* : cook by boiling, கொதிக்க வை

boisterous *(adj)* : violent, stormy, noisily cheerful, கொடிய, கொந்தளிக்கிற, பகட்டாரவாரமான

bold *(adj)* : courageous, daring, clearly seen, துணிவுள்ள, தன்னம்பிக்கையுடைய, தெளிவாகத் தெரிகிற

boldness *(n)* : courage, துணிச்சல்

bole *(n)* : trunk of a tree, அடிமரம்

bolster *(n)* : a long rounded pillow or under-pillow, நீண்ட வட்டமான தலையணை அல்லது திண்டு

bolt *(n)* : a sliding bar used to fasten a door, an arrow, a stroke of lightning, தாழ்ப்பாள், அம்பு, மின்னல்; *(v)* : fasten, rush away suddenly, தாழ்ப்பாள் போடு, கதவடை, தப்பி ஓடு

bomb *(n)* : an explosive container or shell that explodes or blows up, வெடிகுண்டு, எறி குண்டு

bombard *(v)* : attack with explosive shells or bombs, வெடிகுண்டினால் தாக்கு

bombardment *(n)* : an attack with shells or bombs, வெடி குண்டுத் தாக்குதல்

bombastic *(adj)* : high sounding, ஆரவார ஒலியுடைய

bomber *(n)*: a person or an aeroplane dropping bombs, வெடிகுண்டு வீசுபவர், வெடி குண்டு வீசும் விமானம்

bonafide *(adj & adv)* : sincere, in good faith, நேர்மையுள்ள, உண்மையில்

bonafides *(n)* : sincerity, நேர்மை

bonbon *(n)* : a sweet, crackers, தித்திப்புப் பண்டம், பட்டாசு

bond *(n)* : a written or printed promise or agreement, a tie, பத்திரம், வாக்குறுதிச் சீட்டு, ஒப்பந்தச் சீட்டு, பிணைப்பு

bondage *(n)* : slavery, அடிமைத்தனம், கட்டுப்பாடு

bone *(n)*: a hard stiff substance forming the skeleton of an animal, எலும்பு

bonfire *(n)* : a big outdoor fire, கொக்கப்பனை, விழாப் பந்தம்

bonnet *(n)* : a close-fitting hat worn by a woman, பெண்கள் அணியும் தொப்பி

bonny *(adj)* : beautiful, அழகான

bonus *(n)* : a gift or money paid to workmen in addition to the amount earned, மிகை ஊதியம்

booby *(n)* : a stupid fellow, a bird of the pelican family, முட்டாள், கடல் வகை பறவை

book *(n)* : a collection of sheets or papers fastened together within a cover, நூல்; *(v)* : order before hand, முன்னேற்பாடு செய்

book-keeping *(n)* : art of maintaining accounts, கணக்கு வைப்பியல்

booklet *(n)* : a small book, சிறு நூல்

bookstall *(n)* : a show room where books are kept for sale, புத்தக விற்பனை நிலையம்

boom *(n)* : a loud sound, a sudden increase in price, அதிரொலி, திடீர் விலையேற்றம்; *(v)* : roar, கூச்சலிடு

boomerang *(n)* : Australian curved hard wood missile used in hunting (if it fails to hit anything, it returns to the thrower) ஆஸ்திரேலியப் பழங்குடியினருக்குரிய (குறி தப்பி விட்டால் எறிந்தவனிடமே திரும்பி வரும்) வளைதடி

boon *(n)* : a gift, blessing, பரிசு, அருட்பேறு

boor *(n)* : rough, one without good manners, முரடன், நாகரீகமற்றவன்

boot *(n)* : a covering for the foot and leg, காலணி

booth *(n)* : a cabinet, a covered stall, சாவடி

booty *(n)* : profit taken in war or by force, போரில் அல்லது வன்முறையில் கைப்பற்றபபட்ட செல்வம்

border *(n)* : a margin, an outer edge, a boundary, ஓரம், வரம்பு, எல்லை; *(v)* : be next, adjoin, அணுகு, அடுத்திரு

bore *(n)* : a hole, hollow of gun-tube, a small deep hole made in the ground to get water, nuisance, high tide wave, துளை, துப்பாக்கித் துவாரம், தண்ணீருக்காக நிலத்தில் தோண்டப்படும் ஆழமான சிறிய துளை, தொந்தரவு, பேரலை; *(v)* : drill, make one lose interest by tedious talk or dullness, past tense of bear, துளையிடு, பேசிச் சலிப்படையச் செய், 'bear' என்பதன் இறந்த கால வடிவம்

boreas *(n)* : the north wind, god of the north wind, வட காற்று, வட காற்றுக்குரிய கடவுள்

borne *(v)* : past participle of bear, 'bear' என்பதன் முடிவெச்சம்

borough *(n)* : a municipal town, நகராட்சிக்குட்பட்ட ஊர்

borrow *(v)* : obtain from the owner on loan, கடன் வாங்கு

borzoi *(n)* : Russian wolf-hound with a long haired coat, நீளமான மயிருடைய ஒரு வகை வேட்டை நாய்

bosh *(n)* : nonsense, foolisn talk, முட்டாள்தனமான பேச்சு, பொருளற்ற பேச்சு

bosom *(n)* : the chest, மார்பு, உள்ளம்; *(adj)* : intimate, நெருக்கமான, நம்பகமான

boss *(n)* : a leader or master who directs others, round knob, தலைவர், பணி முதல்வர், குமிழ்

botany *(n)* : a branch of science which deals with the plants, தாவரவியல்

botch *(n)* : a clumsy work, அரை குறை வேலை; *(v)* : repair clumsily, to do badly. அரை குறையாகப் பழுது பார், மோசமாகச் செய்

both *(pro & conj)* : the two, the one and the other, இருவர், இரண்டும்

bother *(v)* : annoy, make trouble கவலை உண்டாக்கு, தொல்லைப் படுத்து

bothie, bothy *(n)* : cottage, one roomed house jn which workers are lodged, குடிசை, தொழிலாளர்கள் தங்கும் ஒற்றை அறை

bottle *(n)* : a narrow necked glass container for holding liquids, bundle of hay or straw, a kind of plant, புட்டி, வைக்கோல் கட்டு, புல் கட்டு, ஒரு வகைச் செடி; *(v)* : to put in a bottle, புட்டியில் ஊற்று

bottle gourd *(n)* : a climbing plant, சுரைக்காய்

bottom *(n)* : the lowest part, base, கீழ்ப்பாகம், அடி; *(adj)* : lowest. last, மிகத் தாழ்ந்த, கடைசியான

boudoir *(n)* : a woman's srnall private room, பெண்மணியின் சிறு தனி அறை

bough *(n)* : a branch of a tree, மரக் கிளை

bought *(pt & pp)* : past tense and past participle of buy, 'buy' என்பதன் இறந்த கால, இறந்த கால முடிவெச்சம்

boulder *(n)* : a big rock surrounded by water, தொங்கல் பாறை

bounce *(n)* : a jump, springy movement, துள்ளல், வில் சுருள் போன்று சென்று மீளும் தன்மை; *(v)* : jump, குதித்து ஓடு

bound *(n)* : border, limit, வரம்பு, எல்லை; *(v)* : leap, make an end of, past tense and past participle of bind, குதி, கட்டுப்படுத்து, வரம்பிடு, 'bind' என்பதன் இறந்தகால, இறந்த முடிவெச்ச வடிவம; *(adj)* : ready to go, புறப்படத் தயாராக உள்ள

boundary *(n)* : limit, line marking the border, வரம்பு, எல்லைக் கோடு

bounder *(adj)* : under obligation கடமைப்பட்ட

bounteous *(adj)* : beneficial, plentiful நலம் பயக்கும், ஏராளமான

bounty *(n)* : liberality, generosity, munificence, தாராளம், பெருந் தன்மை, வள்ளல் தன்மை

bouquet *(n)* : a bunch of flowers, perfume of special wines, பூச்செண்டு, முந்திரிப் பழ மதுவின் நறுமணம்

bourgeois (*n*) : a citizen, a person owning property, a merchant, or shopkeeper, குடிமகன், நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவன், வணிகன், கடைக்காரன்

bout (*n*) : a fight or trial of strength, fit of drinking or illness, a session in fight, வலிமைப் போட்டி, குடி மயக்கம், நோய் மயக்கம், மற் போர்

bovine (*adj*) : of or like an ass, dull, stupid, எருது, கழுதை, இனங் களுக்குரிய, அவை போன்ற, மந்த அறிவுள்ள

bow (*v*) : bend down as a sign of respect, to give in, தலை வணங்கு, உட் படு; (*n*) : a weapon for shooting arrows made from a strip of elastic wood bent by a string, a rod used with some musical instruments like violin, a knot with a loop, bending of the head as a sign of respect, வில், நரம்பிசைக் கருவியை வாசிக்கப் பயன்படும் நீள் கருவி, வளைவான முடிச்சு, தலை தாழ்த்தல்

bowels (*n*) : the intestines, inside part, குடல், உட்பகுதி

bower (*n*) : a shady place in the garden, a private apartment, a large anchor, கொடிப் பந்தல், கோடை இல் லம், கப்பல் நங்கூரம்

bowl (*n*) : a concave vessel for kitchen use, கிண்ணம்; (*v*) : throw the ball, பந்தெறி

bowsprit (*n*) : a strong span running out from ships' stem to which ropes are fastened, கப்பலில் கயிறுகளைக் கட்டப் பயன்படும் முன்புற மரச் சட்டம்

box (*n*) : a case for holding anything, a small shrub, a private section in theatre, பெட்டி, புதர்ச்செடி வகை, சினிமா கொட்டகையின் மூடு இருக்கை; (*v*) : fight with fists, குத்துச் சண்டை இடு

boy (*n*) : a male child, a servant, பையன், பணியாள்

boycott (*v*) : to combine together in refusing to associate with, கூட்டு மறுப்பு.

brace (*n*) : anything that tightens and unites together, a pair or couple, a revolving tool for boring, (*pl*) straps for holding up the trousers, ropes attached to yard for the masts of a ship, a kind of bracket { } பிணைப்பு, இணை, திருப்புளி, காற்சட்டையின் தோள் பட்டைகள், பாய்மரக் குறுக்குக் கட்டைகளைக் கட்டும் கயிறுகள், ஒரு வகை அடைப்புக்குறி { }

bracelet (*n*) : an ornament worn around the wrist, கடகம்

bracket (*n*) : a d-shaped piece of metal fastened to a wall as a support, a mark, தாங்கி, அடைப்புக்குறி

brad (*n*) : a small nail with no head or a very small head, சிறிய மொட்டை யாணி, சிறிய தலையுள்ள ஆணி

brag (*v*) : to boast, தற்பெருமை அடி, வீண் பெருமை கொள்

braggadocio (*n*) : empty vaunting, one who boasts much, வீண் பெருமை, வீண் பெருமை பேசு பவர்

braggart (*n*) : vain boaster, வீண் பெருமை கொள்பவர்

braid (*n*) : a plait of hair, a cord or band used in arranging the hair, பின் னல், பின்னல் நாடா

braille (*n*) : the system of reading or

writing intended for the blind, குரு டர்ளின் எழுத்து முறை.

brain *(n)* : the enlarged portion of the central nervous system inside the skull for head of vertebrates, the centre of intelligence, மூளை, அறிவு மையம்

braise *(v)* : to stew meat in a covered pan or pot, மூடி போட்ட பாத்திரத்தில் இறைச்சியை வேகவை

brake *(n)* : a device used to slow down or stop the motion of a vehicle, a lever for working machine, வேகத்தடை, பொறியை இயக்கும் நெம்புகோல்

bramble *(n)* : any plant or shrub with thorns, முள் செடி, முள் புதர்ச் செடி

bran *(n)* : the husk, the outer covering of cereals, உமி

branch *(n)* : a stem or arm like limb of a tree, an office or agency belonging to a bigger one, மரக்கிளை, கிளை அலுவலகம்

brand *(n)* : a burning stick of wood, a mark burned with hot iron, mark of disgrace, a disease of plants, a trade mark of a particular kind or make, கொள்ளிக் கட்டை, சூட்டுத் தழும்பு, இழிவுச் சின்னம், பயிர் வெப்ப நோய், தொழிற் சின்னம்

brandish *(v)* : wave, ஆட்டு, சுழற்று

brand-new *(adj)* : quite new, fresh, புத்தம் புதிய

brandy *(n)* : an alcoholic liquor, ஒரு வகைச் சாராயம்

brass *(n)* : an alloy of copper and zinc, பித்தளை

brat *(n)* : a child, an apron, குழந்தை, தூசாடை

bravado *(n)* : a show of boldness or courage, a boastful threat, போலித் துணிச்சல், போலி வீரம், பகட்டாரவாரம்

brave *(adj)* : bold, courageous, splendid, துணிச்சலான, வீரமுடைய, சிறந்த; *(v)* : face with courage, துணிச்சலோடு சமாளி

bravery *(n)* : courage, heroism, துணிவு, வீரம்

bravo *(interj)* : well done, good, ஆகா, நல்லது; *(n)* : a hired murderer, daring villain, கொலையாள், துணிவுமிக்க கயவன்

brawl *(n)* : noisy quarrel, கூச்சலுடன் கூடிய சண்டை; *(v)* : fight, quarrel noisily, சண்டை போடு, சச்சரவு செய்

brawn *(n)* : flesh, firm muscle, தசை, தசைநார்

brawny *(adj)* : strong, வலுவுள்ள

bray *(n)* : the cry of an ass, any loud harsh cry, கழுதையின் கனைப்பு, உரத்த சத்தம்; *(v)* : make a loud cry as an ass, to sound loud, கழுதை போலக் கத்து, பேரொலி எழுப்பு

brazier *(n)* : one who works in brass, கன்னான்

breach *(n)* : a break, a gap, violation of duty, breaking of a law, a quarrel, உடைப்பு, இடைவெளி, பிளவு, கடமை தவறுதல், சட்டத்தை மீறுதல்; *(v)* : to break through, பிளவுண்டாக்கு, உடைப்பு ஏற்படுத்து

bread *(n)* : food made of flour, food in general, ரொட்டி, உணவு

bread fruit *(n)* : the fruit of a tree which resembles bread when baked, ஒரு வகை பலாக்காய்

breadth *(n)* : width, distance from side to side, distance across, அகலம்

break *(v)* : to separate into pieces, crack, discontinue, உடை, பிள, இடையே வெட்டு; *(n)* : fracture, முறிவு

breaker *(n)* : a wave that breaks the rocks of the shore, அலை

breakfast *(n)* : first meal of the day, காலைச் சிற்றுண்டி

bream (n) : yellowish fresh-water fish, நல்ல நீரில் வாழும் மஞ்சள் நிறமுடைய ஒரு வகை மீன்

breast *(n)* : upper part of the body from neck to abdomen, chest, நெஞ்சு, மார்பு

breast-plate *(n)* : protective plate for the breast armour, மார்புக் கவசம்

breath *(n)* : the air drawn into and then let out from lungs, a slight breeze, மூச்சு, இளங்காற்று

breathe *(v)* : respire, whisper, மூச்சு விடு, காதுக்குள் சொல்

bred *(v)* : past tense and past participle of 'breed', breed என்பதன் இறந்த கால, இறந்தகால முடிவெச்ச வடிவம்

breeches *(n & pl)* : short trousers, அரைக்கால் சட்டை

breed *(n)* : a kind, sort or race, இனம், மரபு; *(v)* : produce, orginate, give birth to, bring up, உண்டாக்கு, பிள்ளை பெறு, வளரு

breeze *(n)* : a light gentle wind, a disturbance, தென்றல், சிறு கலவரம்

brethren (n) : members of a brotherhood, brothers, உடன் பிறப்பாளர்கள், ஒரு சங்கத்தைச் சேர்ந்தவர்கள்

brevity *(n)* : shortness of duration, conciseness, சுருக்கம், குறுக்கம்

brew *(v)* : to make a liquor, to be gathering, சாராயம் காய்ச்சு, கலந்து உருவாக்கு

briar, brier *(n)* : a wild rose, thorny plant, a healthier plant whose root is used for making tobacco pipes, காட்டு ரோஜா, முட்செடி வகை, புகைக் குழாய் செய்ய பயன்படும் வேரையுடைய புதர்ச் செடி

bribe *(n)* : money or gift given to a person secretly to get him to do something dishonest, லஞ்சம், கைக் கூலி

bribery *(n)* : act of giving or taking bribes, லஞ்ச ஊழல்

bric-a-brac *(n)* : bits of old things, தொல் பொருள்களின் தொகுதி

brick *(n)* : a square piece of burned mud or clay, செங்கல்

brickbat *(n)* : fragment of a brick, செங்கல் துண்டு

bride *(n)* : a woman about to be married or newly married, மணமகள்

bridegroom *(n)* : a man about to be married, மணமகன்

bridge *(n)* : a track or road raised across a river, a platform on a ship, a thin wooden piece holding up strings of violin-like instruments, a card game, பாலம், கப்பல் மேடை, நரம்பிசை கருவிகளில் உள்ள மரத்துண்டு, ஒரு வகைச் சீட்டாட்டம்

bridle *(n)* : the straps fitted on a horse's head, கடிவாளம்; *(v)* : restrain, put on bridle. அடக்கு, கடிவாளம் பூட்டு

brief *(n)* : a short statement of anything, சுருக்கம்; *(adj)* : சுருக்கமான

brig *(n)* : two-masted sailing ship with square sails, இரு பாய்மரக் கப்பல்

brigade *(n)* : a large body of troops, படை வகுப்பு

brigadier *(n)* : an officer who commands a brigade, படைப் பிரிவின் தலைவர்

brigand *(n)* : a robber, bandit, திருடன், கொள்ளைக்காரன்

bright *(adj)* : shining, giving much light, joyous, clever, clear, ஒளிரும் ஒளிமிக்க, மகிழ்ச்சியான, அறிவுடைய, தெளிவான

brighten *(v)* : make bright, shed light on, ஒளிரச் செய், ஒளிமிகச் செய்

brilliant *(adj)* : sparkling and shining, very clever, ஒளியுள்ள, மின்னுகிற, அறிவுக் கூர்மையுடைய

brim *(n)* : rim, the top edge, margin, விளிம்பு, ஓரம்; *(v)* : to be full, விளிம்பு வரை பொங்கு, ததும்பு

brimstone *(n)* : sulphur, கந்தகம்

brindled *(adj)* : brownish or grey marked with streaks of another colour, பழுப்பு அல்லது சாம்பல் நிறத்தில் மற்றொரு நிறப் புள்ளிகள் அல்லது வரிகளையுடைய

brine *(n)* : water with salt in it, உப்பு நீர்

bring *(n)* : to carry, எடுத்து வா, கொண்டு வா

brinjal *(n)* : a vegetable, கத்தரிக்காய்

brink *(n)* : the edge or border of a steep place, margin, செங்குத்தான ஓரம், கரை, விளிம்பு

briquette *(n)* : a brick-shaped block of compressed coal dust, அழுத்தப் பட்ட நிலக்கரி தூளிலான செங்கல் வடிவப் பாளம்

brisk *(adj)* : full of life, quick and active, உயிரோட்டமுள்ள, சுறு சுறுப்பான

bristle *(n)* : short rough hair of certain animals, முரட்டு மயிர்

brittle *(adj)* : easily broken, எளிதில் உடையக் கூடிய

broach *(n)* : any pointed instrument for boring and widening holes, கூர் நுனிக்கருவி, துளையிடும் அல்லது துளை விரிவாக்கும் கருவி; *(v)* : open, begin to talk about, suggest for the first-time, expand, to pierce with an instrument, திற, ஆரம்பி, தொடங்கு, வெளியிடு, விரிவாக்கு, துளையிடு

broad *(adj)* : wide, large, பரந்த, விரிந்த, பெரிய

broadcast *(v)* : to scatter freely, send messages by radio, பரப்பு, ஒலி பரப்பு; *(n)* : an audio message sent by radio, ஒலிபரப்பு

broaden *(v)* : make broad, increase the width, அகலமாக்கு

broad side *(n)* : any broad surface, the side of the ship above the water level, அகலமான பரப்பு, கப்பலின் பக்கம்

broad sword *(n)* : a sword with a broad cutting blade, பட்டைக் கத்தி

brocade *(n)* : a fabric with embroidery work, சித்திரப் பூ வேலை செய்யப் பட்ட துணி

broc coli *(n)* : a variety of cauliflower, ஒரு வகைப் பூக்கோசு

brochure *(n)* : a booklet, a pamphlet, சிறு நூல், துண்டு வெளியீடு

brogue *(n)* : a strong shoe of untanned leather, dialectal accent, esp. the Irish way of speaking English, பதப்படுத்தப்படாத தோலில் செய்யப் பட்ட தடித்த செருப்பு, அயர்லாந்து மொழியினர் பேசும் ஆங்கியச் சொல்லழுத்தம்

broil *(n)* : a noisy quarrel, குழப்பம்;

(v) : cook in fire or under a grill, வெதுப்பு, வாட்டு

broke *(v)* : past tense of break, break, என்பதன் இறந்த கால வடிவம்

broken-hearted *(adj)* : crushed with grief or despair, மனமுடைந்த, உள்ளம் புண்பட்ட

broker *(n)* : one who buys or sells for others on commission, தரகன்

brokerage *(n)* : commission, தரகுக் கூலி

bronchitis *(n)* : an inflammation in the wind pipe, மூச்சுக் குழல் அழல்

bronze *(n)* : an alloy of copper and tin, வெண்கலம்

brooch *(n)* : an ornamental safety pin used for fastening the dress, உடை இணைப்பு ஊசி

brood *(n)* : offsprings of bird at one time, race, ஒரே தடவையில் பொரித்த குஞ்சுகள், இனம், மரபு

brook *(n)* : a small stream, சிற்றாறு, ஓடை; *(v)* : to bear பொறுத்துக் கொள்

broom *(n)* : a stiff sweeping brush, a kind of plant, துடைப்பம், ஒரு செடி வகை

brose *(n)* : a food of oatmeal with boiling milk or water poured on it, கொதிக்கும் நீர் (அ) பால் கலந்த ஒருவகை மாவு உணவு

broth (n) : meat soup with or without vegetables, காய் ரசம்

brother *(n)* : a male born of same parents, a friend, உடன் பிறந்தவன், தோழன்

brotherly *(adj)* : like a brother, உடன் பிறப்பு போன்ற

brought *(v)* : past tense and past participle of 'bring', 'bring', என்பதன் இறந்தகால, இறந்தகால முடிவெச்சம்

brow *(n)* : the arch of hair in the forehead, forehead, edge of a hill, புருவம், நெற்றி, மலை எல்லை

brown *(adj)* : a darkish colour between yellow and red, பழுப்பு நிறம்

browse *(v)* : to feed on tender shoots for the cattle, read just for enjoyment, கால்நடைகளுக்கு இளந் தளிருட்டு, தழையூட்டு, தழை மேய், மேலோட்டமாகப் படி

bruin *(n)* : a name of a bear, ஒரு வகைக் கரடியின் பெயர்

bruise *(v)* : to crush by beating, அடித்து நொறுக்கு; *(n)* : an injury with skin crushed and darkened in colour caused by a blow or fall, இரத்தம் கட்டிக் கன்றிப்போன காயம், ஊமைக்காயம்

brunette *(n)* : woman (one of the white races) with dark skin and brown hair, (வெள்ளையரினத்தில்) கரிய மேனியும் செம்பட்டை நிற மயிரும் உடைய பெண்

brunt *(n)* : the force of an attack or blow, தாக்கும் வேகம்

brush *(n)* : an instrument for removing dust, a small quarrel, a painting instrument, தூசு நீக்கி, சிறு பூசல், தூரிகை; *(v)* : remove dust by sweeping, touch with a brush, தூசு நீக்கு, வண்ணம் பூசு

brusque *(adj)* : rough in manner, முரடான

brutal *(adj)* : cruel, inhuman, unkind, கொடுமையான, மனிதத்தன்மை யற்ற, இரக்கமற்ற

brutality *(n)* : cruelty, inhuman act, கொடுமை, மிருகத்தன்மை

brute *(n)* : an animal, savage, a

stupid, beast-like or cruel person, விலங்கு நாகரீகமற்றவன், முட்டாள் விலங்கு குணமுடைய மனிதன், கொடுமையானவன்; *(adj)* : cruel, animal-like, கொடுமை யான, விலங்கு போன்ற

bubble *(n)* : a bulb of air or gas in a liquid, நீர்க்குமிழி, காற்றுக்குமிழி

buck *(n)* : a male deer, ஆண்மான்; *(v)* : jump up and down, மேலும் கீழுமாகக் குதி

bucket *(n)* : an open vessel with a handle, வாளி

buckle *(n)* : a metal clip for fastening straps, belts, etc., கொக்கி

buckram *(n)* : coarse linen or stiff rough cotton cloth, stiffness, தடித்த லினன் துணி, விறைப்பான முரட்டுப் பருத்தித் துணி, விறைப்பு

bud *(n)* : the first shoot of the flower or leaf, மொட்டு, குருத்து

budge *(v)* : make a little move, stir, சிறிதளவு நகரு, அசை

budgerigar *(n)* : a kind of love birds, காதல் பறவை வகை

budget *(n)* : financial statement, வரவு செலவுத் திட்டம்

buff *(n)* : thick strong velvety leather, a light yellow colour, உறுதியான மெத்தென்ற தோல், வெளிர் மஞ்சள் நிறம்

buffalo *(n)* : a kind of ox, எருமை

buffer *(n)* : a shock absorbing appartaus, an incompetent or foolish fellow, அதிர்ச்சி தாங்கி, அப்பாவி, மந்தபுத்தியுடையவன்

buffet *(n)* : a refreshment room, a blow with the fist, சிற்றுண்டிச் சாலை, முட்டி அடி; *(v)* : hit with the fist, strike against, முட்டியால் அடி, தாக்கு

buffoon *(n)* : a clown, one who acts in a comical way, கோமாளி

bug *(n)* : a blood sucking small insect, மூட்டைப் பூச்சி

bugle *(n)* : a horn with coiled tube, ஊது கொம்பு

build *(n)* : construction, கட்டுமானம்; *(v)* : to construct, put together, கட்டு, சேர்த்து அமை

builder *(n)* : one who builds or designs a building, கட்டிடக் கலைஞர்

building *(n)* : a structure that provides shelter, கட்டிடம்

built *(v)* : past tense and past participle of 'build', 'build', என்பதன் இறந்த கால, இறந்தகால முடிவெச்ச - வடிவம்

bulb *(n)* : an electric light, a thick round root of a particular plant, மின் விளக்கு, வெள்ளைப் பூண்டு

bul bul *(n)* : a bird, ஒருவகைக் குருவி

bulge *(v)* : to swell out, வீங்கு

bulk *(n)* : a large mass, volume, size, the greater part, பேரளவு, பருமன், அளவு, பெரும் பகுதி

bulky *(adj)* : massive, big, பருத்த, பருமனான

bull *(n)* : the male animal of the ox kind, an order from the Pope, எருது, போப்பாண்டவரின் கட்டளை

bulldog *(n)* : a kind of strong courageous dog, ஒரு வகை பெரிய நாய் வகை

bulldozer *(n)* : a powerful tractor used for levelling land and clearing away obstacles, நிலச் சமன் பொறி

bullet *(n)* : a piece of lead that is shot from a gun, துப்பாக்கிக் குண்டு

builetin *(n)* : a short news report, an announcement, a booklet of information, சிறு அறிக்கை, அறிவிப்பு, செய்தி மலர்

bullion *(n)* : gold and silver in bars, பொன், வெள்ளிக் கட்டி

bullock *(n)* : an ox, வண்டிக் காளை

bull's eye *(n)* : a small lantern with a thick piece of glass, a mark in the middle of the target, கனத்த கண்ணாடியையுடைய கை விளக்கு, இலக்கு மையம்

bully *(n)* : one who dominates, quarrelsome, எளியவரை அடக்குபவன், சண்டைக்காரன்

bulrush *(n)* : a kind of tall rush or reed which grows on wet land or in water, ஈரநிலத்தில் (அ) நீரில் வளரும் நீண்ட நாணல் செடி

bulwark *(n)* : military fortification, barricade, கோட்டை கொத்தளம், தடுப்புச் சுவர்

bumble-bee *(n)* : a large kind of bee with a loud hum, ஒரு வகைப் பெரிய வண்டு

bumper *(n)* : a tumbler filled to the brim, a part of motor vehicle, மது நிறைந்த கிண்ணம், முட்டுத் தாங்கி; *(adj)* : full up, big, நிறைந்து வழிகின்ற, பெரிய

bumpkin *(n)* : a country fellow, பட்டிக்காட்டான்

bumptious *(adj)* : self-assertive, fussy, தன்னலமிக்க, இறுமாப்புடைய

bun *(n)* : a kind of sweetened bread, a rounded mass of hair, சிறிய இனிப்பு ரொட்டி வகை, மயிர்ச் சுருள் கற்றை

bunch *(n)* : a group of things tied together or growing together, கொத்து, தொகுதி

bund *(n)* : embankment, அணைக் கட்டு, அணை கரை

bundle *(n)* : a package, a number of things bound together, மூட்டை, கட்டு

bung *(n)* : a large cork or stopper for closing the hole in a barrel, அடைப்பான், பீப்பாயின் துளையடைக்கும் தக்கை; *(v)* : to stop with a bung, தக்கையால் பீப்பாயின் துளையை அடை

bungalow *(n)* : one storey house, ஒற்றை மாடி வீடு

bungle *(n)* : blunder, unskilful performance, பிழை, மோசமான வேலை

bunion *(n)* : a lump or inflamed swelling on the foot, கட்டி, காலில் ஏற்படும் வீக்கம்

bunk *(n)* : sleeping-berth such as that in a ship or train, கப்பல் (அ) ரயில் வண்டியிலுள்ள படுக்கையிடம்

bunkum *(n)* : humbug, nonsense, senseless talk, புரட்டு, பித்தலாட்டம், வீண் பேச்சு

bunny *(n)* : a pet name for rabbit, முயலின் செல்லப்பெயர்

bunting *(n)* : a thin cloth used for making flag and decoratives, sub-family of a bird, கொடி செய்யவும், தோரணம் கட்டவும் பயன்படும் மென் துணி, பறவைக் குடும்ப வகை

buoy *(n)* : a floating marker, something which acts as a float, மிதப்பு அடையாளக் கருவி, மிதவை; *(v)* float, மித

buoyant *(adj)* : floating, cheerful, மிதக்கும், மகிழ்ச்சியுடைய

bur, burr *(n)* : the prickly seed case

or flower bud of certain plants, சில செடிகளின் ஒட்டு முள் விதை புறை, ஒட்டு முள் மலர்

burden *(n)* : a load, a ship's load, something difficult to bear, சுமை, பளு, கப்பலின் சுமை, கடினமான பொறுப்பு

burdensome *(adj)* : heavy, hard to bear, பளுவான, தாங்கமுடியாத

bureau *(n)* : a writing desk, an office or department, மேசை, அலுவலகம், துறை

burette *(n)* : a graduated glass tube for measuring liquids, கள்ளோடி அளவைக் குழல்

burglar *(n)* : one who breaks into a house, shop, etc. to steal, திருடன்

burglary *(n)* : the crime of breaking into the house to steal, கள்ளமிடுதல்

burgle *(v)* : commit theft, கொள்ளை யடி

burial *(n)* : placing the dead body in the grave, புதைத்தல்

burly *(adj)* : big and strong, stout, sturdy பெரிய, உறுதியான, பருத்த, விரிந்த.

burn *(v)* : set on fire, சுடு, எரி; *(n)* : a sore made by fire, தீப்புண், தீக் காயம்

burnish *(v)* : polish by rubbing, தேய்த்து மெருகூட்டு

burnt *(v)* : past tense and past participle of 'burn', 'burn', என்பதன் இறந்தகால, இறந்தகால முடி வெச்ச வடிவம்

burrow *(n)* : a nest or home in the ground made by certain animals, நில வளை, பொந்து

bursar *(n)* : the treasurer in an educational institution, பொருளாளர்

burst *(v)* : to break open, open suddenly, break into many pieces, explode, திடீரென்று வெடி, பல துண்டுகளாக நொறுக்கு, சிதறச் செய்

bury *(v)* : put the dead body into the ground and cover it, forget, புதை, மறந்து விடு

bus *(n)* : a large public vehicle, பெரிய மோட்டார் வண்டி

busby *(n)* : a fur cap worn by mounted soldiers, குதிரை வீரர்கள் அணியும் கம்பளி தொப்பி

bush *(n)* : a low plant with many branches, புதர்

bushel *(n)* : a measure for measuring grains, அளக்கும் பறை, மரக்கால்

bushy *(adj)* : covered with bush, like bush, புதர் மண்டிய, புதர் போன்ற

busily *(adv)* : actively, சுறுசுறுப்பாக

business *(n)* : one's occupation or profession, trade, வேலை, தொழில், வணிகம்

buskin *(n)* : a kind of boot reaching to calf, முழங்கால்வரை போடும் கால் செருப்பு

bust *(n)* : the part of the human body above the waist, இடுப்புக்கு மேல் உள்ள பகுதி

bustard *(n)* : a large swift running bird like the crane, வேகமாக ஓடும் பெரிய கொக்கினப் பறவை

bustle *(v)* : move hurriedly, and noisily, பரபரவென்று இரு, சந்தடி செய்

busy *(adj)* : fully employed, active, வேலையில் முழுகி இருக்கும், சுறு சுறுப்பான

but *(conj)* : still, yet, ஆனாலும், இன்னும்; *(prep)* : except, தவிர; *(adv)* : only, மட்டும்; *(pron)* : that not, இல்லாத; *(v)* : object, மறுப்புக் கூறு; *(n)* : objection, மறுப்பு

butcher *(n)* : one who kills animals and cuts up meat to sell, கசாப்புக் கடைக்காரன்

butler *(n)* : a head male servant, தலைமை ஊழியன்

butt *(n)* : a large barrel, target, thick end, பெரிய பீப்பாய், இலக்கு, தடித்த நுனி

butter *(n)* : the solid fatty substance obtained from cream, வெண்ணெய்

butterfly *(n)* : a winged insect with beautifully coloured wings, வண்ணாத்திப் பூச்சி

butter milk *(n)* : the milk that remains after the butter fat has been taken out from it, மோர்

button *(n)* : knob used as a fastener in clothing, a small round knob of a machine, etc., பொத்தான், குமிழ்

buttress *(n)* : support, supporting wall, ஆதரவு, உதை சுவர்

buxom *(adj)* : good-looking, plump, அழகுள்ள, உருண்டு திரண்ட, கொழு கொழுப்பான

buy *(v)* : purchase, விலைக்கு வாங்கு

buyer *(n)* : a person who buys things, விலை கொடுத்து வாங்குபவர்

buzz *(n)* : a humming noise, ரீங்காரம்

buzzard *(n)* : a bird like falcon, பருந்து வகைப் பறவை

by *(prep)* : near to, at the side of, along, அருகில், பக்கத்தில், வழியாக

bygone *(adj)* : past, நடந்த, சென்று போன

bylane *(n)* : a side lane, குறுக்குச் சந்து

by-pass *(n)* : a diversion, side road, பக்கப் பிரிவு, பக்கப் பாதை; *(v)* : avoid by taking another path, தவிர்த்து வேறு வழியாகச் செல்

by-path *(n)* : indirect path, சுற்று வழி, ஒதுக்கு வழி

byproduct *(n)* : a substance obtained during the manufacture of something else, துணை விளைவுப் பொருள்

byre *(n)* : a cow-house, மாட்டுத் தொழுவம், மாட்டுக் கொட்டில்

by-stander *(n)* : on looker, அருகில் நிற்பவன், பார்ப்பவன்

byword *(n)* : a proverb, a common saying, பழமொழி, வழக்கச் சொல்

C

cab *(n)* : carriage drawn by a horse or a motor, a hired carriage, part of the locomotive for the driver, குதிரை வண்டி, மோட்டார் வண்டி, வாடகை வண்டி, ஓட்டுநர் பகுதி

cabal *(n)* : group of persons secretly united for some private purpose, conspiracy, சதிக் கூட்டம், சதி; *(v)* :

plot, சதி செய்

cabaret *(n)* : entertainmeht provided by a restaurant, உணவு விடுதியில் நடத்தப்படும் கேளிக்கை

cabbage *(n)* : a green vegetable, முட்டைக் கோசு; *(v)* : take dishonestly, திருடு, களவாடு

cabbalistic *(adj)* : having a hidden meaning, மறை பொருள் உடைய

cabin *(n)* : a hut or small house made roughly, a compartment in a ship or aeroplane for the officers or passengers, குடிசை, கப்பல் அல்லது விமான அறை

cabinet *(n)* : a set of shelves or chest of drawers, ministry a chamber, or private room in which officials meet, அடுக்கறை அல்லது இழுப் பறைகள் கொண்ட பெட்டி, அமைச்சர் குழு, அமைச்சரவை

cable *(n)* : a strong rope, an insulated electrical conductor, a telegraphic wire under, water, a message sent by such a wire, உறுதியான கம்பி அல்லது கயிறு, மின் வடம், கடலடித் தந்திக் கம்பி, கடல் வழியாக அனுப்பும் தந்திச் செய்தி; *(v)* : tie fast, send a message by submarine telegraph, இறுக்க மாகக் கட்டு, கடல் வழியாகத் தந்திச் செய்தி அனுப்பு

cabriolet *(n)* : a light carriage drawn by horse, குதிரை வண்டி

cacao *(n)* : a tropical tree from whose seeds cocoa and chocolate are made, கொக்கோ மரம்

cache *(n)* : a secret storehouse for food, treasure, equipments, etc., the stores hidden, உணவுப் பண்டம், பணம், ஆயுதம் போன்றவற்றைப் பதுக்கி வைக்கும் மறைவிடம்; உணவுப் பண்டம், புதையல், ஆயுதம் போன்ற பதுக்கப்பட்ட பொருட்கள்

cachet *(n)* : a seal or distinctive mark, முத்திரை, அடையாளக் குறியீடு

cachinnation *(n)* : laughing immoderately or noisily, பலத்த சிரிப்பு, உரத்த சிரிப்பு, வெடிச் சிரிப்பு

cackle *(n)* : a shrill sound made by a goose or hen, idle talk, கொக்கரிப்பு வீண் பேச்சு; *(v)* : make a high cracked sound, உரக்கக் கத்து, கொக்கரி

cactus *(n)* : a tropical plant with thorns, கள்ளி முள்ளுச் செடி

cad *(n)* : a low mean fellow or a vulgar person, இழிவானவன், போக்கிரி

cadaverous *(adj)* : like a corpse, deadly pale, பிணம் போன்ற, பிணம் போல் வெளுத்த

caddie *(n)* : one who carnes clubs for golf players, குழிப்பந்தாட்டக் காரரின் உதவியாள்

caddy *(n)* : a small box for holding tea leaves, தேயிலைகளை வைக்கும் சிறு பெட்டி

cadence *(n)* : the fall of the accent at the end of the sentence, intonation of the sounds in speaking, வாக்கி யத்தின் முடிவில் குரலில் ஏற்படும் தளர்வு இறக்கம், பேச்சொழுக்கின் ஏற்ற இறக்கம்

cadet *(n)* : student of a military school, போர்ப் பயிற்சி பள்ளி மாணவன்

cadge *(v)* : peddle, try to get by begging, சில்லறை விற்பனை செய், இரந்து பெறு

cafe *(n)* : a restaurant, சிற்றுண்டிச் சாலை

caffeine *(n)* : a chemical compound, a drug, ஒரு இரசாயனச் சேர்மம், வெறியம்

cage *(n)* : a room or space with open work of wires or bars for birds and animals, any lock up, பறவைக் கூண்டு, சிறை

cain *(n)* : murderer, கொலைகாரன்

cairn *(n)* : a heap of stones, a heap of stones set up as a memorial, கற்குவியல், கற்குவியலாக அமைந்த நினைவுச் சின்னம்

caisson *(n)* : ammunition chest, large water-tight box or chamber within which work is done under water, போர்த் தடவாளங்கள் வைக்கப் படும் பெட்டி, கடலினடியில் வேலை செய்ய உதவும் நீர்ப்புகா பெட்டி

caitiff *(n)* : a mean fellow, இழிவான வன்

cajole *(v)* : use flattery to cheat, பசப்பு, மருட்டு

cajolery *(n)* : flatter, பசப்புதல், ஏய்த்தல்

cake *(n)* : a food made by mixing flour, milk, egg, etc.,a hardened mass of anything, ஒரு வகை உணவு, கட்டி

calabash *(n)* : a vessel made from the fruit shell, சுரைக் குடுக்கை

calamity *(n)* : misfortune, ruin, adversity, பேரிழப்பு, இடையூறு, துன்பம்

calcareous *(adj)* : containing calcium, சுண்ணாம்பு கலந்த

calcination *(n)* : conversion of metals by burning, நீற்றுதல்

calcium *(adj)* : a soft white metal present in lime, chalk, gypsum, etc., சுண்ணாம்பு கால்சியம்

calculate *(v)* : compute, estimate, think, consider, suppose, கணக்கு போடு, மதிப்பிடு, எண்ணு, கருது, திட்டமிடு

calculation *(n)* : the act of computing, careful thought, an act of probability, கணக்கிடுதல், மதிப்பீடு, கணக்கீடு, கணித்தல்

calendar *(n)* : a chart which shows the year divided into months, weeks, days, etc., நாள் காட்டி; *(v)* : prepare an index, to register in a calendar, பட்டியல் தயாரி, பதிவு செய்

calender *(n)* : a machine for pressing and smoothing cloth or paper, அழுத்தி மெருகிடும் இயந்திரம்

calf *(n)* : the young one of a cow, the fleshy part of the back of the leg that is just below the knee, கன்றுக்குட்டி, பின் கால் சதை

calibre, caliber *(n)* : inside diameter, the quality of mind or character, உள்குறுக்களவு, திறமை, பண்பாற்றல்

calico *(n)* : a cotton cloth, பருத்தித் துணி

calipers *(n)* : an instrument used for measuring thickness of tubes etc., or the calibre of tubes, வட்டமான உருளைகளின் திண்மையையும், குறுக்களவுகளையும் அளக்கும் இடுக்கிமானி

caliph *(n)* : the Mohammedan chief-priest, title once used by the Mohammedan rulers, முகம்மதிய தலைமைக்குரு, கலீபா

calk *(n)* : a sharp iron piece or any plate fixed to the shoe to prevent slipping, வழுக்கி விழாமல் தடுக்க செருப்பிடையில் இணைக்கப்படும்

இரும்புத் தகடு, குதிரை, மாடு போன்றவற்றின் காலில் அடிக்கட் படும் லாடம்

call *(v)* : cry, shout, visit, send for, summon, ask to come, require, designate, கத்து, உரக்கக் கத்து, சந்தி, வரவழை, வேண்டு, பெயரிடு; *(n)* : summon, shout, cry, invitation, short visit, அழைப்பு, கூக்குரல், கூப்பாடு, அழைப் பிதழ், காணச் செல்லுதல்

caller *(adj)* : fresh, புதிதான

calligraphy, caligraphy *(n)* : beautiful handwriting, அழகான கை யெழுத்து

calling *(n)* : shouting to attract attention, a summoning, occupation, profession, கூப்பிடுதல், அழைத்தல், வாழ்க்கைத் தொழில்

Callipers *(n)* : instrument for measuring the diameter of round or cylindrical objects, வட்டம் (அ) உருளை வடிவப் பொருள்களின் குறுக் களவை அளக்கும் கருவி

callous *(adj)* : hardened in feeling, insensible, மரத்துப்போன, உணர்ச்சியில்லாத

callow *(adj)* : not yet teathered, inexperienced, இறக்கை முளைக் காத, அனுபவமற்ற

calm *(n)* : absence of wind, free from disturbance, காற்றசைவின்மை, அமைதி, சஞ்சலமின்மை; *(adj)* : still, peaceful, அசைவற்ற, அமைதி யுடைய; *(v)* : to make peaceful, அமைதிப்படுத்து

calorie *(n)* : unit of heat, வெப்ப அலகு

calorimeter *(n)* : apparatus for measuring heat, கலோரிமானி

calumny *(n)* : defamation, slander, a false accusation, பழிச்சொல், அவதூறு, பொய்க் குற்றச்சாட்டு

calves *(n)* : plural form of calf, கன்றுக்குட்டிகள்

calx *(n)* : chalk, lime, oxide, சுண் ணாம்பு, நீற்றுப் பொருள், சாம்பல்

camber *(n)* : a slight central budge in the middle of the road, a slight upward bend or convexity, தெருவின் நடுவில் அமைந்த மேட்டுப் பகுதி, மேல் வளைவு

cambric *(n)* : a fine white linen fabric, தூய வெள்ளைத் துணி

came *(v)* : past tense of come, 'come' என்பதன் இறந்தகால வடிவம்

camel *(n)* : a large animal with a humped back, ஒட்டகம்

camelopard *(n)* : the giraffe, ஒட்டகச் சிவிங்கி

cameo *(n)* : a gem or precious stone with a rised design so as to show differently coloured layers, the art of so carving, கல்லின் உட்பகுதியிலுள்ள பல்வேறு நிறங்களை எடுத்துக்காட்டும் வண்ணம் புடைப்புருவமாகச் செதுக்கப்பட்ட மணி அல்லது விலையுயர்ந்த கல், அங்ஙனம் செதுக்கும் கலை

camera *(n)* : an apparatus for taking photographs, private room, ஒளிப்படக் கருவி, தனியறை

camomile *(n)* : a sweet smelling bitter herb, நறுமணமுடைய செவ்வந்தி பூவினச் செடி

camouflage *(n)* : something used to hide things so that it will not be

recognized easily, any disguise, கண் மறைப்புப் பொருள், ஏமாற்று வித்தை

camp *(n)* : travellers' rest house, a tent for temporary habitation, கூடாரம், முகாம், பாசறை; *(v)* : encamp, கூடாரமடித்துத் தங்கு

campaign *(n)* : a series of connected military and political actions conducted for a special purpose, போர் நடவடிக்கை, அரசியல் நட வடிக்கை

campanile *(n)* : a bell tower, மணிக் கூண்டு

camphor *(n)* : a white volatile substance that comes from camphor tree, கற்பூரம், சூடம்

campus *(n)* : premises of a school or college, பள்ளிக் கூடத்தின் அல்லது கல்லூரியின் சுற்றுப் புறம், வளாகம்

can *(n)* : a vessel for holding liquids, குவளை; *(v)* : to know how to, to be able, to have the right to, have the strength to, இயலும், முடியும், திறமை பெற்றிரு, தகுதி பெற்றிரு, ஆற்றல் பெற்றிறு

canaan *(n)* : land of promises, இன்ப உலகம்

canal *(n)* : an artificial waterway, any channel, கால்வாய்

canalize *(v)* : to furnish with a waterway, convert into canal, கால்வாய் வெட்டு, கால்வாயாக்கு

canard *(n)* : an absurd story, a false rumour, பொய்க் கதை, போலி வதந்தி

canary *(n)* : a yellow coloured song-bird, a kind of wine, மஞ்சள் நிறப் பாடும் பறவை, ஒரு வகை மது

cancel *(v)* : erase, abolish, remove, call off, இல்லாததாக்கு, நீக்கு, ரத்து செய், நிறுத்து

cancellation *(n)* : a defacing, கிறுக்கல், அழித்தல், நீக்குதல்

cancer *(n)* : a malignant tumour, a crab, a group of stars, புற்று நோய், நண்டு, ஒரு நட்சத்திரத் தொகுதி

candelabrum *(n)* : a branched and ornamented candle-stick or lamp stand, பல கிளைகளையுடைய அலங்கார மெழுகுவர்த்தி அல்லது விளக்குத் தாங்கி

candid *(adj)* : frank, unbiased, sincere, ஒளிவு மறைவற்ற, வெளிப்படையான, ஒரு சார் பற்ற, நேர்மையான

candidate *(n)* : an applicant, nominee, விண்ணப்பதாரர், வேட்பாளர்

candidature *(n)* : being a candidate, விண்ணப்பித்தல், கோரிக்கை

candle *(n)* : a stick of wax with a string running through it used for giving light, மெழுகுவர்த்தி

candour *(n)* : frankness, sincerity, கள்ளம் கபட மின்மை, நேர்மை

candy *(n)* : crystalline sugar or mollases, கற்கண்டு

cane *(n)* : stem of large grass-like plant, a walking stick, rod, பிரம்பு, கைத்தடி, கம்பு; *(v)* : punish with a cane, பிரம்படி கொடு

canine *(adj)* : pertaining to dog, நாய்க்குரிய

canister *(n)* : a small box of metal for holding tea, etc., a basket for flowers, fruits, etc., தேயிலை போன்றவற்றை வைக்கப் பயன் படும் தகரப் பெட்டி, பூக்கூடை, பழக்கூடை

cannel *(n)* : bituminous coal, புகை மிகு நிலக்கரி

cannibal *(n)* : human flesh eater, an animal that eats its own breed, மனிதனை உண்ணும் மனிதன், தன்னினம் தின்னும் வ[illegible]ங்கு

cannon *(n)* : a big tubular weapon, பீரங்கி

cannonade *(n)* : an attack with cannon shot, பீரங்கித் தாக்குதல்

canny *(adj)* : skilful, shrewd, clever, careful, quiet, திறமையுடைய, அறிவுக் கூர்மையுடைய, கவன முள்ள, அமைதியான

canoe *(n)* : a light narrow boat plied with oars, துடுப்புகளால் இயக்கப்படும் சிறு படகு

canon *(n)* : a church decree, a rule or law, கிறித்துவக் கோவில் கட்டளை, ஒழுங்கு, சட்டம்

canopy *(n)* : any covering or shelter overhead, an ornamental feature placed over a statue, விதானம், மேற்கட்டுமானம்

cant *(v)* : speak affectedly, tilt, toss, பாசாங்காகப் பேசு, சரி, தூக்கி எறி; *(n)* : talk which is not sincere, words used by a particular group of people, an inclination, பகட்டுரை, குழூஉக்குறி, சாய்வு, *(adj)* : oblique, slanting. சரிவான, சாய்வான

cantaloup *(n)* : a kind of melon, முலாம் பழ வகை

cantankerous *(adj)* : quarrelsome, illnatured, சண்டைக் குணமுடைய, ஏறுமாறான

cantata *(n)* : a story set to music and not acted, கதைப் பாட்டு

canteen *(n)* : a refreshment shop, சிற்றுண்டிச்சாலை

canter *(v)* : to move or ride at an easy gallop, மெல்ல நட, எளிதாகப் பாய்ந்து ஓடு

canticle *(n)* : little song or hymn, சிறுபாடல்

cantilever *(n)* : a large bracket projecting from wall to support heavy parts like balconies, சுவரிலிருந்து நீண்டு நிற்கும் வளைவுச் சட்டம்

canto *(n)* : a division of a book or poem, காண்டம், படலம், செய்யுட்பகுதி

canvas *(n)* : a strong and coarsely woven cloth made of hemp, கித்தான் துணி

canvass *(v)* : scrutinize, go from door to door asking for money, votes, etc., ask for support, ஆராய், வீடு வீடாகச் சென்று வாடிக்கை திரட்டு, ஓட்டு கொடுக்க வேண்டு, ஆதரவு கோரு

canyon *(n)* : a deep narrow valley with steep sides, ஆற்றுக் குடைவு

caoutchouc *(n)* : a kind of rubber, கெட்டிப்படுத்தப்படாத ரப்பர்

cap *(n)* : a small hat, the covering for the top of anything, தொப்பி, குல்லாய், மூடி; *(v)* : cover with cap, தொப்பி அணி, மூடி போட்டு அடை

capability *(n)* : ability, capacity, திறமை, தகுதி

capable *(adj)* : having adequate ability to do, fit or suitable for, qualified, திறமையான, செய்யக் கூடிய, தகுதியுடைய

capacious *(adj)* : spacious, roomy தாராளமான, இடவசதியுள்ள

capacitate *(v)* : enable, make capable, இயலும்படிச் செய், தகுதியுடையவனாகச் செய்

capacity *(n)* : ability, talent, specific position, character, legal qualification, amount or number that can be contained, திறமை, ஆற்றல், செயல் நிலை, பண்பு நலன், சட்டப்படியான தகுதி, கொள்ளளவு

cap-a-pie *(adv)* : from head to foot, தலையிலிருந்து கால் வரை

caparison *(n)* : a decorative wear of an elephant or horse, யானை அல்லது குதிரையின் ஆடையணி

cape *(n)* : a narrow piece of land extending into the sea, a sleevless upper garment, நில முனை, கையற்ற மேற் சட்டை

caper *(n)* : leaping, or jumping, பாய்ச்சல், துள்ளுதல்

capillary *(n)* : any tube with a fine narrow opening (as those connecting the arteries and veins), மயிரிழை போன்ற நுண் குழல், நுண்புழை

capital *(n)* : money or property for carrying on any business, the chief city of a country, a capital letter, முதலீடு, மூலதனம், தலை நகரம், பேரெழுத்து

capitol *(n)* : the upper part of a column or pillar, தூணின் மேல் பகுதி

capitulate *(v)* : surrender, yield, வாய், கீழ்ப்படி, தலை வணங்கு, சரணடை

capon *(n)* : a young castrated cock, விதையடித்த சேவல்

caprice *(n)* : sudden unreasonable change of mind, any fanciful idea, சலன புத்தி, கட்டற்ற மனப் பாங்கு, ஏறு மாறான சிந்தனை

capricious *(adj)* : unsteady minded, fanciful, சலனபுத்தியுள்ள, நிலையற்ற

capricorn *(n)* : tenth sign of the zodiac, மகரராசி

capstan *(n)* : revolving barrel used for winding cables in hoisting an anchor, நங்கூரம் பாய்ச்ச உதவும் கம்பி வடத்தைச் சுற்றியிழுக்கும் சுழல் தண்டு

capsize *(v)* : upset, turn over, கவிழ், குப்புற வீழ்த்து; *(n)* : overturn, கவிழ்த்தல்

capsule *(n)* : the seed case of a plant, a small gelatinous case for holding a dose of medicine, a metallic cap or seal, வித்துறை, உறை மருந்து, உலோக அடைப்பு

captain *(n)* : a chief commander, an army or naval officer, தலைவன், படைத் தலைவன், கப்பல் குழுத் தலைவன்

captaincy *(n)* : the rank of a captain, தலைமை

caption *(n)* : legal arrest, a heading or title, சட்டப்படிச் சிறைப் படுத்துதல், தலைப்பு

captivate *(v)* : to fascinate, கவரு

captive *(n)* : a prisoner, சிறைப் பட்டவர், பிடிபட்டவர், சிறைக் கைதி

captivity *(n)* : condition of being a prisoner, சிறைப்பட்ட நிலை

captor *(n)* : one who takes a captive, சிறையெடுப்பவர்

capture *(v)* : seize, arrest, கைப்பற்று, சிறைப்பிடி

car *(n)* : an automobile, மோட்டார் வண்டி

carafe (*n*) : a glass water-bottle for use at the dining table, உணவு மேசை மீது வைக்கப் பயன் படும் நீர்க்குப்பி

caramel (*n*) : burnt sugar used for colouring and flavouring, a sweet meat, நிறமும் மணமும் ஊட்டப் பயன்படும் தீய்ந்த சர்க்கரை, தித்திப்பு பண்டம்

carat (*n*) : a measure of weight used in weighing precious stones, a measure of the purity of gold, விலையுயர்ந்த கற்களை அளக்கும் எடை அலகு, பொன்னின் மாற்றை அளக்கும் ஒரு அளவு

caravan (*n*) : a group of travellers, a van, பயணிகள் குழு, ஊர்தி

carbine (*n*) : a light short gun, சிறிய கைத்துப்பாக்கி

carbon (*n*) : a non metallic element like charcoal, கரிமம்

carbuncle (*n*) : a tumour, a variety of red gem, பிளவை, மாணிக்கம்

carburetter, carburettor (*n*) : a part of an internal combustion engine in which petrol and air are mixed, உள்ளெரி எந்திரத்தில் பெட்ரோலும் காற்றும் கலக்க பயன்படும் கருவி

carcase, carcass (*n*) : dead body of an animal, விலங்கின் பிணம்

card (*n*) : a piece of thick paper, a machine for combing wool, etc., அட்டை, கம்பளி, சணல், முதலியவற்றில் சிக்கெடுக்கும் சிக்குவாரி

cardamom (*n*) : a spice, ஏலக்காய்

cardboard (*n*) : a heavy paste-board, அட்டைப்பலகை

cardiac (*adj & n*) : pertaining to heart, இதயம் சார்ந்த

cardigan (*n*) : a knitted jacket, பின்னப்பட்ட கம்பளி மேல் சட்டை

cardinal (*adj*) : important, chief, fundamental, முக்கியமான, முதன்மையான, அடிப்படையான

care (*v & n*) : charge, anxiety, attention, caution, management, watchfulness, effort, love, கவனிப்பு, கவலை, கவனம், எச்சரிக்கை, மேற் பார்வை, முன் கருதுதல், முயற்சி, அன்பு

careen (*v*) : turn the ship on her side for repairing, turn on one side, பழுது பார்ப்பதற்காக கப்பலைச் சரித்துப் போடு, பக்கவாட்டில் சாய்ந்திரு

career (*n*) : course, way of living, achievement, profession, போக்கு, வாழ்க்கை நெறி, முன்னேற்றம், தொழில்

careful (*adj*) : anxious, attentive, கவலையுள்ள, கவனமுள்ள, அக்கறையுடைய

caress (*v*) : fondle, embrace, சீராட்டு, கொஞ்சு, அன்பாகத் தழுவு; (*n*) : a gentle affectionate movement, தழுவுதல், கொஞ்சுதல்

caret (*n*) : the mark ∧ placed below line to point out the place of omission, எழுதியதில் விடு பட்டுப் போனதைச் சேர்க்கும் இடத்தைக் குறிக்கும் ∧ குறி

cargo (*n*) : load carried by a ship, கப்பல் சரக்கு

caricature (*n*) : exaggeration, imitation of a person's voice, behaviour, etc., in order to cause amusement, anything drawn so

as to appear funny, மிகைப் படுத்துல், போலச் செய்தல், கேலிச்சித்திரம்

caries *(n)* : rottenness of teeth or bones, பற் சொத்தை, எலும்பு உள்ளழிவு

carious *(adj)* : decayed, கெட்டுப் போன

cark *(n)* : burden, worry, கவலை

carminative *(n)* : a remedy for flatulence, வாயு மருந்து

carmine *(n)* : a bright red colour made from chochineal insect, ஒரு பூச்சியினின்று எடுக்கப்படும் கடுஞ் சிவப்பு வண்ணப் பொருள்

carnage *(n)* : bloody slaughter, massacre, படுகொலை

carnal *(adj)* : sexual, சிற்றின்பம் சார்ந்த

carnation *(n)* : light pink colour, a flower of that kind, இளஞ் சிவப்பு நிறம், ஒரு வகை இளஞ் சிவப்புப் பூ

carnelian *(n)* : a fine reddish-white stone, இளஞ்சிவப்பு நிறமுள்ள மணிக்கல் வகை

carnival *(n)* : a time for merry making, any festival, கேளிக்கை, திருவிழா

carnivora *(n)* : flesh-eating animals, ஊன் உண்ணிகள்

carol *(n)* : a song of joy, மகிழ்ச்சிப் பாட்டு; *(v)* : sing a song of joy, மகிழ்ச்சியாகப் பாடு

carotid *(adj)* : having to do with the two great arteries carrying blood to head, தலைக்கு இரத்தத்தைக் கொண்டு செல்லும் குருதி நாளத்துக்குரிய

carouse *(v)* : drink freely and be merry, தாராளமாக மதுபானம் அருந்தி மகிழ

carp *(n)* : a kind of food, fish, ஒரு வகை மீன்; *(v)* : to find small errors and faults, குற்றங் குறை காணு

carpenter *(n)* : an artificer who works in wood, மர வேலை செய்யும் தச்சன்

carpet *(n)* : a thick ornamental covering for the floor, கம்பளம், சமுக்காளம்

carpus *(n)* : the wrist, மணிக்கட்டு

carriage *(n)* : a vehicle for carrying, the act of carrying, வண்டி, சுமத்தல்

carrier *(n)* : one who or that which carries, (சுமையைச்) சுமந்து செல்லும் மனிதர், எடுத்துச் செல்லப் பயன்படும் பொருள்

carrion *(n)* : decaying animal flesh, அழுகிய இறைச்சி

carronade *(n)* : a short gun with large mouth, பெருந்துளை யுடைய சிறிய பீரங்கி

carry *(v)* : convey, bear, take from place to place, take by force, எடுத்துச்செல், சுமந்து செல், கொண்டு செல், கைப்பற்று

carrying *(adj)* : conveying, bearing (a child) எடுத்துச் செல்கின்ற, கருத்தரிக்கின்ற

cart *(n)* : a goods wagon, பார வண்டி; *(v)* : carry in a cart, வண்டியில் ஏற்றிச்செல்

cartilage *(n)* : a strong elastic tissue, குருத்தெலும்பு

cartoon *(n)* : a funny and comic drawing, கேலிச்சித்திரம்; *(v)* : draw a cartoon, கேலிச் சித்திரம் வரை

cartoonist (*n*) : one who draws a cartoon, கேலிச் சித்திரம் வரைபவர்

cartridge (*n*) : an explosive charge in a case for a gun, தோட்டா, துப்பாக்கிக் குண்டு

carve (*v*) : engrave, cut into pieces, செதுக்கு, வெட்டித் துண்டாக்கு

cascade (*n*) : waterfall, அருவி

cascara (*n*) : the bark of a tree used in preparing a laxative drug, மலமிளக்கி மருந்தைச் செய்யப் பயன்படும் மரப்பட்டை வகை

case (*n*) : a box, a covering, a holder, a particular event, suit, பெட்டி, உறை, பை, நிகழ்ச்சி, வழக்கு

casement (*n*) : metal or wooden-hinged window-frame, சன்னல் சட்டம்

cash (*n*) : ready money, பணம்; *(v)* : exchange for money, பணமாக்குதல்

cashew (*n*) : a kind of tree giving kidney-shaped nuts, முந்திரி மரம்

cashier (*n*) : treasurer, பொருளாளர்; *(v)* : dismiss from service, வேலை நீக்கம் செய்

cashmere (*n*) : shawl of fine soft wool of Kashmir goats, காஷ்மீர் வெள்ளாட்டின் மயிராலான - மென்மையான காஷ்மீர் கம்பளிச் சால்வை

casino (*n*) : a building with public halls for music, dance, etc., பொதுக் கேளிக்கைக் கூடம்

cask (*n*) : a barrel, பீப்பாய்

casket (*n*) : a small box or chest for holding jewels, நகைப் பெட்டி, பேழை

casque (*n*) : helmet, a cover for the head, தலைக்கவசம்

cassava (*n*) : plant with tuberous roots from which tapioca is got, மரவள்ளிக் கிழங்கு (அல்லது) மரச்சீனிக் கிழங்கு

casserole (*n*) : a heat-proof vessel in which food is cooked, உணவை வேக வைக்கும் பாத்திரம்

cassock (*n*) : a long close robe reaching up to the ankle worn by priests, கிறித்துவப் பாதிரிமார் அணியும் முழங்கால் வரை நீண்ட அங்கி

cassowary (*n*) : a large running bird related to the ostrich, நெருப்புக் கோழி போன்ற வேகமாக ஓடக் கூடிய பறவை

cast (*n*) : a throw, actors in a play, a mould, எறிதல், நடிகர், வார்ப்பு; *(v)* : to throw, form in a mould, எறி, வார்ப்புச்செய்

castanets (*n*) : hollow shells of ivory or hard wood used as an instrument to rattle in time with dancing, காழ் மரம் (அ) தந்தத் தால் செய்யப்பட்ட கைத்தாளக் கட்டை

castaway (*n*) : reprobate, a ship-wrecked person esp. one reaching a strange and lonely place, கைவிடப் பட்டவன், கப்பல் கவிழ்ந்ததால் (அ) உடைந்ததால் ஒரு கரை யோரமாக ஒதுக்கப்பட்டவன்

caste (*n*) : a class or division of society, சாதிப் பிரிவு

castigate (*v*) : punish, scold, தண்டனை கொடு, கண்டி

castigation (*n*) : severe punish-ment, கடுமையான தண்டனை

casting (*n*) : throwing, moulding, எறிதல், வார்ப்பு செய்தல்
cast iron (*n*) : moulded iron, வார்ப்பிரும்பு
castle (*n*) : the house of a prince or noble man, a fortified house, அரண்மனை, அரண்கோட்டை
castor oil (*n*) : an oil extracted from castor seeds, ஆமணக் கெண்ணெய்
casual (*adj*) : accidental, unusual, தற்செயலான
casualty (*n*) : a serious accident, a person injured, தற்செயல் விபத்து, காயம் பட்டவன்
casuarina (*n*) : a kind of tree, சவுக்கு மரம்
cat (*n*) : a small domestic animal, பூனை
cataclysm (*n*) : a great revolution, any sudden change, வெள்ளப் பெருக்கம், பெரும் புரட்சி, திடீர் மாற்றம்
catacomb (*n*) : an underground cemetery for burying the dead, நிலத்தடிக் கல்லறை
catalepsy (*n*) : a nervous disease, மூடுசன்னி
catalogue (*n*) : an orderly list of articles, பட்டியல், அட்டவணை; (*v*) : prepare a list, அட்டவணை தயார்செய்
catapult (*n*) : an ancient weapon with lever and ropes for rolling down heavy stones, a small forked stick and elastic used for firing small stones, பாறைகளை உருட்டித் தள்ளும் பழங்கால விசைப் பொறி, உண்டைவில், கவண்
cataract (*n*) : a great water fall, a disease of the eye, அருவி, கண்படலம், கண்பொறை
catarrh (*n*) : an inflammation of the nose, cold, நீர்த்தடுமல், சளி பிடித்தல்
catastrophe (*n*) : a fatal event, great misfortune, பெருங்கேடு, அழிவு
catcall (*n*) : a shrill whistle, கிரீச் ஒலி
catch (*v*) : seize and hold, grasp, ensnare, entrap, discover, பிடி, கைப்பற்று, தடு; (*n*) பிடித்தல் கண்டுபிடி
catchword (*n*) : a word used so as to catch the attention, கருத்தைக் கவரும் சொல், தூண்டு சொல்
catchy (*n*) : attractive, மனத்தை அல்லது கவனத்தைக் கவருகிற
catechism (*n*) : instruction by questions and answers, list of questions and answers, வினா விடையாகக் கற்பிக்கப்படும் பாடம், வினா விடை வரிசை
category (*n*) : a class or kind, இனம், வகை
cater (*v*) : to provide food or what is required, உணவு வழங்கு, தேவையானவற்றை வழங்கு
caterpillar (*n*) : an insect in its worm-like stage, கம்பளிப் புழு
caterwaul (*v*) : scream like a cat, quarrel like cats, பூனை போல் கிரீச்சென்று ஒலி எழுப்பு, பூனைகள் போல் சண்டையிடு; (*n*) : cat's screaming, பூனையின் அலறல்
catgut (*n*) : cord made from the dried intestines of certain animals, நரம்பிழை

cathedral *(n)* : the main Church, தலைமைக் கிறித்துவக் கோயில்

catherine-wheel *(n)* : a cracker which while burning rotates like a wheel, சுழல் பூவாணம்

cathode *(n)* : negative pole of electric current, எதிர் மின் முனை

catholic *(adj)* : universal, general, broad-minded, பொதுவான, விரிந்த நோக்கமுள்ள, தாராள மனம் படைத்த; *(n)* : a follower of the Roman Catholic Church, ரோமன் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவர்

cat's eye *(n)* : reflector stud placed on highways, a kind of gem, சாலை ஓரங்களில் வைக்கப்பட்டிருக்கும் ஒளி பிரதிபலிப்பு ஆடி, வைடூரியம்

cats-paw *(n)* : a person used as a tool for doing something, a light wind, தீச் செயல்களுக்குக் கருவியாகப் பயன்படுத்தப் பட்டவன், இளங் காற்று

cattle *(n)* : animals that eat grass, ஆடு மாடு போன்ற புல் தின்னும் விலங்குகள்

caucus *(n)* : a private or political party meeting, organisation committee of a political party, கட்சி அமைப்பு, அரசியல் குழு, அரசியல் உட்குழு.

caught *(v)* : past tense and past participle of catch, 'catch' என்பதன் இறந்தகால, இறந்தகால முடிவெச்ச வடிவம்

cauldron, caldron *(n)* : a large hollow vessel used for boiling, கொப்பரை.

cause *(n)* : origin, source, reason, motive, suit, மூலம், ஏது காரணம், செயல் நோக்கம், வழக்கு

causeway *(n)* : a raised road or passage, தரைப்பாலம்

caustic *(adj)* : burning, corrosive, bitter, severe, எரிக்கிற , அரிக்கிற, கடுமையான

cauterise *(v)* : to burn with a caustic substance or with a heated iron to destroy infection, புண்ணைச் சுடு

caution *(n)* : care, warning, கவனம், விழிப்புணர்வு, எச்சரிக்கை; *(v)* : warn, எச்சரிக்கை செய்

cautious *(adj)* : careful, watchful, முன்னெச்சரிக்கையான, விழிப் புடைய, கவனமுள்ள

cavalcade *(n)* : a company of riders procession on horse back, படையணி வகுப்பு, குதிரைப்படை அணி வகுப்பு

cavalier *(n)* : a horse man, an escort, குதிரை வீரன், மெய்க்காப் பாளன்; *(adj)* : haughty, supercilious, உல்லாசமான, வீறாப்பான

cavalry *(n)* : horse-soldiers, குதிரைப் படை

cave *(n)* : a den in the earth, குகை

caveat *(n)* : an objection, process to suspend legal proceedings, a formal notice of warning, மறுப்பு, சட்ட நடவடிக்கைக்குத் தடை, எச்சரிக் கை அறிவிப்பு

cavern *(n)* : a large den or cave, பெரும் பொந்து, பெரிய குகை.

caviar, caviare *(n)* : a kind of food made from the eggs of fish, good thing unappreciated, மீன் முட்டையி னின்று செய்யப்படும் உயர்தர உணவுவகை, மதிக்கப்படாத உயர்ந்த பொருள்

cavil *(n)* : a trivial objection, அற்ப மான எதிர்ப்பு

cavity *(n)* : a hollow space, hole, பொந்து, குழி

பொந்து, குழி

cavy *(n)* : a rodent, கொறிக்கும் விலங்கினம்

caw *(n)* : cry of a crow, காகம் கரையும் ஒலி; *(v)* : cry like a crow, காகம் போல் கரை

cease *(v)* : stop, finish, put an end to, terminate, discontinue, நிறுத்து, முடித்து விடு, முடிவு செய், விட்டு விடு

ceaseless *(adj)* : continuous, without stop, இடைவிடாத, முடிவில்லாத

cedar *(n)* : a kind of big tree belonging to the pine family, தேவதாரு மரம்

cede *(v)* : give up to another, yield, grant, விட்டுக் கொடு, ஒப்படை, இணங்கு

ceiling *(n)* : the overhead surface or inner roof of a room, the top limit of anything, உள் கூரை, அடிக்கூரை, உச்ச வரம்பு

celebrate *(v)* : praise, observe, do honour to, perform with a ceremony, புகழ், போற்று, பாராட்டு, விழாக் கொண்டாடு

celebrated *(adj)* : famous, renowned, புகழ் பெற்ற, பெயர் பெற்ற

celebration *(n)* : performances done in honour of or in commemoration of any event, கொண்டாட்டம், விழா எடுத்தல்

celebrity *(n)* : fame, a well known person, புகழ், புகழ் பெற்றவர்

celerity *(n)* : quickness, swiftness, விரைவு, வேகம்

celery *(n)* : plant whose stem is used as a vegetable, காய்கறியாகப் பயன்படும் வெளிறிய தண்டுகளையுடைய செடி

celestial *(adj)* : heavenly, divine, of the sky, விண்ணுலகத்துக்குரிய, தெய்வீகமான, வானியலான

celibacy *(n)* : the state of living unmarried, திருமணமாகாத நிலை

cell *(n)* : a small private room, a microscopic unit of living matter, unit of an electric battery, cave, சிறு தனியறை, உயிரணு, மின்கலம், குகை

cellar *(n)* : an underground storage for coal, wine, etc., மது, நிலக்கரி போன்றவற்றை சேமித்து வைப்பதற்கான நிலக்கிடங்கு, நிலவறை

cement *(n)* : a kind of mortar, anything such as glue that makes two things stick together, சிமெண்ட், பசை

cemetery *(n)* : burial ground, சுடுகாடு

cenotaph *(n)* : a monument to a person, நினைவுச் சின்னம்.

cense *(v)* : worship with burning incense, ஊதுபத்தி போன்ற நறுமணப் பொருள்களால் தூபமிட்டு வணங்கு

censor *(n)* : an official examiner, auditor, scrutineer, தணிக்கையாளர். ஆராய்பவர். கண்காணிப்பவர், *(v)* : examine, scrutinize, prohibit, cut-out, ஆய்வு செய், குற்றம் கண்டுபிடி, தணிக்கை செய், தடை செய்

censure *(n)* : a scolding, a blame, திட்டு, நிந்தை, பழிப்பு; *(v)* : to blame, திட்டு, நிந்தனை செய், பழி

census *(n)* : an official enumeration of the people in a country, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு

cent *(n)* : one hundred, hundredth part of a dollar, நூறு, நூற்றில் ஒரு

பங்கு, டாலரின் நூறில் ஒரு பங்கு

centaur *(n)* : an imaginary animal-half horse and half man, பாதி குதிரை உருவமும் பாதி மனித உருவமு முள்ள கற்பனை விலங்கு

centenary *(n)* : celebration on the completion of a period of hundred years, நூற்றாண்டு விழா

centime *(n)* : a French coin, the hundredth part of a franc, பிரெஞ்சு நாணயம், ஒரு பிராங்கின் நூற் றில் ஒரு பங்கு

centipede *(n)* : a multifooted crawling, creature, பூரான், நூறுகால் பூச்சி

centre *(n)* : middle, middle point or part, மையம், மையப்புள்ளி, மையப் பகுதி

centrifugal *(adj)* : tending to move away from the centre, மையம் விட்டோடும்

centripetal *(adj)* : tending to move towards the centre, மையம் நோக்கி வரும்

century *(n)* : a hundred, hundred years, நூறு, நூறாண்டு

ceramic *(adj)* : pertaining to the art of pottery, மண்பாண்டக் கலைச் சார்ந்த

cereal *(adj)* : of edible grains, *(n)*: தானியம் வகையைச் சார்ந்த

ceremony *(n)* : a series of formal or solemn actions (performed on important occasions), சமயச் சடங்கு

cerise *(n)* : a light red colour, இளஞ் சிவப்பு நிறம்

certain *(adj)* : sure, not to be doubted, someone (indefinite), உறுதியான, சந்தேகமற்ற, ஏதோ ஒரு, யாரோ ஒரு

certainly *(adv)* : surely, நிச்சயமாக

certainty *(n)* : surety, confidence, உறுதி, உண்மை

certes *(adv)* : certainly, assuredly, நிச்சயமாக, உறுதியாக

certificate *(n)* : a testimonial, a written statement that something has happened or is true, சான்றிதழ் தகுதிச் சான்று, உறுதிச் சீட்டு

certify *(v)* : attest, give a certificate, உண்மையென்று அறிவி, சான் றிதழ் அளி

cess *(n)* : a tax, வரி

cessation *(n)* : a pause, a ceasing, இடை நிறுத்தம், நிறுத்துதல்

cession *(n)* : giving up, surrender, விட்டுக் கொடுத்தல், ஒப் படைத்தல்

cesspool *(n)* : a covered well or pit in which filthy water collects, கழிவு நீர் சாக்கடைக் குழி

chafe *(v)* : to make sore or hot by rubbing, irritate, தேய்த்துப் புண் ணாக்கு, தேய்த்துச் சூடாக்கு, கோபமூட்டு

chafer *(n)* : a kind of beetle, ஒரு வகை வண்டு

chaff *(n)* : the outer covering of the grain, anything left over of no great value, உமி, பதர், பயனற்ற பொருள்

chaffinch *(n)* : a little European song bird, ஐரோப்பாவில் காணப்படும் குயில் போன்ற ஒரு வகைப் பறவை

chagrin *(n)* : great disappointment or annoyance, பெரும் ஏமாற்றம், மன எரிச்சல்

chain *(n)* : a series, an unbroken line

of things, வரிசை, சங்கிலி, தொடர்

chair (*n*) : a seat with legs and a back, a seat of authority, position or professor, நாற்காலி, அதிகார இருக்கை அல்லது பதவி, பேராசிரியர் பதவி, கல்விப் பீடம்

chairman (*n*) : president, தலைவர்

chaise (*n*) : an open carriage drawn by horses, சாரட்டு

chalk (*n*) : a soft white lime stone, சாக்குக் கட்டி.

challenge (*n*) : invitation or call to enter a contest or fight, போட்டிக்கு அழைத்தல், சண்டைக்குக் கூப்பிடுதல், அறை கூவுதல்; (*v*) : invite to a contest, அறை கூவு.

chamber (*n*) : a private room, office of the judge or lawyer; the place where a meeting is held, committee, தனியறை, சட்டமன்றப் பிரிவு, குழுக்கூட்டம் நடைபெறும் இடம், குழு

chameleon (*n*) : a species of lizard whose colour changes according to its background, பச்சோந்தி

chamois (*n*) : a goat-like deer living in the high mountain, its leather, ஆடு போன்ற ஒரு வகை மலை மான், அதன் தோல்

champ (*v*) : to make a chewing action or noise, bite noisily, சப்பு, ஓசையுடன் பல்லால் அரை, பல்லை நற நற வென்று கடி; (*n*) : chewing action, சுவைக்கும் ஓசை

champagne (*n*) : sparkling French wine, பிரெஞ்சு நாட்டு திராட்சை மது வகை

champion (*n*) : the victor in an open competition, a person or team which comes first, a person who argues in support of another, வெற்றி வீரர், வெற்றிக்குழு, பரிந்து பேசுபவன்

chance (*n*) : fortune or luck, opportunity, possibility, unexpected happening or event, யோகம், வாய்ப்பு, நிகழக் கூடியது, தற்செயல் நிகழ்ச்சி, எதிர்பாரா நிகழ்ச்சி, (*v*) : take a risk, happen accidentally, துணிந்து செயலாற்று, தற் செயலாக நிகழ்

chandelier (*n*) : a branched framework hanging from the ceiling for holding lights, சர விளக்கு, கொத்து விளக்கு, தொங்கும் கிளை

chandler (*n*) : a merchant selling candles, oil, soap, etc., எண்ணெய், மெழுகுத்திரி, சோப்பு முதலியன விற்கும் பல சரக்கு வணிகர்

change (*n*) : alteration, variation, money in smaller units, மாற்றம், மாறுதல், சில்லறைக் காசு; (*v*) : alter, exchange, modify, put in the place of, vary, மாற்று, திருத்தி அமை, ஒன்றை மற்றொன்றாக்கு, மாறுபாடு அடை

channel (*n*) : a canal, a groove, a passage, stretch of water joining two seas or rivers, the deeper part of a river, band of frequencies in a transmission set, கால்வாய், கடல் சந்தி, (கூடல்), அழமான நீர்ப்பகுதி, (வானொலி) அலை இடை வெளிப் பகுதி

chant (*v*) : to sing, பாடு, (*n*) : a kind of sacred music, a singing intonation in speech, ஒரு வகை சமயப் பாடல், ராகத்தோடு கூடிய பேச்சு

chaos (*n*) : complete disorder, confusion, ஒழுங்கின்மை, குழப்பம்,

CHA

கலவரம்

chaotic *(n)* : in the state of confusion, completely disordered, குழப்பமான, தாறுமாறான

chap *(n)* : a young person, boy or man, a crack in the skin, a knock, சிறு பையன், மனிதன், தோலில் உண்டாகும் வெடிப்பு, பனி வெடிப்பு, தட்டுதல்; *(v)* : to crack, to split, to knock, பிள, தட்டு.

chapel *(n)* : a place used for Christian worship attached to an institution, palace, prison, etc., கிறித்துவச் சிறு கோவில்

chaperon *(n)* : a lady attendant of a young unmarried woman on social occasions, பொது நிகழ்ச்சிகளுக்குச் செல்லும் இளம் பெண்ணுக்குக் காவலாகச் செல்பவள்

chapfallen *(adj)* : without a lower jaw, dejected, dispirited, மன முடைந்த, சோர்ந்த

chaplain *(n)* : a clergyman attached to an army, navy or air force or to a private family, தனி மத குரு, குடும்பப் புரோகிதன்

chapman *(n)* : a pedlar, ஒவ்வொரிடமாகக் கொண்டு சென்று விற்கும் விற்பனையாளர்

chapter *(n)* : main division of a book, an assembly of monks, a branch of a society, இயல், பாதிரியார் குழுக் கூட்டம், கழகம்

char *(v)* : to burn until turning into black by incomplete combustion, கரியாக்கு

character *(n)* : mental or moral nature, the good qualities of a person, a person in a play, story, film, etc., a letter of the alphabet பண்பு, சிறப்பியல்பு, கதை மாந்தர், எழுத்து

characteristic *(adj)* : typical, peculiar, distinctive, குறிப்பிடத்தக்க, தனிமாதிரியான, சிறப்பான;

charcoal *(n)* : a black carbonaceous substance made by burning wood partly, மரக்கரி, கரிக்கட்டை

charge *(n)* : a load, blame, price, sudden and violent attack, responsibility, the amount of gun powder in a bullet, சுமை, குற்றச் சாட்டு, விலை, தாக்குதல், பொறுப்பு, துப்பாக்கியிலுள்ள மருந்தின் அளவு; *(v)* : to load, fill, accuse, ask a price for, attack, சுமை ஏற்று, நிரப்பு, குற்றம் சாட்டு, விலை பேசு, தாக்கு

charger *(n)* : a large flat dish, war horse, one who or that which charges, தாம்பாளம், போர்க் குதிரை, நிரப்பி

chariot *(n)* : an ancient state coach, தேர், இரதம்

charitable *(adj)* : generous, merciful அறச்சிந்தையுள்ள, இரக்க உள்ளமுடைய

charity *(n)* : alms, kindness, generosity, society or a organisation for helping the poor, கருணை, அறம், அற நிலையம்

charlatan *(n)* : one who pretends to have more knowledge and ability than really he has, போலி அறிஞன், அறிவு அல்லது திறனம உடையவன் போல் நடிப்பவன்

charm *(n)* : magic power, physical or mental beauty, attraction, மந்திர

சத்தி, உடல் அழகு, மன அழகு, கவர்ச்சி; *(v)* : use magic on, please, attract, மந்திரத்தால் வசப்படுத்து, மகிழ்வி, கவரு, மயக்கு

charnel-house *(n)* : a place where dead human bodies or their bones are put, சவக் கிடங்கு, எலும்புக் கிடங்கு

chart *(n)* : a map, a sheet of paper giving information graphically or in a tabular form, விளக்கப் படம், வரை படம், அட்டவணை

charter *(n)* : a written evidence or agreement as a deed, contract, பட்டயம், உரிமைப் பத்திரம், ஒப்பந்தம், *(v)* : hire, grant a privilege to, வாடகைக்கு விடு, தனி உரிமையளி

chary *(adj)* : careful, cautious, sparing, கவனமுடைய, எச்சரிக்கையுள்ள, கஞ்சத்தனமான

chase *(v)* : drive away, run after in order to catch, to hunt, துரத்து, பின் தொடர், வேட்டையாடு; *(n)* : a hunt, hunters collectively, வேட்டை, வேட்டைக்காரர்கள்

chasm *(n)* : a deep wide crack, ஆழமான பெரும் பிளவு

chaste *(adj)* : pure, honest, modest, தூய்மையான, உண்மையான, கற்புடைய

chasten *(v)* : to make humble, to punish in order to correct, refine, அடக்கு, திருத்துவதற்காகத் தண்டனை அளி, தூய்மைப் படுத்து, சீர்ப்படுத்து

chastity *(n)* : sexual purity or virginity, purity, கற்பு, தூய்மை

chastize *(v)* : punish severely by beating or whipping and correct அடித்துத் திருத்து

chat *(n)* : informal talk, familiar speech, அளவளாவுதல், உரையாடல்; *(v)* : to talk idly, வெறுமனே அளவளாவு

chattels *(n)* : articles of movable property, இயங்குடமைப் பொருள், தட்டு முட்டுச் சாமான்

chatter *(v)* : talk rapidly and foolishly, to sound the teeth, அவசரமாகப் பேசு, பிதற்று, பற்களை நறநற வென்று கடி; *(n)* : a rapid and foolish speech, a rattling of the teeth, கடகட வென்று பேசுதல், அர்த்தமற்ற பேச்சு, பற்களை நெறிக்கும் ஓசை

chauffeur *(n)* : a motor car driver, மோட்டார் ஓட்டி

cheap *(adj)* : moderate, of low price, low, poor in quality, மிதமான, மலிவான, இழிந்த, மோசமான

cheapen *(v)* : to make cheap, மலிவாக்கு

cheat *(v)* : deceive, act in a dishonest way, ஏமாற்று, நம்பிக்கைத் துரோகம் செய்; *(n)* : a fraud, one who cheats, ஏமாற்றுபவன், வஞ்சிப்பவன்

check *(n)* : a sudden stoppage, scrutiny, any person or thing that stops or restrains, a position in the game of chess, a pattern of crossed lines forming squares தடை, தணிக்கை, தடுப்புப் பொருள், தடுப்பவர், சதுரங்க ஆட்டத்தில் ஒரு நிலை, கட்டம்; *(v)* : to restrain, compare and examine to make certain of accuracy, interrupt, to make into squares, அடக்கு, சரி பார், தணிக்கை செய், தடுத்து

நிறுத்து, கட்டம் போடு

cheddar *(n)* : a kind of hard cheese, பாலாடைக் கட்டி வகை

cheek *(n)* : the side of the face below the eyes and at the side of the mouth, கன்னம்

cheer *(n)* : a shout of joy or encouragement, joy, food, மகிழ்ச்சி ஆரவாரம், மகிழ்ச்சி, விருந்துணவு; *(v)* : encourage, to comfort, to shout joyfully, ஊக்கமூட்டு, உற்சாகப்படுத்து. மகிழ்ச்சி ஆரவாரம் செய்

cheerful *(adj)* : joyous, gay, pleasant, lively, மகிழ்ச்சியுடைய, இன்பமான, விருப்பமுடைய, சுறுசுறுப்பான

cheese *(n)* : a solid food made from the curd or milk, பாலாடைக் கட்டி

cheetah *(n)* : an animal of the cat family like leopard, சிறுத்தைப் புலி

chef *(n)* : a male head cook, தலைமைச் சமையற்காரன்

chemist *(n)* : one skilled in chemistry, druggist, இரசாயனவியல் அறிஞர், மருந்து தயாரித்து விற்பவர்

cheque *(n)* : a written order for money to a bank, காசோலை

chequer *(n)* : a pattern of coloured squares, a chess board, பலவண்ணக் கட்டங்களுடைய ஒரு அமைப்பு, சதுரங்க ஆட்டப் பலகை

cherish *(v)* : to protect and care with kindness, to keep in the heart, அன்புடன் சீராட்டு, போற்று, நினைவில் பேண்

cheroot *(n)* : a small cigar with both ends open, சுருட்டு

cherry *(n)* : a small round red fruit, the tree that bears it, ஒரு வகைச் சிறிய சிவந்த பழம், இவ்வகைப் பழம் தரும் மரம்

chess *(n)* : a game for two persons played on a chequered board having 64 squares, சதுரங்க விளையாட்டு

chest *(n)* : a large strong box with a cover and drawers in it, the part of the body containing heart and lungs, வலுவுள்ள பெரிய பெட்டகம், நெஞ்சு

chestnut *(n)* : a kind of nut, reddish brown horse, ஒரு வகைக் கொட்டை, பழுப்பு நிறக் குதிரை

chevy, chivvy *(n)* : hunt, a chase வேட்டை, துரத்துதல்

chew *(v)* : cut or grind with the teeth, மெல்லு

chicane *(n)* : a trick, fraud, ஏமாற்று, ஏய்ப்பு, புரட்டு

chicken *(n)* : the young one of a hen, கோழிக் குஞ்சு

chicken-hearted *(adj)* : easily frightened, faint-hearted, cowardly, அச்சமுற்ற, நெஞ்சுரமற்ற, கோழையான

chickenpox *(n)* : a sickness, சின்னம்மை

chicory *(n)* : a plant whose root is roasted and ground to mix with coffee powder, சிக்கரிச் செடி, காப்பித் தூளுடன் கலக்கப் படும் பொடி வகையின் வேர்

chide *(v)* : scold, blame, திட்டு, குற்றங் கூறு

chiding *(n)* : a scolding, திட்டுதல்

chief *(n)* : a leader, head, தலைவன்; *(adj)* : principal, first, தலைமை

யான, முதன்மையான
chieftain (*n*) : any leader, head, தலைவன், முதன்மையானவன்
chiffon (*n*) : a transparent flimsy material, மிக மெல்லியதான துணி.
chilblain (*n*) : a painful swelling on hand and feet caused by cold weather, கடுங்குளிரால் கை கால்களில் ஏற்படும் வீக்கம், சேற்றுப் புண்
child *(n)* : an infant, a young boy or girl, குழந்தை, சிறுவன், சிறுமி
childish *(adj)* : silly, behaving like a child, அற்பத்தனமான, சிறு பிள்ளைத்தனமான
chill *(adj)* : shivering, unpleasantly cold, unemotional, நடுக்குகிற, குளிரான, உணர்ச்சியற்ற; *(n)* : coldness, a shivering feeling, coldness of manners, குளிர், குளிர்ச்சி, உணர்ச்சிக் குறைவு, ஆர்வக்கேடு; *(v)* : make cool, harden by a sudden cooling, discourage, குளிரூட்டு, உறைய வை, ஊக்கம் கெடு
chime (*n*) : the musical sound of bells in harmony, ஒத்திசைக்கும் மணியோசை; *(v)* : to sound in harmony, to strike, ஒத்திசை, மணியடி
chimerical *(adj)* : impracticable, imaginary, baseless, நடைமுறைக் கொவ்வாத, கற்பனையான, ஆதாரமற்ற
chimney *(n)* : a wide glass, a tube round the flame of a lamp, any structure to draw smoke from the fire, விளக்கு சிம்னி, புகை போக்கி
chimpanzee (*n*) : man-like ape, மனிதக் குரங்கு, வாலில்லாக் குரங்கு
chin *(n)* : the lowest part of the face below the mouth, மோவாய்க் கட்டை
china *(n)* : porcelain, பீங்கான்
chinaware *(n)* : articles made of porcelain, பீங்கான் சாமான்
chink *(n)* : a small narrow cleft ringing sound as of coins, sound of glasses striking together, குறுகிய துளை, ஆழமான பிளவு, கலகல வென்ற ஒலி, கலீர் என்ற ஒசை
chip *(n)* : a small piece of wood or vegetable, broken or chopped off, a thin slice of fried vegetable, one of the dried droppings of animals used as fuel, சிறிய துண்டு, வற்றல், வரட்டி
chirp *(v)* : make a sharp shrill cry, கிரீச்சிடு; *(n)* : the sharp shrill sound of a bird or insect, பறவை (அ) பூச்சி இனம் எழுப்பும் கீச்சுக் கீச்சென்ற ஒலி
chisel *(n)* : a cutting tool with a long flat edge, வெட்டுளி; *(v)* : cut and shape with a chisel, வெட்டு, செதுக்கு
chit *(n)* : a short note, a voucher, துண்டுச் சீட்டு, பணக் குறிப்புச் சீட்டு
chivalrous *(adj)* : courteous, bold, magnanimous, வீரமான, துணிச்சலுடைய, பெருந்தன்மையுடைய
chivalry (*n*) : knighthood, brave act, magnanimity, quality of defending the weak, வீர மரபு, வீரச் செயல், பெருந்தன்மை, எளியோரைக் காக்கும் தன்மை
choice *(n)* : things chosen, act, right or possibility of choosing

the best, தேர்ந்தெடுக்கப்பட்டவை, தேர்வு, தேர்வுரிமை, தேர் வாற்றல்; *(adj)* : select, excellent, தெர்ந்தெடுத்த, சிற்ந்த

choir *(n)* : a body of trained singers, the part of the church occupied by the church singers, பாடகர் குழு, கிறித்துவக் கோவிலில் பாடகர் குழுவிற்குரிய பகுதி

choke *(v)* : to stop the breathing of, suffocate, fill up, block, மூச்சடை, மூச்சுத் திணற வை, அடைத்து விடு, தடை செய்; *(n)* : the act of choking, suffocation, a device in the petrol engine, மூச்சுத் தடை, மூச்சுத் திணறல், மூச்சு முட்டு, தடுப்பி

cholera *(n)* : an infectious deadly disease, வாந்தி பேதி

choose *(v)* : pick out and select from a greater number, prefer, decide, ஆராய்ந்து எடு, பொறுக்கிக் கொள், தேர்ந்தெடு, விரும்பு, முடிவு செய்து தேர்ந் தெடு

chop *(v)* : cut into small pieces with a sudden blow, நறுக்கித் துண்டு போடு, துண்டி

chop-sticks *(n)* : two small sticks used by Chinese to bring food to the mouth, சைனர்கள் உணவருந்தப் பயன்படுத்தும் இரு குச்சிகள்

chord *(n)* : the straight line connecting the ends of an arc, the string of a musical instrument, any string-like structure, வில் நாண், இசைக் கருவிகளின் நரம்பு, நரம்பு

chorus *(n)* : a song in which all join, a band of singers, any simultaneous utterance of many people, குழு, இசை, பாடகர் குழு, பலர் சேர்ந்து ஒன்றாகச் சொல் லுதல், பல குரல் பேச்சு

choultry *(n)* : a public rest house, சத்திரம், சாவடி

Christ *(n)* : Jesus, இயேசு நாதர்

christen *(v)* : give a name to, to baptize, இயேசுவின் பெயரால் நாமஞ்சூட்டு, கிறித்துவ சமயத் தில் சேர்த்துக் கொள்

Christian *(n)* : follower of Christ, கிறித்துவச் சமயத்தினன்; *(adj)* : relating to Christianity, கிறித்துவச் சமயச் சார்பான

Christianity *(n)* : the religion of Christ, கிறித்துவச் சமயம்

Christmas *(n)* : an annual celebration of the birth of Christ held on 25th December, ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 25-ம் நாள் கிறித்துவின் பிறந்த நாளைக் கொண்டாடும் (கிறித்துவப் பண்டிகை)

chronic *(adj)* : prolonged, severe, நாட்பட்ட, முற்றிய, கடுமையான

chronicle *(n)* : a record of events in the order of time, annals, கால வரிசையில் தொகுக்கப்பட்ட நிகழ்ச்சித் தொடர்க் குறிப்பு, ஆண்டுக் குறிப்பு

chronological *(adj)* : having to do with the time, arranged in the order of events, கால வரிசையான, கால வரிசைப்படியமைந்த, கால வரிசைப்படுத்தப்பட்ட

chronometer *(n)* : a time measuring instrument, காலக் கணிப்பு மணி, மணிப்பொறி

chubby *(adj)* : round, fat plump, உருண்ட, கொழு கொழுவென்ற, திரட்சியான

chuck *(n)* : a gentle blow under the chin, dismissal, a careless throw, தாடையின் கீழ்ச் செல்லமாகத் தட்டுதல், நீக்கம், அலட்சியமாக எறிதல்; *(v)* : to put gently, throw, தாடையின் கீழ்ச் செல்லமாகத் தட்டு, தூக்கியெறி

chuckle *(n)* : a low laugh with closed mouth, உள்ளுர நகைத்தல்; *(v)* : laugh quietly, உள்ளுரச் சிரி

chum *(n)* : an intimate friend, நெருங்கிய நண்பன்

chunk *(n)* : thick lump cut off, வெட்டப்பட்ட தடிமனான துண்டு

church *(n)* : the public building of worship for Christians, கிறித்துவர் கோயில்

churl *(n)* : a country man, a rough mannered fellow of low birth, நாட்டுப்புறத்தான், பண்பற்றவன், கீழ் மகன், முரடன்

churlisn *(adj)* : rude, ill-bred, முரட்டுத்தனமான, காட்டு மிராண்டித்தனமான, இழிந்த

churn *(n)* : a kind of vessel used for the separation of butter from the curd, தயிர் கடைந்து வெண்ணை யெடுக்கப் பயன்படும் தாழி, தயிர் கடையும் மத்து; *(v)* : to stir or agitate to get butter, தயிர் கடை

cigar *(n)* : a small roll of tobacco leaves for smoking, புகையிலைச் சுருட்டு

cigarette *(n)* : a thin roll of finely cut tobacco, வெண் சுருட்டு, சிகரெட்டு

cinchona *(n)* : a kind of tree from whose bark quinine is obtained, சொய்னா மரம்

cincture *(n)* : girdle, belt, சுற்று வளையம், கச்சை

cinder *(n)* : partly burnt wood or coal, கரல், தணல், கொள்ளிக் கட்டை, தணல் கரி

cipher, cypher *(n)* : figure 0, a person or thing of little value, a secret code of writing, சுழி, மதிப் பில்லாத பொருள், மதிப்பற்ற மனிதன், சங்கேத மொழி அல்லது இரகசியக் குறியீடு

circle *(n)* : a round figure, an association of persons bound together by having the same or similar interests, வட்டம், வளையம், ஒத்த நோக்கத்துடன் ஒன்று சேர்ந்த குழுவினர்

circuit *(n)* : the act of moving round, சுற்றுதல், சுற்று

circuitous *(adj)* : round about, சுற்று வழியான, சுற்று வளைவான

circular *(adj)* : round in shape, வட்ட வடிவமான; *(n)* : a communication in the form of letter sent round to a number of persons, சுற்றறிக்கை

circulate *(v)* : to spread about, to move round, பரப்பு, சுற்றிச் செல்

circumcision *(n)* : religious ceremony of the Jews and Muslims, சுன்னத்து விழா

circumference *(n)* : the boundary line of a circle, distance around something, (வட்டத்தின்) சுற்றளவு

circumlocution *(n)* : a round about way of saying something, சுற்றி வளைத்துப் பேசும் பேச்சு

circumnavigate *(v)* : to travel round in a ship, கப்பலில் சுற்றுப் பயணம் செய்

circumscribe *(v)* : to draw a line around, enclose, limit, restrict, சுற்றிக் கோடு வரை, உட்படுத்து, வரம்பிடு, கட்டுப்படுத்து

circumspect *(adj)* : careful, cautious, looking round watchfully, கவனமுள்ள, எச்சரிக்கையுள்ள, எச்சரிக்கையோடு நாலாபக்கமும் நோக்குகிற

circumstance *(n)* : situation, a condition or stage connected with an event, happening, சந்தர்ப்பம், சூழ்நிலை, நிகழ்ச்சி

circumvent *(v)* : defeat, cheat, to get round, சூழ்ச்சி செய்து வெல், ஏமாற்று, சுற்றிச் செல், வளைத்துக் கொள்

circus *(n)* : a place for the exhibition of physical feats and also a show in which animals perform, மனிதர்களும் விலங்குகளும் பல வேடிக்கை வினோதங்களையும் தீரச் செயல்களையும் செய்து காட்டும் அரங்கம்

cist *(n)* : a pre-historic stone coffin, பழங்காலக் கல்லறை

cistern *(n)* : a large tank for storing water, any natural reservoir, தண்ணீர்த் தொட்டி, தொட்டி

citadel *(n)* : any strong fortress, கோட்டை, அரண்

cite *(v)* : quote, to summon to appear in a law-court, மேற்கோள் காட்டு, மன்றத்திற்கு ஆஜராகுமாறு அழை

citizen *(n)* : a civilian, a person who belongs to a particular country, குடிமகன், ஒரு குறிப்பிட்ட நாட்டைச் சேர்ந்தவன்

citron *(n)* : lemon-like fruit, நார்த்தங்காய்

city *(n)* : a large and important town, borough, மாநகர், தன்னாட்சி உரிமைபெற்ற நகரம்

civet *(n)* : small spotted cat yielding a substance with musk like odour, புனுகுப் பூனை

civic *(adj)* : pertaining to a city, civil, நகர் சார்ந்த, குடியுரிமைக் குரிய

civics *(n)* : the science of government, குடியியல், ஆட்சியியல்

civil *(adj)* : pertaining to citizen, society etc., belonging to private legal rights, polite, குடிமகனுக்குரிய, சமூகத்திற்குரிய, ஒருவனது தனிப்பட்ட சட்ட உரிமைகள் குறித்த, அடக்கமுள்ள

civilian *(n)* : one who is not in the army, one who is a member of the civil administrative service, படைத்துறை சாராத குடிமகன் (அ) அரசு அலுவலர்; *(adj)* : non-military, படைத்துறை சாராத

civility *(n)* : good manners, a civil act or speech, நன்னடத்தை, பண்பு நயம்.

civilization *(n)* : the state of civilizing or being civilized, the standard of social development of a nation or region at a certain period, நாகரீகம் அடைந்துள்ள நிலை, நாட்டு நாகரீகம், மக்கள் பண்பாடு, நாகரீகம்

civilize *(v)* : train and improve persons to a state of civilization, நாகரீகப்படுத்து, பண்படுத்து.

clad *(v)* : past tense and past participle of 'clothe', clothe என்பதன் இறந்த கால, இறந்தகால முற்றெச்ச வடிவம்

claim *(n)* : a right to demand something, உரிமை, உரிமைப் பொருள் *(v)* : to demand on the grounds of right, require உரிமை கொண்டாடு, வேண்டு

claimant *(n)* : petitioner, one who makes legal claim or right, விண்ணப்பதாரர், சட்டப்படி உரிமை பாராட்டுபவர், உரிமையாளர்

clairvoyance *(n)* : power of seeing mentally what is happening out of sight, தொலைவில் நிகழ்வனவற்றை மனஉணர்வால் அறிதல், அகக்கண் கொண்டு நோக்குதல்

clamber *(v)* : to climb with some difficulty, பற்றிப் பிடித்து ஏறு

clamour *(n)* : a great public outcry, loud cry and loud confused noise, கூச்சல், கூப்பாடு, இரைச்சல்

clamp *(n)* : a device for holding things tightly together, பற்றி, இறுக்கி

clan *(n)* : a large family group or tribe under a chief, கூட்டுக் குடும்பம், குலம், இனம்

clandestine *(adj)* : concealed, hidden secret, மறைமுகமான, ஒளிவு மறைவான

clang *(n)* : a loud ringing sound as of a metal, கண கணவென்ற ஒலி *(v)* : ring harshly, கணீரென்று ஒலி எழுப்பு

clank *(n)* : a sharp sound like that made by rattling chain, சங்கிலி ஓசை.

clap *(v)* : strike in a friendly manner, applaud, (நட்போடு) தட்டிக் கொடு. *(n)* : loud explosive noise or crash, இடியோசை, வெடியொலி

claret *(n)* : a kind of wine red in colour, ஒரு வகைச் சிவப்பு மது

clarification *(n)* : making clear, தெளிவுபடுத்துதல்

clarify *(v)* : make clear or understandable, தெளிவுபடுத்து, அறிந்து கொள்ளும்படிச் செய்

clarinet, clarionet *(n)* : a wood wind instrument, மர ஊதுகுழல்

clarion *(n)* : a kind of small trumpet. the sound of trumpet or any sound resembling it, எக்காளம், எக்காள ஒலி, உரத்த ஒலி

clarity *(n)* : clearness, தெளிவு

clash *(n)* : conflict, disagreement, collision, a loud noise like that caused by weapon striking together, சண்டை, கருத்து வேறுபாடு, மோதல், ஆயுதங்கள் ஒன்றோடு ஒன்று மோதுவது போன்ற ஒலி; *(v)* : to collide, to meet in opposition, மோது, சண்டையிடு, முரண்படு

clasp (v) : hold tightly, fasten with a clamp, இறுகப்பற்று, இடுக்கியால் பிடி; *(n)* : fastener, பற்றி

class *(n)* : group, rank, grade, order, division, arrangement, caste system distinction, high rank, வகுப்புவகை, கல்வி வகுப்பு, இனவகுப்பு போன்றவை, திறமைப்படி நிலை, உயர்தரம்; *(v)* : to arrange in some order, assign rank to, வகைப்படுத்து, தரம் பிரி, தரப்படுத்து

classic *(n)* : any great writer or book of excellence, a work of unique merit, புகழ் பெற்ற எழுத்தாளர், அல்லது நூல், தனிச்சிறப்புடைய பணி அல்லது வேலைப்பாடு

classify *(v)* : arrange into classes, வகையாக்கம் செய், இனவாரியாகப் பிரி

clatter *(n)* : a confused rattling noise, noisy talk, பட படவென்ற ஒலி, உரத்த பேச்சு; *(v)* : raise a rattling sound, make short sharp noises repeatedly, கட கட வென்று ஒலி எழுப்பு, இரைச்சல் உண்டாக்கு

clause *(n)* : sentence or part of a sentence, part of contract, வாக்கியம், வாக்கியத்தின் உட்பிரிவு, ஒப்பந்தத்தின் ஒரு கூறு

claw *(n)* : sharp hooked nails of beast or bird, anything sharp or hooked, a device like a claw, விலங்கு அல்லது பறவையின்கூர்வளைவான நகம், கூர்மையான அல்லது வளைந்த பொருள், நகம் போன்று வளைந்த கருவி

clay *(n)* : a kind of stiff earth that can be moulded easily when wet, களிமண்

clean *(adj)* : pure, free from dirt, தூய்மையான, மாசற்ற, தூசியற்ற, அழுக்கற்ற. *(v)* : remove dirt from, தூய்மையாக்கு, மாசகற்று

cleanliness *(n)* : purity, neatness, தூய்மை, துப்புரவு

cleanse *(v)* : make pure, make clean, தூய்மைப் படுத்து, துப்பரவாக்கு

clear *(adj)* : pure, easily understood, free from uncertainty, distinct, குற்றமற்ற, எளிதில் அறிந்துகொள்ளக் கூடிய, வெளிப்படையான, தெளிவான, ஐயத்துக்கு இடமற்ற

clearing *(n)* : the act of removing, land cleared of trees,etc., exchanging of bank cheques, drafts, etc., நீக்குதல், மாற்றுதல், காடு வெட்டி நாடாக்கப்பட்ட நிலப்பகுதி, காசோலை, காசு உண்டி ஆகியவற்றின் கணக்குத் தீர்வு

cleavage *(n)* : a cleft, difference, பிளவு, வேறுபாடு

cleave *(v)* : chop, split, penetrate, join together, வெட்டு, பிள, ஊடுருவு, ஒட்டிக்கொள்

cleft *(n)* : past tense and past participle of cleave, 'cleave' என்பதன் இறந்தகால, இறந்த கால முடிவெச்சம்

clematis *(n)* : a creeping shrub, புதர்க்கொடி

clemency *(n)* : mercy, tenderness, mildness of temper, etc., readiness to forgive, தயவு, கருணை, பொறுமை, இரக்கம், பிழை பொறுக்கும் தன்மை

clench, clinch *(v)* : press or grip together, confirm, rivet a nail, அழுத்திப் பிடி, இறுகப்பற்று, அறுதியிட்டு உறுதி செய், ஆணியை அடித்து இறக்கு; *(n)* : a position of boxing, குத்துச் சண்டையின் ஒரு நிலை

clergy *(n)* : priests of Christian religion, கிறித்துவ மத குரு

clerk *(n)* : an official who looks after the records, letter correspondence and accounts, எழுத்தர்

clever *(adj)* : talent, skilful அறிவுக் கூர்மையுடைய, திறமையுள்ள

cleverness *(n)* : skill, wisdom, திறமை, அறிவுக்கூர்மை

click *(n)* : a slight sharp sound, 'கிளிக்' என்ற ஓசை

client *(n)* : customer, person who gets advice from a lawyer, dependent or follower, வாடிக்கைக் காரன், வழக்கறிஞரின் கட்சிக்

காரன்(அ) சார்ந்திருப்பவன், பின்பற்றுபவன்

cliff *(n)* : a high steep rock, செங்குத்தான பாறை.

climate *(n)* : the weather condition in an area, தட்ப வெட்ப நிலை

climax *(n)* : gradation, top, event of greatest interest, படிப்படியாக உயர்த்துதல், உச்சி, உச்சக்கட்ட நிகழ்ச்சி

climb *(v)* : mount, grow along, ascend, ஏறு, தவழ்ந்து ஏறு, மேலே செல்; *(n)* : act of ascending, ஏறுதல்

climber *(n)* : a climbing plant, a person who climbs, படர் கொடி, ஏறுபவன்

clime *(n)* : a country, the climate it enjoys, நாடு, தட்ப வெட்ப நிலை

cling *(v)* : hold fast to something firm to remain in contact, ஒப்புக் கொள், சேர்ந்து இரு

clinic *(n)* : teaching of medical science at the bed side of the patient, such an institution, மருத்துவப் பயிற்சிசாலை, நோயாளியின் படுக்கை அருகிலேயே மருத்துவத் துறைக்குரிய பயிற்சியளிக்கும் வகுப்பு., மருத்துவ விடுதி, தனி மருத்துவமனை

clink *(v)* : make a ringing sound, கண கண வென்ற ஒலி எழுப்பு

clip *(v)* : cut, make short, hold firmly, வெட்டு, சிறிதாகக் கத்திரி, இறுகப்பிடி; *(n)* : a device for holding things firmly, கௌவி

clique *(n)* : a small exclusive party, a group of persons, கருத்து வேறுபாடு கொண்ட சிறு குழு, சிறு குழுவினா

cloak *(n)* : a loose outer garment, a mask, தளர்மேலாடை, முக்காடு; *(v)* : cover with garment, ஆடையால் மூடு

clock *(n)* : a machine for indicating time, கடிகாரம்

clod *(n)* : a lump of earth, a stupid fellow, mere matter, மண்ணாங் கட்டி, முட்டாள், உயிர்த்தன்மை யற்ற பளுப்பொருள்

clog *(n)* : block of wood, a wooden soled shoe, hindrance, anything that impedes motion, மரக்கட்டை, மர மிதியடி, தடை, முட்டுக் கட்டை; *(v)* : to hinder, தடை போடு

cloister *(n)* : monastery, nunnery, துறவி மடம், கன்னித் துறவி மடம்

close *(v)* : to shut, finish, come nearer, அடை, மூடு, முற்றுவி, பக்கத்தில் நெருங்கு; *(adj)* : narrow, sultry, near, befitting, without space in between, . குறுகிய, புழுக்கமான அண்மையான, பக்கமான, நெருக்கமான, இறுக்கமான, இடைவெளி இல்லாத

closet *(n)* : a small room for storing things, lavatory, சேமிப்பு அறை, தனியறை, கழிப்பிடம்

closure *(n)* : end, move for ending முடிவு, முடிவு கட்டுதல்

clot *(v)* : solidify, coagulate, கெட டிப்படு, உறை; *(n)* : a coagulated mass, half solid lump formed in some liquids, உறைகட்டி, உறைந்த திரவம்

cloth *(n)* : a woven fabric, நெய்யப் பட்ட துணி

jowl *(n)* : cheek, laterality, கன்னம், பக்கவாடு
joy *(n)* : delight, மகிழ்ச்சி
joyous *(adj)* : full of joy, மகிழ்ச்சி நிறைந்த
jubilant *(adj)* : joyous, மகிழ்ச்சியான
jubilation *(n)* : a shouting for joy, மகிழ்ச்சியாரவாரம்
jubilee *(n)* : a time of rejoicing, கொண்டாட்ட நாள்
judge *(n)* : a public officer who passes judgement in law cases, one who decides in a dispute, நீதிபதி, நடுவர்; *(v)* : to hear a case and decide, to form an opinion, வழக்கை விசாரித்துத் தீர்ப்பளி, கருது, திறனாய்வு செய்
judgement *(n)* : judicial decisions, sentence passed, opinion, சட்ட மன்றத் தீர்ப்பு, வழங்கப்பட்ட தண்டனை, திறனாய்வுக் கருத்து
judicature *(n)* : body of judges, administration of justice, நடுவர் குழு, நீதித்துறை ஆட்சி
judicial *(adj)* : pertaining to law, சட்டம் சார்ந்த
judiciary *(n)* : the judges of a state collectively, நடுவர் தொகுதி
judicious *(adj)* : possessing right judgement, sensible, சரியாகத் தீர்ப்பளிக்க வல்ல, நன்கு முடிவு செய்யும் திறமையுள்ள, விவேக முள்ள
jug *(n)* : a deep vessel with handle for holding liquids, கூசா, சாடி
Juggernaut *(n)* : an idol of Lord Krishna under whose chariot devotees sacrifice themselves, கண்ணன் திருவுருவ ஊர்வலத்தில் மக்கள் தம்மைத்தாமே பலியிட்டுக் கொள்ளுதல்
juggle *(v)* : to play conjunng tricks, ஏமாற்று, செப்பிடு வித்தை செய்
jugglery *(n)* : the art of juggling, கண்கட்டு வித்தை, செப்பிடு வித்தை, புரட்டு
jugular veins *(n)* : large veins at the side of the neck, கழுத்தின் பக்க வாட்டுப் பெரு நரம்புகள்
juice *(n)* : liquid part of a fruit, vegetable or animal body, சாறு
jujube *(n)* : edible berry like fruit, a jelled sweetmeat, இலந்தைப் பழம், இனிப்புக் கூழ்ப்பண்டம்
July *(n)* : the seventh month of the English year, ஆங்கில ஆண்டின் ஏழாவது மாதம்
jumble *(v)* : to mix confusedly, to throw together without order, தாறுமாறாகக் கலக்கு, ஒழுங் கின்றிச் சேர்த்து வை, *(n)* : a confused mixture, கூட்டுக் குவியல், தாறுமாறான நிலை
jump *(v)* : to leap, குதி, துள்ளு; *(n)* : a sudden movement, குதிப்பு, துள்ளல்
jumper *(n)* : a blouse, one who or that which jumps, a drilling instrument, மகளிர் மேற்சட்டை, குதிப்பவர், துளை போடும் நெட்டுளி
junction *(n)* : a place or point of joining, சந்திப்பு, கூடல், இணைப்பிடம்
juncture *(n)* : junction, a critical time, கூடுமிடம், இணைவு, திருப்பு முனை

June *(n)* : the sixth month of the English year, ஆங்கில ஆண்டின் ஆறாவது மாதம்

jungle *(n)* : thick forest, அடர்காடு

junior *(adj)* : younger, lower, இளைய, பிந்திய, கீழ் நிலையிலிருக்கிற

juniper *(n)* : an evergreen shrub or its berry, என்றும் பசுமையான ஒரு வகைப் புதர்ச் செடி, அதன் பழம்

junk *(n)* : old ropes, saltmeat, a small Chinese ship, பழங்கயிறுகள், உப்புத் துண்டம், சீனமரக்கலம்

junket *(n)* : a sweetmeat made by mixing curd with cream, a feast, தயிரும் பாலாடையும் சேர்த்து செய்யப்படும் இனிப்புப் பண்டம், விருந்து

Jupiter (n) : king of the Roman gods, a large planet, ரோமானியரின் பெருந் தெய்வம், ஒரு பெரிய கிரகம்

jurisdiction *(n)* : the district within which one has authority, ஆட்சி எல்லை

jurisprudence *(n)* : the science of law, சட்டவியல்

jurist *(n)* : expert in law, சட்ட அறிஞர், சட்டவல்லுநர்

jury *(n)* : a body of people to decide important law cases, தீர்ப்புச் சான்றாளர் குழு

just *(adj)* : right, accurate, reasonable, equitable, நேர்மையான, சரியான, முறை தவறாத, நடுநிலை மாறாத

justice *(n)* : magistrate, right, legality, equity, நீதிபதி, நேர்மை, நீதி, நடுநிலை

justify *(v)* : to prove to be right or just, நேர்மை என்று நிறுவு, உரிமை நிலைநாட்டு

jut *(v)* : to project, துருத்து, உந்து

jute *(n)* : fibre from tne bark of certain plants, சணல்

juvenile *(adj)* : youthful, இளமையான; *(n)* : young man, இளைஞர்

juxtaposition *(n)* : continuity, nearness, அடுத்தடுத்து வைத்தல், அண்மை நிலை

K

kaiser *(n)* : the title of the German emperor, ஜெர்மன் நாட்டுப் பேரரசர்

kala, kail *(n)* : a kind of cabbage, ஒரு வகைக் கோசுக் கீரை

kala-azar *(n)* : a kind of infectious disease, ஒரு வகைக் கொள்ளை நோய்

kaleidoscope *(n)* : an optical top consisting of a tube with a variety of beautiful coloured glass pieces, பல வண்ணம் காட்டும் ஒரு ஒளியியல் விளையாட்டுக் கருவி

kangaroo *(n)* : an Australian animal with very long hind legs and great power of leaping, கங்காரு என்னும் ஆஸ்திரேலிய விலங்கு

kapok *(n)* : soft material obtained from the seeds of a tropical tree, இலவம் பஞ்சு

kauri-pine *(n)* : a forest tree yielding a kind of gum, ஒரு வகை நறுமணப் பிசினைத் தரும் காட்டு மரம்

kedge *(n)* : a small anchor, சிறு நங்கூரம்

keel *(n)* : the lower timber of a ship, கப்பலின் அடிக்கட்டை; *(v)* : turn upside down, கப்பலைக் கவிழ், தலைகீழாக்கு

keen *(adj)* : desirous, alert, sharp, energetic, pungent, ஆர்வமுடைய, விருப்பமுடைய, கூரிய, சுறுசுறுப்பான, காரச் சுவையுடைய

keep *(v)* : retain, to continue, to preserve, observe, வைத்திரு, இழக்காதிரு, கெடாமல் வை, கவனித்துப் பின்பற்று

keeper *(n)* : one who guards, காவல்காரன், பாதுகாப்பவன்

keeping *(n)* : care, agreement, காவல், பராமரிப்பு, இணக்கம், ஒப்புமை

keg *(n)* : a small cask, சிறு பீப்பாய், குட்டுவம்

kelp *(n)* : a sea-weed used for making iodine etc., அயோடின் தயாரிக்கப் பயன்படும் ஒரு வகை கடல் பூண்டு

kelpy/kelpie (n) : a malignant water-spri t haunting fords in the form of a horse; A kind of collie; குதிரை வடிவில் உள்ள கடல்வாழ் துர்தேவதை; ஒருவகை வேட்டை நாய்

ken *(v)* : to cause to know, அறி; *(n)* : range of knowledge, அறிவுப்பரப்பு, அறிவெல்லை

kennel *(n)* : a shelter for dogs, நாய்ப்பட்டி

kept *(v)* : past tense and past participle of keep, 'keep' என்பதன் இறந்தகால, இறந்தகால முடிவெச்ச வடிவம்

kerb *(n)* : the edge of a pavement, நடைபாதை ஓரத்தளம்

kerchief *(n)* : a small piece of cloth used for wiping the face, hands etc., கைக்குட்டை

kernel *(n)* : seed within a shell, the important part of anything, கொட்டை, பருப்பு, மூலப்பகுதி, உருவாக்க மையம்

kerosene *(n)* : coal oil, மண் ணெண்ணெய்

kersey *(n)* : a coarse woollen cloth, ஒரு வகை முரட்டுத் துணி

kestrel *(n)* : a kind of falcon, ஒரு வகைப் பருந்து

ketch *(n)* : a small sailing vessel, சிறு மரக்கலம்

ketchup *(n)* : a flavouring sauce made from mushrooms, tomatoes & other vegetables, காளான்கூட்டு

kettle *(n)* : a vessel for boiling liquids, கொதிகலம்

key *(n & adj)* : an instrument for closing or opening, interpretation , a book containing answer, fundamental, திறவுகோல், சாவி, விளக்கக் குறிப்பு, விடைநூல், அடிப்படை

khaki *(adj)* : dust coloured, காவி நிறமான

khan *(n)* : an Asiatic chief, leader, ஆசியத் தலைவனின் பட்டப் பெயர்

kick *(v)* : to kick with the foot, உதை; *(n)* : a blow with the foot, excitement, power to react, recoil of a

gun, உதை, இளைச்சி, எதிர்ப் பாற்றல், துப்பாக்கியின் எதிர் எறிவு

kid *(n)* : child, a young goat, kid leather, குழந்தை, ஆட்டுக் குட்டி, ஆட்டுக் குட்டியின் தோல்

kidnap *(n)* : to carry off a human being by force, மனிதர்களைக் கடத்திச் செல்லுதல்

kidney *(v & n)* : a pair of glands for secretion of urine, சிறு நீரகம்

kill *(v)* : put to death, கொல், சாகடி

kiln *(n)* : a furnace for baking bricks, சூளை

kilogramme *(n)* : a measure of weight equivalent to 1000 grammes, 1000 கிராமுக்குச் சமமான ஒரு எடையளவை, அலகு

kilometre *(n)* : a measure of length equivalent to 1000 metres, ஆயிரம் மீட்டருக்கு சமமான ஒரு எடை யளவை, அளவு

kin *(n)* : family, relations, குடும் பத்தினர், உறவினர், சுற்றத்தார்

kind *(adj)* : good, generous, benevolent, நல்லெண்ணமுடைய, அன்புடைய, கருணையுள்ள, இரக்கமுள்ள

kindergarten *(n)* : a nursery school, குழந்தைகள் விளையாட்டு முறைக் கல்விப் பள்ளி

kindle *(v)* : to set fire to, to inflame, rouse, நெருப்பு பற்றவை, தீ பொருத்து, எரியச் செய், தூண்டு

kindly *(adv)* : in a kind way, அன புடன்; *(adj)* : gentle, அன்புள்ள, கருணையுள்ள

kindred *(n)* : relations, உறவினர்

kine *(n. pl)* : cows, பசுக்கள்

king *(n)* : a male ruler, அரசன்

kingdom *(n)* : the territory ruled over by a king, முடியரசு நாடு, அரசு

king-fisher *(n)* : a bird, மீன் கொத்திப் பறவை

kink *(n)* : a twist or knot in a string, rope, etc., முறுக்கு, வளைவு; *(v)* : to go into twists, முறுக்கு

kinsfolk *(n)* : kindred, உறவினர்

kinship *(n)* : relationship, உறவுமுறை

kinsman *(n)* : a male relative, உறவினன்

kiosk *(n)* : a pavilion, கூடாரம்

kipper *(n)* : preserved herring, கெடாமல் பாதுகாக்கப்பட்ட மீன் உணவு

kirtle *(n)* : a kind of gown, மேலங்கி

kiss *(v)* : to touch lovingly with one's lips, முத்தமிடு; *(n)* : a touch with lips, முத்தம்

kit *(n)* : equipment needed for a special activity, கருவித் தொகுதி

kitchen *(n)* : a room where cooking is done, சமையலறை

kite *(n)* : a large bird of prey, a flying toy with a light frame covered with paper, பருந்து, காற்றாடி, பட்டம்

kith *(n)* : friends, நண்பர், உற்றார்

kith & kin *(n)* : friends and relatives, உற்றார், உறவினர்

kitten *(n)* : the young one of a cat, பூனைக்குட்டி

kittiwake *(n)* : a kind of gull, ஒரு வகைக் கடற் பறவை

kiwi *(n)* : a wingless bird, சிறகற்ற ஒருவகைப் பறவை

kleptomania *(n)* : a mad impulse to steal, திருட்டார்வ நோய்

knack *(n)* : special aptitude, சிறப்புத் திறமை, தனிநுட்ப ஆற்றல்

knap sack *(n)* : a provision bag, சரக்குப் பை

knave *(n)* : a rogue, deceiver, a playing card, போக்கிரி, ஏமாற்று பவன், விளையாட்டுச் சீட்டில் ஒன்று

knead *(v)* : to work and press, make into a paste, அழுத்திப் பிசை, பிசைந்து மாவாக்கு

knee *(n)* : the joint between the leg and the thigh, முழங்கால் மூட்டு

kneel *(v)* : to bend the knees, மண்டியிடு, முழந்தாளிடு

knell *(n)* : slow sounding of a bell at a funeral, சாவு மணி

knelt *(v)* : past tense and past participle of kneel, 'kneel' என்பதன் இறந்தகால, இறந்தகால முடிவெச்ச வடிவம்

knew *(v)* : past tense of know, 'know' என்பதன் இறந்தகால வடிவம்

knickerbocker, knickers *(n)* : short trousers, அரைக்கால் சட்டை

knife *(n)* : a cutting tool, கத்தி; *(v)* : to cut with a knife, கத்தியால் குத்து

knight *(n)* : a noble trained to use arms, one who holds the title sir, ஆயுதம் தாங்கிய பிரபு, படை வீரன், 'ஸர்' பட்டமுடையவர்

knit *(v)* : yarn on long needles, unite firmly, draw together, பின்னல் வேலை செய், ஒன்றுபடுத்து, இழுத்து நெருக்கு

knitting *(n)* : work produced by knitting, பின்னல் வேலை

knitting needle *(n)* : a long needle used for knitting by hand, பின்னல் ஊசி

knob *(n)* : round shaped handle, a small lump, குமிழ் வடிவக் கைப்பிடி, சிறு கட்டி

knock *(v)* : to strike, to tap at the door, மோது, கதவைத் தட்டு; *(n)* : a sudden stroke, a tap on the door, குத்துதல், மோதுதல், கதவைத் தட்டுதல்

knoll *(n)* : summit of a hill, மலை யுச்சி, குன்று

knot *(n)* : a tight joint in string or rope, a speed measure for ships, the hard part in the wood of the tree, முடிச்சு, கப்பலின் வேக அளவை, மரத்தின் தண்டுப் பகுதியில் உள்ள புடைப்பு

knotty *(adj)* : difficult, abounding in knots, சிக்கலான, புதிரான, முடிச்சுக்கள் உடைய

knout *(n)* : a whip used as an instrument of punishment, சாட்டை, சவுக்கு

know *(v)* : to understand, to perceive, அறி, தெரிந்துகொள்

knowledge *(n)* : learning, information, அறிவு, தகவல்

known *(n)* : past participle of know, 'know' என்பதன் இறந்தகால முடிவெச்ச வடிவம்

knuckle *(n)* : finger joint, விரல்கணு, கைமுட்டி; *(v)* : to bend the fingers, கைவிரல்களை மூடு

koalabear *(n)* : Australian tree climbing animal like a bear, ஆஸ்திரேலியாவிலுள்ள மரமேறும் கரடி போன்ற ஒரு விலங்கு

kopie *(n)* : a small hill in Africa, தென் ஆப்பிரிக்காவில் உள்ள சிறு குன்று

Koran *(n)* : the holy book of Mohammadans, முகம்மதியரின் திருமறை நூல்

krall *(n)* : fence for keeping domestic animals, தொழுவம், கொட்டில், பட்டி

kudos *(n)* : repute, glory, சிறப்பு, புகழ்

L

label *(n)* : a descriptive piece of paper fixed on something, விளக்கச் சீட்டு

labial *(adj)* : pertaining to the lips, இதழ் சார்ந்த

laboratory *(n)* : place for scientific experiments, ஆய்வுக் கூடம்

laborious *(adj)* : with diligence, toilsome, விடாமுயற்சியுடைய, கடினமான

labour *(n)* : work, pains of child birth, உழைப்பு, மகப்பேறு நோவு

labourer *(n)* : one who works with his hands, உழைப்பாளி, தொழிலாளி

labyrinth *(n)* : network of winding roads, சிக்கலான சுற்றுப்பாதை

lac *(n)* : a dark resin used in dyeing, lakh, அரக்கு, இலட்சம்

lace *(n)* : delicate net work, string for fastening, இழைப்பின்னல், இழைவார்

lacerate *(v)* : to tear, to wound, கீறு, புண்படுத்து

lack *(v)* : to want, குறைப்படு, தேவையாயிரு; *(n)* : need, want, தேவை, குறைபாடு

lackadaisical *(adj)* : affected, indifferent, வருத்தும் தோற்ற முள்ள, சோர்வுற்ற

lackey, lacquey *(n)* : male attendant, பணியாள்

laconic *(adj)* : concise, short, பொழிப்பான, சுருக்கமான

lacquer *(n)* : a kind of varnish made of lac, அரக்குச் சாயம்

lacrosse *(n)* : a ball game, வளை கோல் பந்தாட்டம்

lactic *(adj)* : pertaining to milk, பாலுக்குரிய

lacuna *(n)* : a hiatus, இடைவெளி

lad *(n)* : a boy, சிறுவன்

ladder *(n)* : a portable frame with steps by which one may climb up or down, ஏணி

lade *(v)* : to load, பளு ஏற்று

laden *(adj)* : loaded, பளுவேற்றப் பட்ட, சரக்கேற்றப்பட்ட

ladle *(n)* : a large deep spoon for lifting out liquids, அகப்பை, கரண்டி

lady *(n)* : female, a woman of noble birth, a female of rank or position, மங்கை, உயர்குடிப் பெண், பெருமாட்டி

lag *(v)* : move too slowly, மெல்ல நட, மெதுவாக இயங்கு, பின்னடை, பின்தங்கு

lagoon *(n)* : a shallow lake separated from the sea by sand banks, காயல், கடற்கழி

laid *(v)* : past tense and past participle of lay, 'lay' என்பதன் இறந்தகால, இறந்தகால முடிவெச்ச வடிவம்

lain *(v)* : past participle of lie, 'lie', என்பதன் இறந்தகால முடிவெச்ச வடிவம்

lair *(n)* : resting place of wild animals or den, வளை, குகை, பொந்து

laird *(n)* : landowner in Scotland, ஸ்காட்லாந்தின் நிலக்கிழார்

laity *(n)* : people, laymen, பொது மக்கள், பாமர மக்கள்

lake *(n)* : a body of water surrounded by land, ஏரி

lakh *(n)* : measure of one hundred thousand, இலட்சம்

lama *(n)* : Tibetan priest, திபெத்து நாட்டின் மதகுரு

lamb *(n)* : a young sheep, ஆட்டுக் குட்டி

lambent *(adj)* : flickering, ஒளிவீசு கின்ற

lame *(adj)* : crippled, முடமான

lament *(v)* : to show grief, புலம்பு, அழு; *(n)* : an expression of grief or sorrow, புலம்பு, அழுகை, ஒப்பாரி

lamentable *(adj)* : sorrowful, regretful, துக்கம் நிறைந்த, வருந்தத்தக்க

lamentation *(n)* : the act of sorrowing, weeping, புலம்புதல், ஒப்பாரி, அழுதல், அழுகை

lammas *(n)* : the harvest feast entertainments held on first August, ஆகஸ்டு முதல் தேதியன்று கொண்டாடப்படும் அறுவடைத் திருநாள்

lamp *(n)* : container for oil wick used for producing light, விளக்கு

lampoon *(n)* : a piece of writing attacking somebody, வசைப்பாட்டு, ஒருவரைத் தாக்கி எழுதப்பட்டது

lamprey *(n)* : an eel-like fish, விலாங்கு போன்ற மீன்

lance *(n)* : a pointed weapon, ஈட்டி, வேல்

lancet *(n)* : double-edged surgical knife, அறுவை சிகிச்சைக் கருவி

land *(n)* : the solid portion of the earth's surface, country, நிலம், நாடு; *(v)* : to alight, to set on land, கீழே இறக்கு, தரைமீது வை

landau, landaulet *(n)* : a coach with a top which may be opened or folded back, மடிப்பு முகட்டு வண்டி

landholder *(n)* : owner of a land, நிலக்கிழார்

landing *(n)* : the act of reaching land, coming ashore, a place for landing, the platform between two flights of stairs, நிலத்தில் இறங்குதல், கரையேறுதல், இறங்குமிடம், இரு படிக்கட்டு வரிசைகளின் இடையேயுள்ள மேடை

landmark *(n)* : a prominent mark an important event, boundary mark, சிறப்பு அடையாளம், முக்கிய நிகழ்ச்சி, எல்லைக் குறி

landscape *(n)* : a land view, natural scenery, நிலக்காட்சி, இயற்கைக் காட்சி

landslide, landslip *(n)* : a fall or sloping down of land, நிலச்சரிவு

lane *(n)* : a narrow road, சந்து, முடுக்கு

language *(n)* : human speech, mode of expression, any manner of expressing thought or feeling, a system of signs

and symbols with rules for forming intelligible communications, மொழி

languid *(adj)* : feeble, sluggish, சோர்ந்த, மந்தமான

languish *(v)* : to grow weak or feeble, சோர்ந்து போ, களைத்துப் போ

languor *(n)* : weakness, dullness, சோர்வு, மந்தம்

laniard,lanyard *(n)* : a short rope used as a fastening or handle, கட்டுவதற்கு அல்லது கைப்பிடியாகப் பயன்படும் சிறு கயிறு

lank *(adj)* : thin, loose, weak, மெலிந்த, தொய்வான, சோர்வான

lantern *(n)* : a case for holding light or lamp, ஒளிக்கூண்டு, விளக்குக்கூண்டு

lap *(n)* : upper part of the legs of a person, the loose flap, consuming a liquid by licking with the tongue, மடி, தொடை, தொங்கல், மடிப்பு, நக்கிக் குடித்தல்; *(v)* : fold, drink liquid by scooping with the tongue, மடி, நக்கிக் குடி

lapel *(n)* : flap of a garment, துணி மடிப்பு

lapidary *(n)* : a cutter and shaper of precious stones, மணிக்கற்களைச் செதுக்கி இழைப்பவர்

lapse *(v)* : to glide, to err, நழுவ விடு, தவறு செய்; *(n)* : a passing away, error, காலக் கடப்பு, நழுவுதல், தவறு

lapwing *(n)* : a bird of plover family, ஒரு வகை நீர்ப்பறவை

larboard *(n)* : portside of a ship, கப்பலின் இடப்பக்கம்

larceny *(n)* : theft, திருட்டு, களவு

larch *(n)* : any tree of the coniferous genus, ஒருவகை ஊசியிலை மரம்

lard *(n)* : the melted fat of swine, பன்றிக் கொழுப்பு

larder *(n)* : a room or place where provisions are kept, உணவு அரங்கு, அரங்கு

large *(adj)* : big, great, extensive, பெரிய, பெருமதிப்புடைய

largehearted *(adj)* : generous, கருணை மனமுடைய

largesse *(n)* : a present, பரிசு, நன் கொடை

largo *(n)* : a piece of music played in slow manner, மெல்லிய இசை

lariat *(n)* : a rope for fastening horse, குதிரைகளைக் கட்டும் கயிறு

lark *(n)* : a singing bird, a trick, வானம்பாடி, குறும்பு; *(v)* : to play tricks, குறும்பு செய்

larva *(n)* : an insect in its caterpillar stage, பூச்சியின் முட்டையினின்றும் வெளிவரும் புழுப் பருவம்

larynx *(n)* : the organ of voice, குரல் வளை

lascar *(n)* : an Indian sailor, கப்பலோட்டி

lascivious *(adj)* : lustful, காமம் நிறைந்த

lash *(n)* : the cord of a whip, சாட்டை, கசைவார்; *(v)* : to strike with a whip, சாட்டையால் அடி

lass *(n)* : a girl or young woman, சிறுமி, மங்கை

lassitude *(n)* : tiredness, களைப்பு

lasso *(n)* : a long rope looped with a slip-knot for catching wild horses, காட்டுக்குதிரைகளைப் பிடிக்கும் சுருக்குக் கயிறு

last *(n)* : shoe maker's wooden mould, the ultimate, செருப்புத் தைப்பவரின் மாதிரி மரப்படிவம், கடைசி, இறுதி; *(v)* : to continue in good

condition, நீடித்து உழை; *(adj)* : final, more recent, இறுதியான, அண்மைக் காலத்திலான

lasting *(adj)* : durable, நீடித்து உழைக்கும்

latch *(n)* : a fastening, தாழ்ப்பாள்; *(v)* : to fasten with a latch, தாழ்ப்பாளிடு

late *(adj)* : departed, slow, recent, after the right time, மறைந்த, மெதுவான, அண்மைக் காலத்திய, குறித்த காலம் கடந்த; *(adv)* : recently, after the right time, அண்மைக் காலத்தில், காலங்கடந்து

lately *(adv)* : a short time ago, recently, சிறிது காலத்திற்கு முன், அண்மையில்

latent *(adj)* : implicit, hidden, உள்ளமைந்த, மறைவான

lateral *(adj)* : relating to the side, பக்கவாட்டிலான

latex *(n)* : the milking juice of plant, மரப்பால்

lath *(n)* : thin strip of wood, மெல்லிய மரப்பட்டை

lathe *(n)* : turner's machine, கடைசல் பொறி

lather *(n)* : a foam produced by soaps, நுரை; *(v)* : to produce lather, நுரையுண்டாக்கு

Latin *(n)* : a language of ancient Rome, இலத்தின் மொழி

latitude *(n)* : width, distance from the equator, freedom from rules or restrictions, அகலம், நில நடுக்கோடு, கட்டுப்பாடின்மை

latrine *(n)* : urinal, கழிப்பிடம்

latter *(adj)* : recent, last of two, அண்மைக்காலத்திய, குறிப்பிட்டதில் இரண்டாவதான

lattice *(n)* : a network of cross bars, பின்னல் சட்டம்

laud *(v)* : to praise, புகழ்

laudable *(adj)* : praiseworthy, புகழத் தக்க

laudanum *(n)* : tincture of opium, அபினி

laugh *(v)* : to make a merry sound, சிரி; *(n)* : the sound made in merriment, சிரிப்பு

laughter *(n)* : laugh, சிரிப்பு

launch *(v)* : to send forth, to propel a ship to slide into the water, to throw, புதுமுயற்சி மேற்கொள், கடலில் மிதக்கவிடு, விசியெறி; *(n)* : passenger carrying boat, தோணி, பயணப் படகு

launder *(v)* : to wash and iron the clothes, துணியைச் சலவை செய்; *(n)* : washerwoman or washerman, சலவைத் தொழிலாளி

laundry *(n)* : a place where clothes are washed, சலவையகம்

laureate *(n)* : the court poet, one crowned with laurel, அரசவைக் கவிஞர், வாகைப்பூவைச் சூடியவர் மட்டிலா மதிப்பை / சம்மானத்தைப் பெற்றவர்

laurel *(n)* : a kind of evergreen shrub, victory, வாகைச் செடி, வெற்றி

lava *(n)* : molten matter emitted by a volcano, எரிமலைக் குழம்பு

lavatory *(n)* : water-closet, a place or rock for washing purpose, கழிப்பிடம், குளியலறை

lavender *(n)* : a plant with sweet smelling flowers, நறுமண மலர்ச் செடி

laverock *(n)* : the lark, வானம்பாடி

lavish *(adj)* : wasteful, giving or spending generously, வீண் செலவு செய்கிற, அளவுக்கு மிஞ்சிக் கொடுக்கிற; *(v)* : to waste, to spend freely, வீண்செலவு செய், காராள மாகச் செலவிடு

law *(n)* : rule of conduct of action authoritatively imposed, any set of rules, (in science) சட்டம், விதி

lawful *(adj)* : fair, right, நியாயமான, சட்டத்திற்குட்பட்ட

lawless *(adj)* : violent, disorderly, குழப்பமிக்க, ஒழுங்கற்ற

lawmaker *(n)* : one who makes laws, சட்டமியற்றுபவர்

lawn *(n)* : a grassy ground, புல்வெளி

lawyer *(n)* : advocate, one learned in law, வழக்கறிஞர், சட்ட நிபுணர்

lax *(adj)* : vague, loose, not firm, தெளிவற்ற, தளர்ந்த, உறுதியற்ற

laxative *(n)* : a medicine used for loosening the bowels, மலமிளக்கி

laxity *(n)* : looseness, தளர்ச்சி, உறுதியின்மை

lay *(adj)* : pertaining to nonprofessionalist, பாமர; *(n)* : a narrative poem, பாட்டு; *(v)* : to produce eggs, put down, to beat down, past-tense of lie, முட்டையிடு, படுக்கவை, கீழே போடு, அடி, lie என்பதன் இறந்தகால வடிவம்

layer *(n)* : a stratum, அடுக்கு, பாளம்

layette *(n)* : an infant's complete outfit, குழந்தையின் முழு உடைகள்

lay-figure *(n)* : model of the human figure, மனிதனின் மாதிரி உருவம்

lazar *(n)* : a person with a dreadful disease, தொழு நோயாளி

lea *(n)* : a field, lawn, நிலம், புல்வெளி

lead *(n)* : a soft grey metal, சீயம்; *(v)* : guide, control, cause to pass through, வழிகாட்டு, அடக்கு, ஊடாகக் கடத்து

leader *(n)* : one who leads, தலைவர், வழிகாட்டுபவர்

leading *(adj)* : chief, most important, முதன்மையான, சிறப்பான

leaf *(n)* : one of the external parts of a plant or tree, a division of a flat body as the leaf of the book, இலை, ஏடு

league *(n)* : union, alliance, a measure of distance of 3 miles, சங்கம், ஒப்பந்தக்குழு, 3 மைல் தூர அளவு

leak *(n)* : a small hole that lets out liquids, ஒழுக்கு; *(v)* : to ooze out, ஒழுகு

leal *(adj)* : true hearted, loyal, உண்மையுள்ள, நேர்மையுள்ள

lean *(v)* : to incline, சாய்ந்திரு; *(adj)* : not fat, மெலிந்த

leap *(v)* : to spring or jump, பாய், குதி; *(n)* : a jump, துள்ளுதல்

leapt *(v)* : past tense and past participle of leap, 'leap' என்பதன் இறந்தகால, இறந்தகால முடிவெச்ச வடிவம்

leap-year *(n)* : every fourth year, (when February has 29 days), பிப்ரவரியில் ஒரு நாள் கூடுதலாக 366 நாட்கள் கொண்ட ஆண்டு

learn *(v)* : to acquire knowledge, கற்றுணர்

learned *(adj)* : scholarly, கற்றறிந்த

learnt *(v)* : past tense and past participle of learn, 'learn' என்பதன் இறந்தகால, இறந்தகால முடிவெச்ச வடிவம்

lease *(n)* : an agreement giving use of land or other property, குத்தகை; *(v)* : to let for hire, குத்தகைக்கு விடு

lease-hold *(n)* : land or other property taken out on lease, குத்தகை; *(adj)* : taken out on lease, குத்தகைக்கு எடுக்கப்பட்ட

leash *(n)* : a leather strap for holding animals, விலங்குகளைக் கட்ட உதவும் தோல்வார்; *(v)* : to fasten with a strap, வாரினால் கட்டு

least *(adj)* : last, lowest, கடைசியான, மிகச்சிறிய, தாழ்ந்த

leather *(n)* : material made by curing animal skin, பதனிட்ட தோல்

leave *(n)* : a period of permission, விடுப்பு; *(v)* : to discard, depart, allow to remain in specified state, to give to a person's charge or care, விட்டுவிடு, வெளியேறு, குறிப்பிட்ட நிலையில் வைத்திடு, பொறுப்பில் விடு

leaven *(n)* : substance added to dough to produce fermentation, தொழி, புளிக்க வைக்கும் பொருள்

leaves *(n)* : plural of leaf, 'leaf', என்பதன் பன்மை வடிவம்

leavings (n) : things left as worthless, மிச்சம், கழிவு

lecherous *(adj)* : lustful, காமம் நிறைந்த

lectern *(n)* : reading or singing-desk in a church, திருத்துவக்கோயில் மேடையின் சாய்வு மேசை

lecture *(n)* : discourse on a given subject usually by way of instruction, விரிவுரை, பேருரை, சொற்பொழிவு; *(v)* : to deliver a lecture, விரிவுரையாற்று, சொற்பொழிவாற்று

led *(v)* : past tense and past participle of lead, 'lead' என்பதன் இறந்தகால, இறந்தகால முடிவெச்ச வடிவம்

ledge *(n)* : a shelf, ridge, சுவர் அலமாரி, விளிம்பு

ledger *(n)* : an account book, வரவு செலவுக் கணக்குப் புத்தகம்

lee *(n)* : shelter given by neighbouring object, side away from wind, காற்றுப் பாதுகாப்பான பகுதி, காற்று அடிக்காத பக்கம்

leech *(n)* : blood sucking worm, அட்டை

leek *(n)* : vegetable of the onion family, ஒரு வகைப் பூண்டு

leer *(n)* : sarcastic look that suggests evil desire, lecherous look, கெட்ட எண்ணத்துடன் பார்க்கும் கடைக் கண்பார்வை

lees *(n & pl)* : dregs, sediment, கசடு, வண்டல்

leet *(n)* : court of records, a chosen list of candidates for a job, பதிவு நீதி மன்றம், வேலைக்காகத் தேர்ந் தெடுக்கப்பட்டோரின் பெயர் பட்டியல்

leeward *(adv)* : towards the sheltered side, காற்றிற்கு ஒதுக்கமாக

left *(n)* : the side opposite to the right, இடதுபக்கம்; *(v)* : past tense and past participle of leave, 'leave', என்பதன் இறந்தகால, இறந்தகால முடிவெச்ச வடிவம்

leg *(n)* : organ of support and locomotion in living beings, கால்

legacy *(n)* : that which is given by will, விருப்ப இறுதி ஆவணச் சொத்து, மரபுரிமைச் சொத்து

legal *(adj)* : pertaining to law, சட்டம் சார்ந்த

legalize *(v)* : to make lawful, சட்டம் படுத்து

legate *(n)* : an ambassador, delegate, சமயத்தூதுவர், பேராளர்

legatee *(n)* : the recipient of a legacy, இறுதி ஆவணப்படி சொத்தைப் பெறுபவர்

legend *(n)* : fable, myth, கட்டுக் கதை, புராணம்

legerdemain *(n)* : conjuring tricks by a quickness of the hand, கண் கட்டு வித்தை

legible *(adj)* : readable, தெளிவான, வாசிக்கத்தக்க

legion *(n)* : a large number, a body of soldiers, பேரெண்ணிக்கை, படைத் தொகுதி

legislate *(v)* : to make laws, சட்டம் இயற்று

legislation *(n)* : making of laws, சட்டம் இயற்றுதல்

legislative *(adj)* : enacting laws, சட்டம் இயற்றுகிற

legislature *(n)* : a body of law makers, சட்டமன்றம், சட்டசபை

legitimate *(adj)* : legal, real, fair, சட்டப்படியான, உண்மையான, நேர்மையான

leisure *(n)* : spare time, ஓய்வு நேரம்

lemming *(n)* : a small rat like rodent, எலி போன்ற கொறி விலங்கு

lemon *(n)* : pale-yellow oval shaped acidic juicy fruit, எலுமிச்சம்பழம்

lemur *(n)* : a monkey-like animal of Madagascar, மெட்காஸ்கரில் உள்ள குரங்கு போன்ற ஒரு விலங்கு

lend *(v)* : grant something on loan, to give on hire, கொடுத்துதவு, கடனாகக் கொடு, வாடகைக்குக் கொடு

length *(n)* : measurement from end to end, நீளம்

lengthen *(v)* : to make longer, elongate, நீட்டு

lengthwise *(adv)* : in the direction of the length, நீளவாக்கில்; *(adj)* : along the length, நீளவாக்கான

lengthy *(adj)* : of great length, longish, மிக நீண்ட, நீளமான

lenience, leniency *(n)* : mildness, gentleness, இணக்கம், கண்டிப்புக் குறைவு, கருணை

lenient *(adj)* : mild, gentle, இணக்கமான, கண்டிப்புக் குறைவான, கருணை காட்டும்

lens *(n)* : a magnifying glass, கண்ணாடி வில்லை

lent *(v)* : past tense and past participle of lend, 'lend', என்பதன் இறந்த கால, இறந்தகால முடிவெச்ச வடிவம்; *(n)* : a fast of forty days before Easter, ஈஸ்டர் பண்டிகைக்கு முன்புள்ள நாற்பது நாள் நோன்பு

lentil *(n)* : a pulse bearing plant grown for food, உணவாகப் பயன் படும் அவரையினச் செடி

Leo *(n)* : the lion, fifth sign of the zodiac, சிங்கம், சிம்மராசி

leonine *(n)* : lion like, சிங்கம் போன்ற

leopard *(n)* : a spotted wild animal of the cat family, சிறுத்தைப்புலி

leper *(n)* : a person suffering from leprosy, தொழுநோயாளி, பெரு நோயாளி

leprosy *(n)* : chronic intectious bacterial disease affecting skin and nerves resulting in mutilations and deformities, தொழுநோய், பெரு வியாதி

less *(adj)* : in a smaller degree, சற்றுக் குறைவான; *(adv)* : not so much, மேலும் குறைவாக; *(n)* : a smaller portion, சற்றுக்குறைவான பகுதி; *(prep)* : minus, குறைவாக

lessee *(n)* : a lease-holder, குத்தகைக் காரர்

lessen *(v)* : to diminish, to make less, சுருக்கு, குறை

lesson *(n)* : a portion of study to be learnt by a pupil, பாடம், பாடுப் பகுதி

lessor *(n)* : a lease granter, குத்த கைக்கு விடுபவர்

lest *(conj)* : so that not, அவ்வாறு ஆகாதபடி

let *(v)* : to permit, to lease, இணங்கு, வாடகைக்கு விடு

lethal *(adj)* : deadly, mortal, கொல்லக் கூடிய, கொடிய

lethargy *(n)* : dullness, heaviness, மந்தம், மயக்கம்

letter *(n)* : a written message, a sign of the alphabet, கடிதம், எழுத்து

lettered *(adj)* : learned, கற்றறிந்த

lettuce *(n)* : an edible plant, ஒரு வகைக் கீரை, முட்டைகோஸ்

levee *(n)* : an assembly of visitors, assembly held by a king, a river bank, பேட்டிக் குழு, அரசவைக் குழு, ஆற்றின் கரை

level *(n)* : a horizontal place, an instrument for finding the evenness of the surface, மட்டம், சமதளம், மட்டம் பார்க்கும் கருவி; *(v)* : equalise, make even, சமன்படுத்து, மட்டப் படுத்து

lever *(n)* : a rigid bar used for raising weights, நெம்புகோல்

leveret *(n)* : a young hare, முயல்குட்டி

leviathan *(n)* : a large sea-monster, பெரும் கடல் விலங்கு

levity *(n)* : want of seriousness, thoughtlessness, அக்கறையின்மை, கருத்தின்மை, கவனமின்மை

levy *(v)* : to demand by order, to impose, வரி வசூல் செய், வரி சுமத்து; *(n)* : the act of collecting by authority, வரி வசூலித்தல்

lewd *(adj)* : lustful, காமம் நிறைந்த, கற்பற்ற

lexicographer *(n)* : compiler of a dictionary or lexicon, அகராதி தொகுப்பாளர்

lexicon *(n)* : a dictionary, பேரகராதி

liability *(n)* : responsibility, debt, பொறுப்பு, கடமை

liable *(adj)* : accountable, subject to, கடமைப்பட்டுள்ள, பொறுப்புள்ள

liaison *(n)* : union, illegal love, பிணைப்பு, முறையற்ற காதல்

liaison officer *(n)* : one who keeps two units in touch with each other, இணைப்பு அலுவலர்

liana *(n)* : a climbing plant, ஒரு படர் கொடி

liar *(n)* : one who tells lies or falsehood, பொய்யர், புளுகர்

libation *(n)* : an offering of wine and other liquids to god, கடவுளுக்கு அளிக்கப்படும் மதுபானம்

libel *(n)* : written or printed statement that damages one's reputation, anything that brings discredit, எழுத்து மூலமான குற்றச்சாட்டு, அவதூறு, புரளி; *(v)* : to defame, அவதூறு சொல், புகழ்கெடு

libellous *(adj)* : defamatory, அவ தூறான, புகழ் கெடுக்கின்ற

liberal *(adj)* : generous, ample, பெருந்தன்மையுடைய, தாராள குணமுடைய

liberality *(n)* : generosity, nobleness of mind, தாராளகுணம், பெருந் தன்மை

liberate *(v)* : release, disjoin, விடுவி, தளைநீக்கு.

liberty *(n)* : freedom, permission, விடுதலை, தன் செயலுரிமை

libidinous *(adj)* : lustful, சிற்றின்ப உணர்ச்சியுடைய

library *(n)* : a room or building where books are kept, நூல் நிலையம், நூலகம்

lice *(n)* : plural of louse, 'louse' என்பதன் பன்மை வடிவம்

licence *(n)* : a written permission to do something, இணக்க ஆணை; *(v)* : to permit, authorise, அனுமதி அளி, உரிமை அளி

licentious *(adj)*: lawless, immoral, சட்ட மீறிய, கூட்டுப்பாடற்ற, இழிவான

lichen *(n)* : a kind of flowerless plant, காளான் வகைப் பூண்டு

lich-gate, lychgate *(n)* : the roofed gate of a churchyard, கிருத்துவத் திருக்கோயில் முற்றத்தின் வாசல்

licit *(adj)* : lawful, proper, வழி முறைக்குட்பட்ட, சட்டத்திற் குட்பட்ட, முறையான

lid *(n)* : a movable cover for an opening, மூடி

lie *(interj)* : untruth, falsehood, பொய்; *(v)* : to tell falsehood, to remain in a flat position, பொய்கூறு, படு

liege *(adj)* : faithful (to landlord), நிலமானியப் பணிசெய்யக் கடமைப்பட்டுள்ள

lien *(n)* : a legal claim, சட்டப்பூர்வ மான உரிமை

liet *(adv)* : willingly, gladly, விருப்பத் துடன், மகிழ்ச்சியுடன்

lieu *(n)* : instead, பதிலாக, மாற்றாக

lieutenant *(n)* : an officer in the army below the rank of a captain, துணைப் படைத்தலைவர்

life *(n)* : vitality, animate existence, உயிர்சக்தி, வாழ்க்கை

life-boat *(n)* : a boat for saving people in danger or drowning, பாதுகாப்புப் படகு

lifeless *(adj)* : dead, uninteresting, உயிரற்ற

life-like *(adj)* : like a living person, உயிர்க்களையுடைய

life-time *(n)* : duration of one's life, வாழ்நாள்

lift *(v)* : to raise to higher position, hoist, உயர்த்து, தூக்கு; *(n)* : a rise in rank, apparatus for carrying goods or persons from one floor to another, ஏற்றம், உயர்த்தி

ligament *(n)* : a tough fibrous tissue which binds the movable bones of the body, தசை நார்

ligature *(n)* : a thing used for binding, a bandage, காயங்கள் கட்டும் துணி, கட்டு

light *(n)* : that which makes things possible to be seen, lamp, ஒளி, விளக்கு; *(adj)* : not heavy, not dark, easy, லேசான, ஒளியுடைய, எளி தான; *(v)* : to give light, brighten, to set fire to, ஒளியூட்டு, பிரகாச மாக்கு, கனம் குறை

lighten *(v)* : to make less heavy, shine, கனம் குறை, ஒளியூட்டு, பிரகாசி

light-hearted *(adj)* : cheerful, மனச் சுமையற்ற, மகிழ்ச்சியான

light-house *(n)* : a tower with a powerful light to guide or warn ships, கலங்கரை விளக்கம்

lightning *(n)* : a flash of light from the clouds produced by the natural electricity in the sky, மின்னல்

lignite *(n)* : soft brown coal, பழுப்பு நிலக்கரி

like *(adj)* : similar, equal, ஒத்த, போலிருக்கிற, சமமான; *(v)* : enjoy, to love, விரும்பு; *(n)* : something similiar to another, ஏற்ற பொருள்

likelihood *(n)* : probability, நிகழ் திறம்

likely *(adj)* : probable, suitable, நிகழத் தக்க, பொருத்தமான, நம்பத்தக்க

liken *(v)* : to find out the resemblance, ஒப்பு நோக்கு

likeness *(n)* : a portrait, similarity, ஓவியம், ஒத்த தன்மை

likewise *(adv & conj)* : similarly, also, moreover, too, இதுபோலவே, மேலும், இன்னும்

liking *(n)* : fondness, taste, fancy, விருப்பம், சுவை ஈடுபாடு

lilac *(n)* : a shrub with purple or white blossoms, இளஞ்சிவப்பு அல்லது வெள்ளை நிறப் பூக்களையுடைய ஒருவகைப் புதர்க்கொடி; *(adj)* : pale purple, இளஞ்சிவப்பான

lilliputian *(adj)* : tiny, குள்ளமான, சிறிய உருவமுடைய; *(n)* : native of Lilliput, லில்லிப்புட் என்ற கற்பனை நாட்டவர்

lilt *(n)* : a cheerful tune, இனிமையான இசைப்பாடல்; *(v)* : sing melodiously, இனிமையாகப் பாடு

lily *(n)* : a bulbous plant with large beautiful flowers, அல்லி, குவளை

limb *(n)* : arms, leg, wing, branch of a tree, a part, கை, கால், சிறகு, கிளை, ஒரு பகுதி

limber *(n)* : detachable part of the gun-carriage, பீரங்கி வண்டியின் கழற்றத்தக்கப் பகுதி; *(adj)* : easily bent, எளிதில் வளையக்கூடிய

lime *(n)* : white substance got by burning limestone, any sticking substance, a juicy fruit, European tree with fragrant flowers, சுண்ணாம்பு, எலுமிச்சை, நறுமண மலர்களையுடைய ஐரோப்பியச் செடி

limekiln *(n)* : a kind of furnace in which limestone is burnt to lime, சுண்ணாம்புக் காளவாய்

limelight *(n)* : intense white light got by heating piece of lime in the oxy-hydrogen flame, சுண்ணாம்புக் கல்லை ஆக்ஸி-ஹைட்ரஜன் சுடரில் சூடாக்குவதால் ஏற்படும் வெண்ணொளி

limit *(n)* : boundary, end, எல்லை, வரம்பு, முனை; *(v)* : prohibit, set, bound to, வரையறு, கட்டுப்படுத்து, வரம்பு ஏற்படுத்து

limitation *(n)* : restriction, வரையறை, கட்டுப்பாடு

limn *(v)* : to paint, to portray, வண்ணம் தீட்டு, படம் வரை

limousine *(n)* : motor car with closed body and roof, மூடிய உந்து வண்டி

limp *(v)* : walk lamely or unevenly, நொண்டி நொண்டி நட; *(adj)* : not stiff, weak, tired, விறைப்பற்ற, உறுதியற்ற, சோர்வுடைய

limpet *(n)* : a small shellfish sticking lightly to rocks, பாறையில் ஒட்டி வாழும் நத்தையினம்

limpid *(adj)* : clear (of liquids, atmosphere, eyes etc.), தெளிவான, கலங்கலற்ற

linchpin *(n)* : a pin used to keep the wheel in position, கடையாணி

linden *(n)* : lime tree, எலுமிச்சை மரம்

line *(v)* : to mark with the lines, to put

an additional layer on the inside, form into a line, கோடுவரை, உள்ளே அதிகமாக ஒரு மடிப்பு வைத்துத் தை, வரிசையாக நிறுத்து; *(n)* : row, thin long mark drawn, string, direction, வரிசை, கோடு, கயிறு, வழி

lineage *(n)* : ancestry, வழி மரபு

linen *(n)* : cloth woven from flax, நாரால் நெய்யப்பட்ட துணி

liner *(n)* : a steamer belonging to a company, நீராவிக்கப்பல்

ling *(n)* : a sea fish, a kind of heather, ஒருவகைக் கடல் மீன், ஒருவகைப் புதர்ச் செடி

linger *(v)* : be late, or slow in going away, to remain long, தயங்கி நில், நேரம் தாழ்த்திப் போ, நீடித்திரு

lingerie *(n)* : women's under-garments, பெண்களின் உள்ளாடைத் தொகுதி

lingua franca *(n)* : language of general communication serving as a medium between people who speak different languages, இடையீட்டுப் பொது மொழி

linguist *(n)* : one who is skilled in the science of language, மொழியியல் வல்லுநர், மொழியியலார்

liniment *(n)* : a liquid ointment for rheumatism, வாதத்திற்கான தைலம், பூச்சி மருந்து

lining *(n)* : the inside layer, உள்வரிப் பூச்சு, அக உறை

link *(n)* : ring or loop of chain, the connecting part, a measure equal to 8 inches approximately, torch or pitch and tow, கண்ணி, கொக்கி, ஏறக்குறைய 8 அங்குல நீளமுள்ள அளவு, தீவட்டி; *(v)* : join as by a link, join closely, ஒன்று சேர், ஒட்டவை, கொக்கியில் பிணை

linn *(n)* : a waterfall, the pool below the waterfall, நீர்விழ்ச்சி, அருவிப் பள்ளம்

linnet *(n)* : a song-bird, குருவி வகைப் பறவை

linoleum *(n)* : a thick cloth made mostly from linseed oil, மெருகிடப் பட்ட மெழுகுத் துணி

linotype *(n)* : a machine which makes stereotyped lines of words in printing, வரியச்சுப் பொறி

linseed *(n)* : seed of flax, ஆளிவிதை

lint *(n)* : a stiff cloth of line used in dressing wounds, காயம் கட்டும் துணி

lintel *(n)* : horizontal timber or stone over a window, வாசல்படி நிலைக் கட்டை

lion *(n)* : a well known flesh-eating wild animal, a prominent person, the sign of zodiac, சிங்கம், புகழ் வாய்ந்தவர், சிம்மராசி

lion-hearted *(adj)* : very brave, மன வலிமையுடைய

lip *(n)* : the fleshy edge of the mouth, the outer edge of anything, இதழ், உதடு, விளிம்பு; *(v)* : to touch lightly in the lip, உதட்டால் தடவு

lip sympathy *(n)* : the outward show of sympathy, உதட்டளவுக் கருணை

liquefy *(v)* : to melt, நீர்மமாக்கு

liquid *(n)* : a flowing substance, நீர்மம்; *(adj)* : in the form of liquid, clear, not fixed, நீரியலான, தெளிவான, நிலையற்ற

liquidate *(v)* : to settle or wind up, தீர்த்து விடு, மூடிவிடு, கலை

liquor *(n)* : a strong drink, anything liquid, மதுபானம், நீர்மம்

liquorice *(n)* : plant with sweet root used in medicine, அதிமதுரம் *(செடி)*

lira *(n)* : Italian coin, இத்தாலிய நாட்டு நாணயம்

lisp *(v)* : to articulate sibilants imperfectly, speak with imperfect pronunciation, உரசொலிகளைத் தெளிவின்றி அல்லது குறைபாட்டோடு உச்சரி, மழலை பேசு

lissom, lissome *(adj)* : flexible, வளையும் தன்மையுடைய

list *(n)* : a catalogue, பட்டியல், வரிசை; *(v)* : to desire, to prepare catalogue, to lean over to oneside, விரும்பு, பட்டியல் தயார் செய், ஒரு பக்கமாகச்சாய்

listen *(v)* : to hear, to give close attention, கேள், கவனி

listless *(adj)* : indifferent, uninterested, weary, கவனமற்ற, அக்கறையற்ற, ஆர்வமற்ற, களைத்த

lists *(n & pl)* : the ground enclosed for a battle between men, போர்க்களம்

litany *(n)* : a set form of public prayer, வழிபாட்டுப் பாசுரம்

literacy *(n)* : ability to read and write, எழுத்தறிவு

literate *(n)* : one who is able to read and write, எழுதப்படிக்க தெரிந்தவர்; *(adj)* : learned, கற்றுத் தேர்ந்த

literateur *(n)* : one who is fond of books and writings, புத்தகங்களை விரும்பிப் படிப்பவர், புத்தகப் புழு

literature *(n)* : books of writings collectively, all that has been written on a subject, இலக்கியம்

lithe *(adj)* : flexible, வளையக்கூடிய

lithograph *(n)* : a stone print, கல் அச்சு

litigate *(v)* : to carry on a law case, வழக்குத்தொடு, வழக்காடு

litigation *(n)* : suit in a law-court, law proceedings, வழக்குத் தொடுத்தல், சட்ட நடவடிக்கைகள்

litre, liter *(n)* : a liquid measure equivalent to 1000 cc., 1000 சென்டி மீட்டருக்குச் சமமான முகத் தலளவை

litter *(n)* : a bed for carrying the dead or injured, the young of an animal produced at one time, an untidy mass of waste materials, நோயாளிகளைத் தூக்கிச் செல்லும் படுக்கை, பாடை, ஓரீற்றுக்குட்டிகள், குப்பை கூளம்; *(v)* : to produce a litter of young, to cover with litter, scatter, குட்டிகளை ஈனு, குப்பை செத்தையை பரப்பு, பொருள் களைத் தாறுமாராகப் போடு

little *(adj)* : small in size, quantity or degree, (வடிவில், அளவில், தரத்தில்) சிறிய; *(adv)* : in a small quantity, not much, சிறிய அளவில், ஒரு சிறிது மட்டும்

littoral *(adj)* : pertaining to the sea-shore, கரையோரப் பகுதியைச் சார்ந்த

liturgy *(n)* : the form of service prescribed for a church, கிறித்துவ கோவில்களில் உள்ள நற் கருணைச் சுவடி

live *(v)* : to have life, to dwell, உயிருடன் இரு, தங்கியிரு, குடியிரு

livelihood *(n)* : means of living, வாழ்க்கைத் தொழில்

live long *(adj)* : long lasting, நீடித்து உழைக்கிற

lively *(adj)* : full of life, active, சுறு சுறுப்புடைய, உயிருடைய

liver *(n)* : the large gland in the body that purifies blood, கல்லீரல்

livery *(n)* : uniform of servants, பணியாட்களின் தொழிலுடை

live-stock *(n)* : farm animals, கால் நடை

livid *(adj)* : discoloured, of a lead colour, நிறமற்ற, ஈய நிறமுடைய; *(n)* : lead colour, ஈய நிறம்

living *(adj)* : having life, active, உயிருடைய, சுறுசுறுப்புடைய; means of living பிழைப்பு, வாழ்க்கைத் தொழில்

lizard *(n)* : a reptile, பல்லி

llama *(n)* : a beast of burden of the camel genus, ஒட்டகம் போன்ற பொதி விலங்கு

llana *(n)* : one of the vast plains of America, அமெரிக்காவின் பெரிய சமவெளிகளில் ஒன்று

lo *(interj)* : look, அதோ பார், ஐயோ

loach *(n)* : a small river fish, ஒரு ஆற்று மீன்

load *(n)* : a burden, what is carried, பளு, சுமை; *(v)* : to put on as much as can be carried, to charge a gun, சுமை ஏற்று, பளுவேற்று, துப்பாக்கியில் மருந்தடை

loadstone, loadestone *(n)* : a magnetic ore of iron, காந்தக்கல்

loaf *(n)* : a shaped mass of bread or sugar, ரொட்டித் துண்டு, வெல்லக் கட்டி; *(v)* : to pass time idly, சோம்பித்திரி

loafer *(n)* : an idler, சோம்பித் திரிபவர்

loam *(n)* : soil chiefly of clay, sand and decayed plants, களிமண், வண்டல் உரம்

loan *(n)* : money or object lent, கடன்; *(v)* : lend, கடன் கொடு

loath *(adj)* : unwilling, விருப்பமற்ற

loathe *(v)* : regard with disgust, hate, வெறு, அருவருப்பு கொள்

loathsome *(adj)* : causing disgust, வெறுப்புண்டாக்கும், அருவருப்பு ஏற்படுத்தும்

lob *(n)* : ball bowled underhand, கீழ்க்கை வீச்சுப் பந்து; *(v)* : to send such a ball, move slowly or clumsily, பந்தைச் சுற்றி வீசு, தட்டுத் தடுமாறிச் செல்

lobby *(n)* : corridor, இடைக்கழி, புறவாரம்; *(v)* : talk to win favour, ஆதரவு நாடிப் பேசு

lobe *(n)* : the lower part of the external ear, காது மடல்,

lobster *(n)* : a shell fish, கடல் நண்டு

lobworm *(n)* : a sea worm, கடல் புழு

local *(adj)* : belonging to a certain place, restricted, குறிப்பிட்ட இடம் சார்ந்த, உள்ளூருக்குரிய, உட்படுத்தப்பட்ட

locality *(n)* : place, district, position, இடம், வட்டாரம், சூழல்

localize *(v)* : restrict to particular place, இட எல்லைக்குள் உட் படுத்து

locate *(v)* : to mark the location of, to place, இடம் குறி, இடத்தில் வை

loch *(n)* : an arm of the sea, கடற்கழி

lock *(n)* : an instrument for fastening doors, cabinets etc., the enclosure of a canal, பூட்டு, கால்வாய்

அடைப்பு, விசைத்தடுப்பு; *(v)* : to fasten with a lock, to unite, confine, பூட்டு, இணை, சிறைப் படுத்து

locket *(n)* : an ornamental case of gold or silver, பதக்கம்

lock-up *(n)* : room for temporary detention of prisoners, தடுப்புக் காவலறை

locomotive *(adj)* : moving, இடம் விட்டுப் பெயர்கிற; *(n)* : a railway engine, தொடர் வண்டி இயக்கு பொறி

locum-tenens *(n)* : one performing the duties of another who is away, தற்காலிகப் பொறுப்பு

locust *(n)* : a destructive insect, a thorny tree, வெட்டுக்கிளி, முள் செடி

lode *(n)* : metallic vein in the earth, a channel, தாதுப்படுகை, திறந்த சாக்கடை

lodestor, lodestar *(n)* : the pole-star, guide, வடமீன், துருவ நட்சத்திரம், வழிகாட்டி

lodge *(n)* : a small cottage, சிறிய வீடு, தங்கிடம்; *(v)* : to reside temporarily, file a complaint, தற்காலிகமாகத் தங்கு, முறை யீட்டைப் பதிவு செய்

lodging *(n)* : room rented to live in, வாடகை அறை

loft *(n)* : a space of room close under the roof, a gallery, பரண், புறாக்கூண்டு, அடுக்கிருக்கை

lofty *(adj)* : high, noble, proud, உயர மான, சிறந்த, பெருமிதமுடைய

log *(n)* : bulky mass of wood, a device for measuring a ship's speed, a list of events, மரக்கட்டை, கப்பலின் வேக அளவி, நிகழ்ச்சி அட்டவணை; *(v)* : to write down events, நிகழ்ச்சிப் பட்டியல் தயாரி

log-book *(n)* : a diary, நாள் குறிப்பேடு

logger-head *(n)* : a fool, மூடன்

logic *(n)* : the act of reasoning, தருக்க முறை

loin *(n)* : the part near above hip or below the ribs, அரை

loin cloth *(n)* : a piece of cloth worn on the loins, அரைத்துணி

loiter *(v)* : to delay, காலந்தாழ்த்து, கால தாமதம் செய்

loll *(v)* : to lean lazily, சோம்பலுடன் சாய்ந்திரு

lone *(adj)* : solitary, without companions, தனிமையான, துணையற்ற, தோழமையற்ற, குடியிருப்புகளற்ற

loneliness *(n)* : solititude, தனிமை

lonely *(adj)* : alone, without companions, solitude, far from inhabited place, தனிமையான, ஆளரவ மில்லாத

long *(adj)* : lengthy, drawn out, நெடிய, நீளமான, நீண்ட; *(adv)* : for a long time, நீண்டகாலமாக; *(v)* : to have a desire for, விருப்பம் கொள்

longevity *(n)* : long life, நீண்ட வாழ்நாள், நீடுவாழ்வு

longing *(n)* : craving, desire, மிகு ஆவல், விருப்பம்; *(adj)* : desirous, ஆவலுடைய, விருப்பமுடைய

longitude *(n)* : distance, from east to west of a given meridianal length, நிரை கோடு, நீளப்பாங்கு, நீள வாட்டம்

look *(v)* : to see, to observe, பார், கவனி; *(n)* : seeing, பார்த்தல், பார்வை, நோட்டம்

loom *(n)* : a weaving machine, நெசவுத்தறி; *(v)* : to appear indistinctly or in a threatening way, தெளிவின்றித் தோன்று, அச் சுறுத்தும் வகையில் தோன்று

loop *(n)* : shape, formed by a curve crossing itself, வளையம், கண்ணி

loophole *(n)* : a hole in a wall, way of escape, மதிலில் உள்ள சிறு துளை, மதில் துளை, தப்பும் வழி

loose *(adj)* : unfastened, not tight, free, கட்டற்ற, தளர்ச்சியான, தடையற்ற; *(v)* : untie, make loose, set free, கட்டவிழ், தளர்த்து, விட்டு விடு, கட்டுப்பாட்டை அகற்று

loosen *(v)* : make loose, unfasten, relax, தளர்த்து, கட்டவிழ், நெகிழ்த்து

loot *(n)* : plunder, கொள்ளை, வழிப்பறி; *(v)* : to plunder, கொள்ளையடி

lop *(v)* : to hang down, to cut away, தொங்க விடு, வெட்டு

lope *(v)* : move along with long easy steps, தளரச்செய்

loquacious *(adj)* : talkative, அரட்டையடிக்கிற

lord *(n)* : the title given to a noble man, a person of rank and authority, பெருமகன், அண்ணல், தலைவர்; *(v)* : to rule over, மேலாண்மை செய்

lore *(n)* : learning, doctrine, புலமை, கல்வியறிவு, கோட்பாட்டுத் தொகுதி

lorgnette *(n)* : an opera glass with a handle, ஒருவகைத் தொலை நோக்கி

lorn *(adj)* : desolate, கைவிடப் பட்ட, தனிமையான

lorry *(n)* : a four wheeled goods wagon, சுமை உந்து

lose *(v)* : to misplace, to waste, to miss, (the train, etc.,) to suffer damage or defect, தொலைத்துவிடு, வீணாக்கு, (ரயில்வண்டி போன்ற வற்றைத்) தவறவிடு, சேதமுறு, இழந்துவிடு, தோல்வியடை

lot *(n)* : a large quantity, மொத்தம், பெரிய அளவு, பங்கு

lotion *(n)* : a medicinal liquid for washing, கழிவு நீர்மம்

lottery *(n)* : a game of chance, prize giving by lot, சூதாட்டம், பரிசுக் குலுக்கல்

lotus *(n)* : water-lily, தாமரை

loud *(adj)* : noisy, showy, உரத்த, படாடோப

loud-speaker *(n)* : a sound amplifier, ஒலிபெருக்கி

louis *(n)* : an old French coin, முற்கால பிரெஞ்சு நாணயம்

lounge *(v)* : to lie back at one's ease, idle away, ஓய்வாகச் சாய்ந்திரு, சோம்பியிரு; *(n)* : a kind of sofa, a room for sitting at ease, சாய் விருக்கை, ஓய்வு அறை

louse *(n)* : a small wingless parasite found on bodies of animals, பேன், உண்ணி

love *(n)* : affection, regard, (in games) no score, அன்பு, காதல், மதிப்பு, எண்மானம் இல்லா ஆட்டம்; *(v)* : have great affection for, to delight in, அன்பு காட்டு, காதலி, நுகர்ந்து மகிழ்

lovely *(adj)* : charming, delightful, கவர்ச்சியான, அழகான, மகிழ்ச்சி தரும்

lover *(n)* : one who loves, a sweetheart, காதலர், ஆசைக்குகந்தவர், அன்புக்குகந்தவர்

low *(adj)* : of little elevation, not notable, தாழ்வான, தாழ்ந்த, மதிப்பற்ற, சிறப்பற்ற; *(adv)* : cheaply, softly, not loudly, இழிவாக, மெல்ல, தாழ்குரலில்; *(n)* : something low, sound made by cows, தாழ்வானது, குறைந்தது, பசுவின் கதறல்; *(v)* : to cry like a cow, பசுவைப்போல் கத்து

lower *(adj)* : still further low, கீழுள்ள, தாழ்ந்த; *(v)* : to humble or degrade, தாழ்த்து, கீழே இறக்கு, படிப் படியாகக் குறை

lowly *(adj)* : humble, simple, modest, பணிவுள்ள, எளிய, அடக்க முடைய

loyal *(adj)* : faithful, நம்பிக்கைக் குரிய, பற்றுறுதியுடைய

loyalty *(n)* : faithfulness, நம்பிக்கை, வாய்மையுடைமை, பற்றுறுதிக் கொள்கை

lozenge *(n)* : a small sweetmeat, any diamond shaped figure, இனிப்பு பண்டம், சாய் சதுர வடிவம்

lubber, lubbard *(n)* : a clown, clumsy, or lazy fellow, பட்டிக் காட்டான், அருவருப்பான உருவமுடையவன், முட்டாள்

lubricant *(n)* : oil or grease used for reducing friction, மசகு எண்ணெய், உயவுப் பொருள்

lubricate *(v)* : to make smooth by removing friction, மசகிடு, உயவிடு

lucerne *(n)* : a fodder plant, கால் நடைத் தீவன செடி வகை

lucid *(adj)* : clear, bright, transparent, பிரகாசமான, தெளிவான, நன்கு விளங்குகிற

lucifer *(n)* : the morning star, Satan or chief of rebel angel, விடிவெள்ளி, சைத்தான்

luck *(n)* : future, fate, chance, நற் பேறு, விதி, வாய்ப்பு

lucky *(adj)* : fortunate, நற்பேறுடைய

lucrative *(adj)* : giving gain, profitable, நற்பலன் தரும், ஆதாயம் அளிக்கிற

lucre *(n)* : gain, profit, நற்பலன், ஆதாயம்

ludicrous *(adj)* : silly, laughable, கேலியான, பொருந்தாத, நகைப் புக்கிடமான

luff *(v)* : to turn a ship towards the wind, கப்பலைக் காற்றுத் திசை யில் திருப்பு

lug *(v)* : to drag, இழு, வலித்து இழு

luggage *(n)* : the personal baggage of a traveller, பயணமுடிச்சு.

lugubrious *(adj)* : mournful. முடைய

lugworm *(n)* : worm found in the sea-shore, கடற்கரையோரப் புழு

lull *(n)* : an interval of calm, or silence, அமைதி வேளை, ஓய்வமைதி; *(v)* : to sooth or calm, to make sleep, அமைதிப் படுத்து, தூங்கவை

lullaby *(n)* : a song to quieten children, a cradle song, தாலாட்டு, தாலாட்டுப் பாட்டு

lumbago *(n)* : rheumatic pain in the back, இடுப்புவாத நோய்

lumbar *(n)* : pertaining to the loins, இடுப்பு சார்ந்த

lumber *(n)* : timber, any useless heavy material, தடித்துண்டு, கழிவுப் பொருள்கள்; *(v)* : to move heavily, to fill with useless things, தட்டுத் தடுமாறி செல், அருவருப்பான தோற்றத்துடன் இயங்கு, குப்பை கூளம் குவி

luminary *(n)* : a body giving light, a great person, ஒளிப்பிழம்பு, புகழ் வாய்ந்தவர்

luminous *(adj)* : shining, clear, ஒளி வழங்கும், விளக்கமான

lump *(n)* : a small mass, கட்டி; *(v)* : form into a mass, கட்டியாக்கு, ஒன்றுசேர்

lunacy *(n)* : insanity, madness, கிறுக்கு, பைத்தியம்

lunar *(adj)* : pertaining to the moon, நிலவுக்குரிய

lunatic *(n)* : a mad man, கிறுக்கர், பைத்தியம் பிடித்தவர்; *(adj)* : mad, கிறுக்கான, பைத்தியமான

lunch, luncheon *(n)* : a meal taken between breakfast and dinner, a midday meal, நண்பகலுணவு; *(v)* : to take lunch, பகலுணவு அருந்து

lung *(n)* : breathing organ, நுரையீரல்

lunge *(n)* : a sudden push, திடீரென்று பாய்ந்து செல்

lupin *(n)* : a garden plant, தோட்டச் செடி வகை

lurch *(v)* : to shift the ship to one side, கப்பலை ஒரு பக்கமாகச்சரி; *(n)* : a sudden roll of a ship, (கப்பல்) திடீரென்று ஒரு பக்கத்தில் சாய்தல்

lure *(n)* : something that attacks, கவர்ந்திழுக்கும் பொருள்; *(v)* : attack, tempt, கவரு, தூண்டு

lurid *(adj)* : gloomy, ghostly, horrible, வெளிறிய, பேய் போன்ற, கோரமான

lurk *(v)* : to lie in wait, to lie, concealed, காத்திரு, மறைந்திரு, பதுங்கியிரு

luscious *(adj)* : delicious, அருஞ் சுவையுடைய

lush *(adj)* : fresh, rich, or juicy, (of grass), புதிய, வளமான, செழிப்பான

lust *(n)* : mean sexual desire, காமம்; *(v)* : to have evil desire, to crave immoderately, காமுறு, மிகு விருப்பம் கொள்

lustre *(n)* : brightness, splendour, பளபளப்பு, பேரொளி

lute *(n)* : a stringed musical instrument, நரம்பிசைக் கருவி

luxuriant *(adj)* : rich in growth, abundant, கொழுத்து வளர்ந்துள்ள, மிகையான

luxurious *(adj)* : pleasurable, fond of luxury, சொகுசான, ஆடம்பர வாழ்க்கையை விரும்புகிற

luxury *(n)* : anything more than necessary, சொகுசு, ஆடம்பரம்

lyddite *(n)* : an explosive, ஆற்றல் மிகுந்த வெடிமருந்து

lying *(adj)* : falsifying, being in a flat position, பொய் பேசுகிற, ஏமாற்றுகிற, படுத்திருக்கிற

lymph *(n)* : a colourless fluid contained in animal bodies. நிணநீர்

lynch *(v)* : to judge and punish without legal trial, விசாரணையின்றித் தீர்ப்பளி

lynx *(n)* : short tailed wild animal of the cat family, பூனையினக் காட்டு விலங்கு

lyre *(n)* : stringed musical instrument like the harp, யாழ் போன்ற

நரம்பிசைக் கருவி

lyric *(n)* : a poem to be sung, தன்னுணர்ச்சிப் பாட்டு

lysol *(n)* : a liquid used as an antiseptic and disinfectant, நச்சுத் தடை மருந்து, தடுப்பு மருந்து

M

macaroon *(n)* : cake or biscuit made chiefly of almonds and sugar, சர்க்கரை, வாதுமை சேர்த்துச் செய்யப்படும் அப்பம்

mace *(n)* : a heavy club-like weapon carried before persons in authority, the cover of the nutmeg, கட்டியக் கோல் அல்லது கதை, சாதிப் பத்திரி

machination *(n)* : an artful plan for doing evil, contrivance, சதி, சூழ்ச்சி

machine *(n)* : a contrivance producing action of force, எந்திரம்

machinery *(n)* : machines in general, work of a machine, method, organization, எந்திரங்கள், எந்திரங்களின் செயல்முறை, நிறுவனம்

mackintosh, macintosh *(n)* : a rain coat, மழைச்சட்டை

mad *(adj)* : insane, furious, பித்துப் பிடித்த, அறிவற்ற

madam *(n)* : a respectful form of addressing a lady, மாதரைக் குறிக்கும் மரியாதை விளி

madden *(v)* : to make mad or angry, பைத்தியமாக்கு, வெறி யூட்டு, சினமூட்டு

made *(v)* : past tense and past participle of make, 'make' என்பதன் இறந்தகால, இறந்தகால முடி வெச்ச வடிவம்

maelstrom *(n)* : great whirlpool, பெரிய நீர்ச்சுழி

magazine *(n)* : a periodical, military store-house, கால வெளியீடு, தளவாடக் கிடங்கு

magenta *(n)* : a colour between pink and red, வெளிர் சிவப்பு நிறம்

maggot *(n)* : a small worm found in rotten fruit or meat, கெட்டுப் போன உணவுப் பண்டங்களில் உருவாகும் புழு

magic *(n)* : witchcraft, enchantment, மாயவித்தை, மந்திரம்

magician *(n)* : an enchanter, one skilled in magic, மந்திரவாதி, மாயவித்தைக்காரன்

magic-lantern *(n)* : an optical instrument which throws pictures on a screen, படவிளக்குக் கருவி

magistrate *(n)* : a public officer with judicial powers, (சட்ட) நடுவர்

magnanimity *(n)* : generosity, broad-mindedness, கருணை, பெருந் தன்மை

magnanimous *(adj)* : generous, broad-minded, கருணையுடைய, பெருந்தன்மையான

magnate *(n)* : a man of rank or influence, மேம்பாடுடையவர், பெரிய மனிதர்

magnet *(n)* : a loadstone, காந்தம்

magnetise *(v)* : to influence, to attract, give magnetic properties to, வசீகரம் செய், கவரு, காந்த இயல்பூட்டு

magnetism *(n)* : the part of science which deals with magnets, power of attraction, காந்தவியல், காந்தக் கவர்ச்சி

magneto *(n)* : an electrical apparatus for producing electricial sparks that work the engine, தனி நிலைக் காந்த மின்னாக்கி

magnificent *(adj)* : splendid, great in deeds or appearance, சிறந்த, உயர்ந்த, பகட்டான

magnify *(v)* : enlarge, பெரிதாக்கு

magnitude *(n)* : size, greatness, importance, அளவு, சிறப்பு, முக்கியத்துவம்

mahout *(n)* : elephant driver, யானைப்பாகன்

maid *(n)* : girl, female, servant, பெண், பணிப் பெண்

maiden (n) : a maid, பெண், திடல், விளையாட்டுத் திடல்; *(adj)* : pure, unmarried, happening for the first time, தூய, மண மாகாத, முதல் தடவையாக நிகழ்கிற

mail *(n)* : armour, post, கவசம், அஞ்சல்; *(v)* : protect with armour, send by post, கவசம் பூட்டு, அஞ்சல் வழி அனுப்பு

maim *(v)* : to injure, to make lame or cripple, காயப்படுத்து, முடமாக்கு, ஊனமாக்கு

main *(adj)* : principle, chief, தலைமை யான, முதன்மையான; *(n)* : the chief part, the ocean, chief passage for supply of water, power etc., முதன்மை நிலை, சமுத்திரம், தலைமை வழி

mainland *(n)* : the land as distinct from sea, பெருநிலப் பகுதி

mainspring *(n)* : chief spring, chief cause of action, தலைமைச் சுருள், முக்கியச் சுருள், மூலவிசை

mainstay *(n)* : the main rope which stretches forward from the top of the mast or post, chief support, பாய் மரத்தை இழுத்துக் கட்டியிருக்கும் கயிறு, மூலாதாரம்

maintain *(v)* : support, to keep in good working order, to continue, ஆதரி, காப்பாற்று, பேணு, தொடர்ந்து செயலாற்று

maize *(n)* : a kind of corn, சோளம்

majestic *(adj)* : grand, imposing, கம்பீரமான, மாட்சிமை பொருந்திய

majesty *(n)* : a royal title, dignity, மாட்சிமை, கம்பீரம்

major *(adj)* : greater, elder, பெரிதான, மூத்த; *(n)* : a person 21 years of age, a military officer, வயது வந்தவர், படைத்துறைத் தலைவர்

majority *(n)* : the large number, age of major, a major's rank, பெரும் பான்மை, பெரும்பாலோர், உரிமை வயது, படைத்துறைத் தலைமைப் பதவி

make *(v)* : to form, construct, செய், உருவாக்கு; *(v)* : manufacture, shape, உற்பத்தி, உருவம்

making *(n)* : process of building up, செயலாக்கம், உருவாக்கம்

maladministration *(n)* : a bad government or administration, முறையற்ற ஆட்சி அல்லது மேலாண்மை

maladroit *(adj)* : clumsy, bungling, தவறான, குளறுபடியான
malady *(n)* : sickness, நோய்
malaise *(n)* : a feeling of sickness, உடல் நலம் குன்றிய நிலை
malcontent *(n)* : discontented and rebellious person, மனக் குறை யுடையவர், கிளர்ச்சிக்காரர்
male *(adj)* : masculine, ஆண் பாலைச் சேர்ந்த; *(n)* : a human being or animal that impregnates, ஆண், ஆணினம்
malediction *(n)* : a curse, வசை மொழி
malefactor *(n)* : an evildoer, a criminal, தீங்கு செய்பவர், குற்றவாளி
malevolent *(adj)* : wishing ill to others, தீய எண்ணமுள்ள
malformation *(n)* : faulty formation, தோற்றக் கேடு, பொருத்தமில்லாத அமைப்பு, தவறான ஆக்கம்
malice *(n)* : ill-will, enmity, தீய எண்ணம், பகைமை எண்ணம்
malicious *(adj)* : wicked, envious, கெட்ட, பொறாமையுள்ள
malign *(v)* : to talk ill or defame, அவதூறு சொல்
malignancy *(n)* : extreme malevolence, cancerous condition, கடுமையான வெறுப்புணர்ச்சி, புற்றுநோய் நிலை
malignant *(adj)* : spiteful, dangerous, cancerous, பகைமையுடைய, உயிருக்கு ஆபத்தான, புற்று நோய்த் தொடர்பான
malignity *(n)* : intense ill-will, hatred, மிகுந்த கெட்ட எண்ணம், ஆழ்ந்த வெறுப்புணர்ச்சி
malinger *(v)* : to pretend to be sick, நோயுற்றவர் போல் பாசாங்கு செய்
malison *(n)* : a curse, வசை மொழி, சாபம்
mall *(n)* : a big wooden hammer, sheltered path, கொட்டாப்புளி, சாலை வழி, நிழலுடைய, நடைபாதை
malleable *(adj)* : that can be hammered or pressed into new shapes, easily trained or adopted, தகடாக்கத்தக்க, அடித்து நீட்டக் கூடிய, வளைந்து கொடுக்கிற
mallet *(n)* : a small wooden hammer, மரச்சுத்தி
mallow *(n)* : wild plant with soft downy leaves, மென்மையான இலைகளையுடைய காட்டுச் செடி
malnutrition *(n)* : under feeding, ஊட்டக் குறைவு, சத்துக்குறை உணவு
malodorous *(adj)* : ill-smelling, கெட்ட வாடை வீசும்
malpractice *(n)* : wrong doing, தவறான செய்கை, கெட்ட வழக்கம்
malt *(n)* : barley or other grain prepared for brewing or distilling, ஊறவைத்து அரைத்த மாவு
maltreat *(v)* : treat roughly or unkindly, தவறாக நடத்து, துன்புறுத்து, வருத்து
mamma, mama *(n)* : mother, அம்மா
mammal *(n)* : an animal that feeds its young with its own milk, பாலூட்டி
mammon *(n)* : riches, god of wealth, செல்வந்தர், செல்வத்துக்குரிய கிரேக்கத் தெய்வம்
mammoth *(adj)* : immense, gigantic, மிகப்பெரிய; *(n)* : a large elephant now extinct, மரபற்றுப்போன கம்பிளியானை

mammy *(n)* : mother, அம்மா

man *(n)* : adult male human being, ஆண், ஆடவன்; *(v)* : to supply with men, to guard, ஆள்பலம் பெருக்கு, பாதுகாப்புச் செய்

manacles *(n)* : handcuff, கைவிலங்கு

manage *(v)* : control, make use of, அடக்கியாள், தக்கவாறு பயன் படுத்து

management *(n)* : skilful treatment, all those concerned in managing an industry, business, etc., செயலாட்சி, மேலாண்மை, நிர்வாகம்

manager *(n)* : one who looks after a business hotel, etc., one who controls, one who directs and manages, மேலாளர், செயலாட்சியாளர்

mandarin *(n)* : a high Chinese government official, an orange, a chinese language, சீன அரசு உயர் அலுவலர், ஒரு வகைக் கிச்சிலிப் பழம், சீன மொழி

mandate *(n)* : a command, a power given to act in the name of another, ஆணை, உரிமைக் கட்டளை

mandoline *(n)* : a stringed musical instrument, ஒரு நரம்பிசைக் கருவி

mandrake *(n)* : poisonous plant that brings sleep when eaten, உறக்க மருந்துப் பூண்டு வகை

mane *(n)* : the long hair on the neck of the lion, horse etc., பிடரி மயிர்

man-eater *(n)* : one who or that which eats man, மனிதரைத் தின்னும் உயிரினம்

manful *(adj)* : brave, determined, வீரமிக்க, மன உறுதியுள்ள

manganese *(n)* : a hard, brittle light grey metal, மங்கனீக

mange *(n)* : a skin disease in hairy animals, மயிரடர்ந்த விலங்குகளில் தோன்றும் தோல் நோய்

manger *(n)* : long open box to hold food for horses and cattle, கால் நடை, குதிரை ஆகியவற்றின் தீனித் தொட்டி

mangle *(n)* : a rolling ironing machine, துணிகளுக்குப் பெட்டிபோடும் ஒரு சுழல் பொறி; *(v)* : to smooth with a mangle, பெட்டிபோடு

mango *(n)* : an Indian tree, or its edible fruits, மாமரம், மாம்பழம்

mangrove *(n)* : a species of tree growing in muddy swamps on tropical coasts, வெப்ப மண்டலத்தில் வளரும் சதுப்பு நிலத்து மரம்

manhandle *(v)* : treat roughly with force, முரட்டுத்தனமாகக் கையாளு

mania *(n)* : violent madness, வெறி

maniac *(n)* : a mad man, வெறி பிடித்தவன்

manicure *(n)* : care of hands and fingernails, கைவிரல் நக ஒப்பனை

manifest *(adj)* : evident, obvious, தெளிவான, வெளிப்படையான; *(v)* : to show plainly, விளக்கு, தெளிவாக்கு; *(n)* :list of ship's cargo, கப்பலின் சரக்குப் பட்டியல்

manifesto *(n)* : a public declaration of what is going to be done, கொள்கை விளக்க அறிவிப்பு, திட்ட அறிவிப்பு

manifold *(adj)* : of many kinds, many in number, பல வகையான, பல படியான; *(v)* : make a number of copies on a machine, கருவிமூலம் பல படிகளை எடு

manila, manilla *(n)* : plant fibre used in making ropes, a kind of cigar, மணிலாச்சணல் கயிறு, மணிலாச் சுருட்டு

manipulate *(v)* : to work with the hands, manage skilfully and cunningly, கையால் செய், திறமையாகக் கையாளு, சூழ்ச்சித் திறத்துடன் நடத்து

mankind *(n)* : human race, மனித இனம்

mannequin *(n)* : a woman employed in a cloth shop who wears clothes to show buyers how they look, human figure made of wax, wood, etc., for the display of clothes, துணிக்கடைகளில் உடைகளை அணிந்து காட்டும் பெண், துணிக்கடை பொம்மை

manly *(adj)* : having the qualities of a man, bold, மனிதத் தன்மையுடைய, வீரமுடைய

manner *(n)* : way in which a person behaves in public, வகை, வழி வகை, வகை முறை, நடத்தை, பண்பு

mannerism *(n)* : a peculiarity of writing, speech behaviour, தனிப் பழக்கம், தனிப்பாங்கு

manners *(n)* : behaviour, நடத்தை, பழக்க வழக்கம்

manoeuvre *(v)* : to manage cunningly or cleverly, to move the troops, ஆட்சித் திறத்துடன் கையாளு, திறமையாக நடத்து, படை நடத்து;*(n)* : military action, intrigue, clever management, படைத்துறை நடவடிக்கை, சூழ்ச்சித் திறமையான மேலாண்மை

manor *(n)* : land belonging to a lord or squire, பண்ணை

man-power *(n)* : amount of men available for military or other service, ஆள்பலம்

mansion *(n)* : a large and stately house, மாளிகை, அரண்மனை

mantel *(n)* : an ornamental structure over a fire place in the living room, வீட்டுக் கூடத்தில் உள்ள தண்டையப் பலகை

mantle *(n)* : an outer garment, a net-like covering for a stove to make the flame brilliant, மேலாடை, விளக்கின் சுடர்வலை மூடி; *(v)* : put on a mantle, மூடு, வலை மூடியிடு

manual *(adj)* : pertaining to the hand, done by hand, கை சார்ந்த, கையால் செய்யப்பட்ட

manufacture *(v)* : to produce, உருவாக்கு, விளைவி; *(n)* : things produced, the making of goods, உற்பத்திப் பொருள், உருவாக்கம், உற்பத்தி

manumit *(v)* : to set free from slavery, அடிமைத்தளையிலிருந்து விடுவி

manure *(n)* : fertilizer, உரம்; *(v)* : apply manure to, உரமிடு

manuscript *(n)* : written matter, கையெழுத்துப்படி

many *(adj)* : large in number, பல, ஏராள்மான; *(n)* : a large number, பல, பலர்

map *(n)* : a sketch showing the earth's surface or a country, நாட்டுப்படம், உலகப்படம், நிலப்படம்

maple *(n)* : a tree grown for timber and ornament, sugar made from one kind of maple, அழகுடைய மரவகைக் கட்டை, சர்க்கரை தரும் மர வகை

mar *(v)* : to spoil, to ruin, கெடு, பாழ்தாக்கு

maraud *(v)* : to wander seeking plunder, கொள்ளையடி, திருடித்திரி

marauder *(n)* : a plunderer, கொள்ளைக்காரன், திருடன்

marble *(n)* : a kind of limestone that takes a high polish used for building of sculpture, சலவைக்கல்

march *(v)* : to move in regular steps, அணிவகுத்துச் செல்; *(n)* : procession, the third month of the English year, அணிவகுப்பு, ஆங்கில ஆண்டின் மூன்றாவது மாதம்

marches *(n)* : the borders of a country, எல்லைப்புறப் பகுதி

mare *(n)* : the female horse, பெண் குதிரை

margarine *(n)* : butter substitute made from animal or vegetable fats, விலங்கு அல்லது காய்கறிக் கொழுப்பெண்ணெய்

margin *(n)* : the blank edge near the border of a page, an edge, காகிதத்தின் பக்க விலக்கு, ஓரம்

margosa *(n)* : the neem tree, வேம்பு

marigold *(n)* : a plant with the yellow flower, பொன் வண்ண மலர்ச் செடி

marine *(adj)* : pertaining to the sea, கடல் சார்ந்த; *(n)* : a soldier serving on a ship, கடற்படை வீரன்

mariner *(n)* : a sailor, கப்பலோட்டி

marionette *(n)* : a puppet or doll moved by strings, பொம்மலாட்டம்

marital *(adj)* : having to do with a husband, pertaining to marriage, கணவனுக்குரிய, திருமணத் திற்குரிய

maritime *(adj)* : pertaining to the sea and shipping, கடல் சார்ந்த, கப்பல் சார்ந்த

mark *(n)* : a sign, an impression, a badge, target, a German coin worth nearly one shilling, குறி, அடையாளம், முத்திரை, இலக்கு, ஜெர்மன் நாணய வகை; *(v)* : to put a mark, அடையாளம் இடு

marked *(adj)* : easily noticed distinguished கவனிக்கத்தக்க, சிறப்பான

market *(n)* : a public place for trade, சந்தை, அங்காடி

marketable *(adj)* : that can be bought and sold, வாணிபம் செய்யத்தக்க

marksman *(n)* : one clever at shooting, குறி தவறாது சுடுபவன் அல்லது எய்பவன்

marmalade *(n)* : a jam made from oranges, grapes or lemon, பழப்பாகு

maroon *(n)* : a brown red colour, பழுப்புச் சிவப்பு நிறம்; *(v)* : to abandon in an uninhabited island, நாடு கடத்தும் தண்டனையாகத் தனியாக ஒரு தீவில் விட்டு விடு

marquess *(n)* : a title or rank above a duke, பிரபுவின் பட்டம்

marriage *(n)* : wedding, திருமணம்

marrow *(n)* : soft matter contained in bones, essense, எலும்புச் சோறு

marry *(v)* : wed, திருமணம் செய்து கொள்

Mars *(n)* : a planet, the god of war of the Romans, செவ்வாய் கிரகம், ரோமர்களின் போர்க் கடவுள்

marsh *(n)* : a low wet ground, சதுப்பு நிலம்

[illegible] high officer in the [illegible] regulating ceremonies, [illegible] தலைமை அதிகாரி

mart *(n)* : a place for public trade, சந்தை, பொது விற்பனை இடம்

martello *(n)* : a round coastfort, சிறு வட்டவடிவக் கடற்கரைக் கோட்டை

marten *(n)* : a kind of weasel, ஒரு வகைக் கீரி

martial *(adj)* : relating to war, bold, போர் தொடர்பான, வீரமுடைய

martin *(n)* : a small bird of swallow kind, தூக்கணாங் குருவி வகை

martinet *(n)* : strict disciplinarian, கண்டிப்பாளர்

martyr *(n)* : one who suffers for his faith, கொள்கைக்காகத் துன்பங்களை ஏற்பவர், கொள்கைவாதி

martyrdom *(n)* : the sufferings of a martyr, கொள்கைக்காகத் தியாகம் செய்தல்

marvel *(n)* : a wonder, வியப்பு; *(v)* : to wonder, வியப்படை

mascot *(n)* : person or thing that brings luck, நற்பேற்றினை விளைவிக்கும் ஆள் அல்லது பொருள்

masculine *(adj)* : pertaining to the male sex, ஆண்பாலுக்குரிய

mash *(v)* : to beat into a mixed mass, மசியலாக்கு, கூழாக்கு; *(n)* : malt mixed with hot water, a mixture of boiled grain, etc., given warm to cattle, horses, etc., சூடான கூழ், தீனி, கால்நடை ஆகிய வற்றிற்குப் பயன்படும் வெந்த தானியக் கலவை

mask *(n)* : a veil for the face, முகமூடி; *(v)* : cover the face, முகத்தை

mason *(n)* : a worker in stone or brick, கொத்தன், கல்தச்சன்

masonic *(adj)* : pertaining to masonry, கொத்த வேலைக்குரிய

masquerade *(n)* : a masked entertainment, முகமூடி, மாறுவேட நிகழ்ச்சி; *(v)* : to entertain in masks, to pretend as someone else, முக மூடி நடனம் ஆடு, மாறு வேடம் அணிந்து கொள்

mass *(n)* : a lump, a large number, amount of matter in a body, கட்டி, பொருள் திணிவு, பெரிய எண்ணிக்கை; *(v)* : collect together, concentrate, ஒரிடத்தில் சேகரி, பொருள் திணிவாக்கு

massacre *(n)* : murder, கொலை

massage *(n)* : the rubbing or pressing of parts of the body, உடம்பின் தசைகளையும், மூட்டுகளையும் தேய்த்து உருவி விடுதல்; *(v)* : rub or press the body, உடம்பை அமுக்கு, உருவு

massive *(adj)* : large, heavy, bulky, பெரிய, பளுவான, பெருத்த

mast *(n)* : the tall upright pole for a ship's sail, கப்பலின் பாய்மரம்

master *(n)* : a teacher, an expert, ஆசிரியர், வல்லுநர், தேர்ச்சியாளர்; *(v)* : to control over, to gain, அடக்கியாள், தேர்ச்சி பெறு

masterly *(adj)* : having supreme skill, கைதேர்ந்த, முதன்மைத் திறமுடைய

masterpiece *(n)* : the chief work or production of a person, ஒருவனது தலைசிறந்த படைப்பு

mastery *(n)* : sway, full bearing, skill, வெற்றி, தேர்ச்சி, திறமை

masticate *(v)* : to chew, மென்று தின்னு

mastiff *(n)* : a kind of watch dog, ஒரு வகை வேட்டை நாய்

mat *(n)* : flat material of fibre, straw, etc., பாய்

matador, matadore *(n)* : a person who kills the bull in the sport of bull-fighting, எருதுச் சண்டையில் எருதைக் கொல்லுபவன்

match *(n)* : a small piece of wood or wax tipped with a cumbustible substance, a game, mate, தீக்குச்சி, ஆட்டம், இணை; *(v)* : join so as to suit, marry, compete with, பொருத்தமாக இணை, மணம் செய்து கொள், போட்டியிடு, எதிர்த்து நில்

matchlock *(n)* : a gun fired by a match, ஒரு வகைத் துப்பாக்கி

mate *(n)* : a companion, husband or wife, an official in a ship. தோழன், இணை (கணவன் அல்லது மனைவி), கப்பல் அலுவலர்; *(v)* : to marry, join in pairs, மணம் செய், இணை சேர்

material *(n)* : substance out of which anything is made, மூலப்பொருள்; *(adj)* : essential, composed of matter, தேவையான, பொருள் வகையான

materialize *(v)* : to happen, to be fulfilled, உருவாக்கு, நடத்து, முழுமையாக்கு

maternal *(adj)* : pertaining to mother, தாய்க்குரிய

maternity *(n)* : motherhood, தாய்மை

mathematician *(n)* : one well versed in mathematics, கணித வல்லுநர், கணிதவியலார்

mathematics *(n)* : the science of numbers, கணிதவியல்

matinee *(n)* : a performance, entertainment in the day time, பகல் காட்சி

matricide *(n)* : murderer of one's own mother, killing of one's own mother, தாயைக் கொலை செய்பவன், தாய்க் கொலை

matriculate *(v)* : to pass an examination which gives the right to enter a university as a student, admit as a member of the university, பல்கலைக்கழக நுழைவுத் தேர்வில் வெற்றி பெறு, பல்கலைக்கழக நுழைவுரிமை பெறு

matrimonial *(adj)* : pertaining to marriage, திருமணத்தைச் சார்ந்த

matrimony *(n)* : திருமணம்

matrix *(n)* : a mould in which metal is poured to be shaped, அச்சு வார்ப்புரு

matron *(n)* : lady superintendent, கண்காணிப்பாளர் (பெண்)

matter *(n)* : a substance, பருப் பொருள்; *(v)* : to be of importance, முக்கியமாகு

mattock *(n)* : a pick-axe, மண் கொத்தி

mattress *(n)* : a soft bed or cushion filled with cotton, wool, etc., மெத்தை

mature *(adj)* : fully developed, ripe, முழு வளர்ச்சி அடைந்த, பழுத்த, பருவமடைந்த; *(v)* : to grow in full stature, to ripen, முழு வளர்ச்சி அடை, பருவமெய்து

maturity *(n)* : full growth, ripeness, முழு வளர்ச்சி, பருவ நிறைவு

maudlin *(adj)* : sentimental in a tearful way, half drunk, எளிதில் உணர்ச்சிவசப்பட்டுக் கண்ணீர் விடும், குடி வெறியில் அழுகிற

maul *(v)* : hurt or injure badly by rough treatment, அடித்துக் காயப் படுத்து, முரட்டுத்தனமாகக் கையாளு; *(n)* : a heavy wooden hammer, பெரிய சம்மட்டி

maund *(n)* : a measure of weight once used in India, மணங்கு

mauve *(n)* : pale purple colour, ஊதா நிறம்

mavis *(n)* : song - thrush, பாடும் குருவி

maw *(n)* : animal's stomach, விலங்கு இரைப்பை

mawkish *(adj)* : foolishly sentimental, எளிதில் உணர்ச்சி வசப்படுகிற

maxim *(n)* : general principle, a wise saying, மூதுரை, நீதிமொழி

maximum *(n)* : the greatest number or quantity, the highest point, பெருமம், உச்சம்

may *(aux v)* : a word expressing probability, permission of wish, கூடும், செய்யலாம், இருக்கலாம்; *(n)* : the fifth month of the English calendar, ஆங்கில ஆண்டின் ஐந்தாவது மாதம்

may be *(adv)* : perhaps ஒரு வேளை, சில வேளை

mayor *(n)* : head of municipal corporation, மாநகர் முதல்வர்

maze *(n)* : a place full of windings, a puzzle, சிக்கல் நிறைந்த வழி, புதிர்; *(v)* : to bewilder, திகைக்கவை

me *(pron)* : objective case of I, என்னை, எனக்கு

mead, meadow *(n)* : grassland, a drink made from honey, பசும் புல்வெளி, தேன் பானம்

meagre *(adj)* : scanty, lacking in flesh, அற்பமான, ஒல்லியான

meal *(n)* : food that is taken at one time, flour, ஒரு வேளை உணவு,

mean *(adj)* : low in thought or action, இழிந்த; *(n)* : average, medium, சராசரி, இடைநிலை; *(v)* : intend, signify, கருது, நோக்கம் கொள், குறி

meaning *(n)* : what is conveyed by a word or statement, significance, பொருள், கருத்து

meaningless *(adj)* : having no meaning or significance, பொருளற்ற, சிறப் பற்ற

means *(n)* : resource, instrument or agency, வரும்படி, வழிவகை, கருவி, பிழைப்புவழி

meant *(v)* : past tense and past participle of mean, 'mean' என்பதன் இறந்தகால, இறந்தகால முற்றெச்ச வடிவம்

meantime, meanwhile *(adv)* : the interval between two happenings, இடைப்பட்ட வேளையில், இடைக் காலத்தில்

measles *(n)* : a contageous disease, தட்டம்மை

measure *(n)* : dimension of a thing, a standard quantity, அளவு, பொது அளவு; *(v)* : to find out the quantity or size of a thing, நீள அகல உயர அளவுகளைக் கண்டு பிடி

measurement *(n)* : dimension, the act of measuring, அளவு, அளத்தல்

meat *(n)* : flesh of animals eaten as food, any food, இறைச்சி, உணவுப் பண்டம்

mechanic *(n)* : an artisan, கலை வினைஞர், எந்திர வல்லுநர்; *(adj)* : pertaining to machines, எந்திரம் சார்ந்த

mechanics *(n)* : the science of action at force, எந்திரவியல்

mechanize *(v)* : cause to work on machinery, give a mechanical character to, எந்திர ஆற்றலால் இயக்கு, எந்திர மயமாக்கு

medal *(n)* : a piece of metal in the form of a coin with inscription on its faces issued as an award, பதக்கம்

meddle *(v)* : to interfere, தலையிடு, குறுக்கிடு

meddlesome, meddling *(adj)* : interfering, தலையிடுகிற

medi(a)eval *(adj)* : pertaining to the middle ages, இடைக்காலத்திற் குரிய

mediate *(v)* : to settle a dispute, இணக்கம் ஏற்படுத்து

medicine *(n)* : any substance that, cures, மருந்து

medicinal *(adj)* : possessing the healing power, மருத்துவ இயல் புடைய

mediocre *(adj)* : ordinary, moderate, சாதாரணமான, இடைத்தரமான

meditate *(v)* : think over deeply, ஆழ்ந்து சிந்தி

meditation *(n)* : serious thought, worshipping god in silence by thinking deeply about him, ஆழ்ந்த சிந்தனை, தியானம்

medlar *(n)* : a small tree bearing edible sour fruit, சிறிய ஆப்பிள் இன மரம்

medley *(n)* : a confused mixture of thing, a miscellany, கலவை, கதம்பம்

need *(n)* : reward, பரிசு, புகழ்

neek *(adj)* : mild and gentle, submissive, பணிவான, அடக்கமான, கீழ்ப்படிதலுள்ள

meet *(v)* : to come face to face, to pay, to be suitable, assemble, சந்தி, எதிர்ப்படு, பொருந்து, கூடு; *(n)* : a meeting, சந்திப்பு, கூட்டம்; *(adj)* : right, proper, சரியான, பொருத்தமான, தகுதி வாய்ந்த

meeting *(n)* : a getting together, சந்திப்பு, கூட்டம், எதிர்படுதல்

megalith *(n)* : a large stone, பெரிய கல்

megaphone *(n)* : a large speaking-horn, ஒலிபெருக்கி

melancholy *(n)* : gloom, dissection, வருத்தம், மனச்சோர்வு

melee *(n)* : confused struggle, a mix-up, கைகலப்பு, கூட்டம்

mellow *(adj)* : soft, ripe, mature, pleasant, மென்மையான, பழுத்த, முதிர்ந்த, இனிய

melodious *(adj)* : pleasing to the ear, காதுக்கினிய

melodrama *(n)* : a sensational play, உணர்ச்சி நாடகம்

melody *(n)* : sweet music, air or tune, இன்னிசை, பண்

melon *(n)* : a large edible juicy fruit, முலாம்பழம்

melt *(v)* : become liquid through heating, be softened, உருகு, இளகு

member *(n)* : a part, one belonging to a group, உறுப்பு, உறுப்பினர்

membrane *(n)* : a thin skin which covers the parts of the body, a thin sheet like covering, சவ்வு, மெல்லிய தோல்

memento *(n)* : a souvenir, a token, நினைவுக் குறிப்பு, நினைவுச் சின்னம்

memoir *(n)* : a short biography, ஒரு வரது சுருக்கமான வாழ்க்கைக் குறிப்பு

memorable *(adj)* : famous, worthy of remembrance, புகழ்பெற்ற, நினைவில் வைக்கத்தக்க

memorandum *(n)* : a record, a short note, பதிவுக் குறிப்பு, சிறு குறிப்பு

memorial *(n)* : monument, something which keeps a person or events of the past in remembrance, நினைவுச் சின்னம்

memorize *(v)* : to learn by heart, to keep in memory, மனப்பாடம் பண்ணு, நினைவில் வைத்துக் கொள்

memory *(n)* : the power to remember, something remembered, நினைவாற்றல், நினைவு

men *(n & pl)* : plural form of man, 'man' என்பதன் பன்மை வடிவம்

menace *(v)* : to frighten, அச்சுறுத்து; *(n)* : a threat, அச்சுறுத்தும் செய்தி

menagerie *(n)* : a collection of wild animal, (காட்டு) விலங்குக் காட்சி சாலை

mend *(v)* : to set right something broken or torn, திருத்து, சரிசெய், பழுது பார்; *(n)* : a part which has been repaired, பழுதுபார்க்கப் பட்டபகுதி

mendacious *(adj)* : false, untruthful, பொய்யான, ஏமாற்றுகிற

mendacity *(n)* : falsehood, untruthfulness, பொய்க்கூற்று, பொய்மை

mendicant *(n)* : a beggar, பிச்சைக் காரன்; *(adj)* : begging, பிச்சை எடுக்கும்

menial *(adj)* : servile, பணிபுரியும்: *(n)* : a household servant, வீட்டுப் பணியாள்

menses *(n & pl)* : monthly discharge from the uterus of a woman, மாத விலக்கு, மாதவிடாய்

mensuration *(n)* : the science of measuring, அளவையியல்

mental *(adj)* : pertaining to the mind, done in the mind, மனம் சார்பான, மனத்தால் செய்யப்பட்ட

mentality *(n)* : characteristic attitude of a person's mind, மனப் போக்கு, மனப்பாங்கு

menthol *(n)* : solid white substance like camphor used for colds etc., பச்சைக் கற்பூரம்

mention *(v)* : to refer, to speak about, குறிப்பிடு, தெரிவி; *(n)* : a short statement, குறிப்பீடு

mentor *(n)* : an adviser and helper, அறிவுரையாளர், உதவுபவர்

menu *(n)* : list of dishes served at a meal, உணவுப் பட்டியல்

mercantile *(adj)* : pertaining to trade, or traders, வாணிகத்துக்குரிய

mercenary *(adj)* : greedy, hired, பேராசையுடைய, கூலிக்காக வேலை செய்யும்; *(n)* : one who or that which is hired, கூலிப்பணியாள்

merchandise *(n)* : tradable goods, வாணிகப் பொருள்

merchant *(n)* : a trader, வணிகன்

merciful *(adj)* : feeling mercy, கருணையுள்ள, இரக்கமுள்ள

merciless *(adj)* : pitiless, இரக்கமற்ற, கருணையற்ற

mercury *(n)* : silvery liquid metal, planet nearest to the sun, பாதரசம், புதன் கோள்

mercy *(n)* : pity, kindness, இரக்கம், கருணை

mere *(adj)* : simple, வெறும்; *(n)* : a pond, குட்டை

merely *(adv)* : simply, வெறுமனே
meretricious *(adj)* : attractive but false, போலிக் கவர்ச்சியுடைய
merge *(v)* : to sink, to join together, அமிழ்த்து, இணை
merger *(n)* : a joining together, இணைப்பு
meridian *(n)* : an imaginary circle drawn round the earth passing through the north and south poles, noon, the highest point of success, வான்கோள வட்டம், நடுப்பகல், வெற்றியின் உச்சகட்டம்
merit *(n)* : quality of deserving well, goodness, that which is deserved, தகுதி, நன்மை, மதிப்பு; *(n & pl)* : the good qualities, நற்பண்புகள் *(v)* : to deserve, தகுதியாகு
meritorious *(adj)* : having merit, பாராட்டுக்குரிய
mermaid *(n)* : an imaginary sea-woman with lower part of the body like a fish, கடல்கன்னி (இடையின் கீழ் மீனுருவும் கொண்ட பெண்)
merriment *(n)* : gaiety, laughter, களிப்பு, மகிழ்ச்சி, வேடிக்கை
merry-go-round *(n)* : a revolving umbrella shaped frame with toy horses or seats for children to ride on, குடைராட்டினம்
mesh *(n)* : one of the spaces between the threads of a net or wire screen, net work, வலைக்கண், வலை; *(v)* : interlock, catch in a net, ஒன்றோடொன்று பொருந்தும்படி வை, வலையில் சிக்கவை
mess *(n)* : state of confusion, குழப்ப நிலை, உணவு, உணவு அறை, உணவு விடுதி; *(v)* : eat
message *(n)* : a communication sent from one person to another, தூதுச் செய்தி, தகவல் செய்தி
messenger *(n)* : one who carries a message, தூதுவர், தகவலாளர்
Messiah *(n)* : Jesus Christ, இயேசு நாதர்
met *(v)* : past tense and past participle of meet, 'meet' என்பதன் இறந்தகால, இறந்தகால முடிவெச்ச வடிவம்
metal *(n)* : a hard opaque fusible mineral ore, stone piece used as material for making roads, உலோகம், சாலை போட உதவும் சரளைக்கல்
metallurgy *(n)* : the art of refining metals, உலோகவியல்
metamorphose *(v)* : to transform, to alter the shape of, முழுதாக மாற்று, உருமாற்று
metamorphosis *(n)* : a transformation, உருமாற்றம், இயல் மாற்றம், பண்பு மாற்றம்
metaphor *(n)* : a figure of speech in which the words are used to indicate something different from the literal meaning, உருவகம்
mete *(n)* : a boundary stone, எல்லைக் கல்; *(v)* : to measure, அள, அளந்து பங்கிடு
meteor *(n)* : a shooting star falling from the sky, எரிமீன், எரி நட்சத்திரம்
meter *(n)* : measuring instrument, அளவுக்கருவி, மானி
methinks *(v)* : it seems to me, எனக்குத் தோன்றுகிறது
method *(n)* : way of doing, orderly arrangement, முறை, வகை, ஒழுங்கு
methought *(v)* : past tense of 'me think', 'me think' என்பதன் இறந்த கால வடிவம்

methylated spirit *(n)* : form of alcohol which quickly turns to vapour used for burning, cleaning, etc., எரி சாராயம்

meticulous *(adj)* : paying too great attention to small matters, careful and exact, மிக உன்னிப்பான, கவனமுடைய, நுட்பமுடைய

metre *(n)* : a unit of length, poetic measure, நீள அலகு, செய்யுளில் சீர்

metropolis *(n)* : chief city of a country, capital, முக்கிய நகரம், தலை நகரம்

mettle *(n)* : high spirit, strength of mind, எழுச்சி நிலை, மனவலிமை, உளக்கம்

mew *(n)* : a cat's cry, a sea fowl, பூனையின் 'மியாவ்' ஒலி, கடற்காகம்

miasma *(n)* : poisonous mist rising from the ground, நச்சு வளி

mica *(n)* : a transparent mineral substance which can be separated easily into thin layers, அபிரகம், மைகா, காக்காய் பொன்

mice *(n & pl)* : plural form of mouse, 'mouse' என்பதன் பன்மை வடிவம், எலிகள்

microbe *(n)* : a minute germ causing disease, நோய் நுண்ம உயிரி

micrometer *(n)* : instrument used for measuring small objects, நுண்மானி

microphone *(n)* : an electric sound amplifier, ஒலிவாங்கி

microscope *(n)* : a magnifying optical instrument, நுண்ணோக்கி

mid *(adj)* : middle, நடுவிலுள்ள, இடைத்தரமான

midden *(n)* : a rubbish heap, குப்பை மேடு

middle *(adj)* : equi-distant from both ends, மையமான, இடைப்பட்ட

middle-man *(n)* : a broker, தரகன்

midget *(n)* : a dwarf, குள்ளன்

midnight *(n)* : 12 O'clock at night, நள்ளிரவு

midst *(n)* : middle, நடு; *(adv)* : in the middle of, இடையில்; *(prep)* : among, இடையே

midway *(adj & adv)* : situated in the middle of way, half way, நடு வழியில், பாதி வழியில்

midwife *(n)* : a lady who assists a woman in child birth, பேறுகால மருத்துவச்சி

mien *(n)* : the appearance or expression of a person, aspect, தோற்றம், நடையுடை, சாயல்

might *(n)* : great power, வலிமை, ஆற்றல்; *(v)* : past tense of may, 'may', என்பதன் இறந்தகால வடிவம்

mightily *(adv)* : greatly, அதிக அளவில்

mighty *(adj)* : great, strong, important, மிகுதியான, ஆற்றல் மிக்க, வலிமையுடைய

migrate *(v)* : to move from one place to another, இடம் பெயர், குடி பெயர்

mike *(n)* : abbreviated form of micro phone, 'microphone' என்பதன் சுருக்க வடிவம்

milch *(adj)* : yielding milk, பால் தரும், கறவைக்குரிய

mild *(adj)* : soft, not severe, அமைதியான, கடுமையற்ற

mildew *(n)* : growth of tiny fungus forming on plants, leather, food, etc., பூஞ்சணம், பூஞ்சக்காளான்

mile *(n)* : measure of distance, மைல்

milestone *(n)* : a stone showing the distance in miles, an important event, மைல்கல், உச்சக்கட்ட நிகழ்ச்சி

militant *(adj)* : quarrelsome, warlike, சண்டையிடும், போர் விருப்ப முள்ள

military *(adj)* : having to do with the army, போர்சார்ந்த

milk *(n)* : a white liquid secreted by the female mammals as food for their young, பால்

milksop *(n)* : a spiritless man, ஆர்வ மற்றவன்

mill *(n)* : a machine for grinding, factory or work shop, அரவை எந்திரம், ஆலை, தொழிற்சாலை

millennium *(n)* : one thousand years, ஆயிரம் ஆண்டுக் காலம்

millet *(n)* : plant producing an edible grain, the grain, தினை, சாமை

milliard *(n)* : a thousand millions, நூறு கோடி

milliner *(n)* : one who makes and sells women's hats, ribbons, etc., மகளிர் தொப்பி, ரிப்பன் முதலிய வற்றைச் செய்பவர், மற்றும் விற்பவர்; *(v)* : to grind, cut grooves at the edge, பொடியாக்கு, அரை விளிம்பில் வரிவெட்டு

million *(n & adj)* : ten lakhs, பத்து லட்சம்

millionaire *(n)* : a man who has a million or more, கோடீசுவரன்

mime *(n)* : a simple kind of drama in which actions or dancing take the place of speaking, actor in such a drama, அபிநய நாடகம், பேசா நாடகம், இவ்வகை நாடகங்களில் நடிப்பவர்

mimic *(n)* : one who imitates, போலச் செய்பவர்

mimicry *(n)* : an imitation, போலச் செய்தல்

minaret *(n)* : tall slender tower connected with a mosque, மசூதிக் கம்பம்

mince *(v)* : to cut or chop into small pieces, நறுக்கு, கொத்து

mind *(n)* : the power by which we feel or think, memory, intention, மனம், உணர்வு, நினைவாற்றல், கருத்து, எண்ணம்; *(v)* : to pay attention to, to look after, to object to, கவனி, அக்கறை கொள், பொருட்படுத்து

mindful *(adj)* : thinking much about, அக்கறையுள்ள, கவனமுள்ள, விழிப்பான

mine *(n)* : a place from which ores are dug, an explosive, a rich source of valuable things, சுரங்கம், வெடி, மூலவளம்; *(v)* : dig out for ores, சுரங்கம் வெட்டு; *(pron)* : belonging to me, என்னுடைய

mineral *(n)* : an inorganic substance got from the earth, any substance comprising metal, கனிப்பொருள் உலோகத் தாது; *(adj)* : relating to the substances dug from the earth or mines, சுரங்கத்திலிருந்து அல்லது நிலத்திலிருத்து கிடைக்கும் பொருள் சார்ந்த

mingle *(v)* : blend together, ஒன்றாகக் கல

miniature *(n)* : a small painting, reduced form, நுணுக்க ஓவியம், நுணுக்கப் பதிப்பு; *(adj)* : on a small scale, சிறிய அளவிலான

minimize *(v)* : to reduce as much as possible, முடிந்த அளவு குறை

minimum *(n)* : the least quantity, the lowest point, சிறுமம், தாழ்மம்

mining *(n)* : the process of digging out minerals, சுரங்க வேலை

minion *(n)* : a favourite servant. மனதிற்கு உகந்த பணியாள்

minister *(n)* : the head of one of the divisions of the gcvernment. a religious head. அமைச்சர், சமயத்தலைவர்; *(v)* : give help or service. உதவு, தொண்டு செய்

ministry *(n)* : office of minister. body of ministers of a state. அமைச்சரவை, அமைச்சர் குழு

mink *(n,* : small animal valued for its fur, மென் மயிர்களை உடைய கீரியின விலங்கு

minnow *(n)* : a very small fresh-water fish. ஆற்றுமீன், குளத்து மீன்

minor *(adj)* . smaller. younger. ordinary. சிறிய, இளைய, சாதாரண மான; *(n)* a person under 21 years of age. 21 வயதுக்கு உட்பட்ட சிறி

minority *(n)* : smaller number. state of being under age. குறைந்த எண், சிறுபான்மையோர், உரிய வயதுக் குக் குறைவான நிலை.

ninster *(n)* : a monastry. church especially a cathedral. கிறித்துவத் துறவி, மடந்திருக் கோயில்

minstrel *(n)* : a wandering musician. a singer. நாடோடிப் பாடகன், பாணன்

mint *(n)* : place where money is coined by the government. an aromatic plant. தங்கசாலை, அச்சு சாலை, நாணயச் சாலை, ஒருவகைப் புதினாக் கீரை

minus *(adj)* : the sign –. less than nothing. – குறி, குறைவான

minute *(n)* : a measure of time consisting of sixty seconds. the sixtieth part of a degree. (pl) : notes taken at a meeting. மணித்துளி, கோண அளவில் பாகையின் அறுபதில் ஒரு கூறு, சட்ட நடவடிக்கைக் குறிப்பு; *(adj)* : very small, மிகச் சிறிய

minx *(n)* : an imprudent girl. துடுக்குத்தனக்காரி, குளுக்குக்காரப் பெண்

miracle *(n)* : a supernatural happening. அற்புதம், தெய்வீக அருள் நிகழ்ச்சி, இயற்கை மீறிய நிகழ்ச்சி

mirage *(n)* : an illusory appearance of water, trees etc. in a desert. கானல் நீர்

mire *(n)* : deep wet mud. சகதி, சேறு

mirle *(n)* : dark. இருள்

mirror *(n)* : a looking-glass. a reflector. முகம் பார்க்கும் கண்ணாடி, உருக் காட்டி

mirth *(n)* : happiness. laughter. களிப்பு, நகைப்பு

misadventure *(n)* : misfortune. கேடு காலம்

misanthrope *(n)* : one who hates humankind. மனித இனத்தை வெறுப்பவர்

misapprehend *(v)* : to conceive wrongly. தவறாகப் புரிந்து கொள்

misappropriate *(v)* to put to a wrong use. தவறாகப் பயன்படுத்து

misbehave *(v)* : to behave badly. முறைதவறி நட, தவறாக நட

misbehaviour *(n)* bad conduct. தவறான நடத்தை

miscarriage *(n)* the act of giving birth prematurely failure. தவறிய பிரசவம், தவறு

miscarry *(v)* : go wrong. give birth before the due time. தவறிப் போ, உரிய காலத்திற்கு முன் குழந்தை பெறு

miscellaneous *(adj)* : mixed. various பலவகையான, பிறவகை சேர்க்கை யான

mischance *(n)* : ill-luck, mishap, துரதிர்ஷ்டம், இடையூறு

mischief *(n)* : injury, harm, damage, foolish or thoughtless behaviour, ஊறு, தீங்கு, அழிபாடு, குறும்பு

mischievous *(adj)* : causing mischief, தீங்கிழைக்கும், குறும்புத்தனமான

misconceive *(v)* : to understand wrongly, தவறாகப் புரிந்து கொள்

misconduct *(n)* : bad behaviour, தவறான நடத்தை

misconstrue *(v)* : to get a wrong idea, தவறாகப் பொருள் கொள்

miscount *(v)* : to count wrongly, தவறாக எண்ணு

misdeal *(v)* : to deal wrongly, தவறாகப பங்கீடு செய்

misdeed *(n)* : wicked act, crime, தீச்செயல், குற்றம்

misdemeanour *(n)* : evil conduct, an error, தீய நடத்தை, சிறு குற்றம்

misdirect *(v)* : to direct wrongly, தவறாக வழிகாட்டு

miser *(n)* : a stingy man, a mean person, கஞ்சன், இழிந்தவன்

miserable *(adj)* : wretched, worthless, துயர் நிறைந்த, இழிந்த

misery *(n)* : distress, poverty, பெருந் துயரம், ஏழ்மை

misfire *(v)* : (of guns and revolvers) fail to go off, குறி தவறிச் சுடு

misfit *(n)* : a bad fit, a wrong size, பொருந்தாதது, தவறான அளவு உடையது

misfortune *(n)* : calamity, bad fortune, இடையூறு, வாய்ப்புக் கேடு

misgiving *(n)* : mistrust, suspicion, அவநம்பிக்கை, ஐயப்பாடு

misgovern *(v)* : to govern badly or unjustly, தவறான முறையில் ஆட்சி செய்

misguide *(v)* : lead wrongly, give wrong information, தவறான பாதையில் செலுத்து, தவறான கருத்தை அளி

mishandle *(v)* : to treat roughly or rudely, தவறாகக் கையாளு, முரட்டுத்தனமாக நடத்து

mishap *(n)* : ill-luck, a fatal accident, வாய்ப்புக் கேடு, எதிர்பாரா விபத்து

misinform *(v)* : to inform wrongly, to mislead, தவறான செய்தி கொடு, தப்புவழி காட்டு

misinterpret *(v)* : give wrong meaning to, தவறாகப் பொருள் கொள்

mislay *(v)* : put in the wrong place and forget, தவறான இடத்தில் வை, வைத்த இடத்தை மற

mislead *(v)* : to guide wrongly, தவறான வழிகாட்டு, தவறாகக் கருதச் செய்

mismanage *(v)* : manage badly or wrongly, திறமையின்றி காரிய மாற்று, தவறாக நடத்து

misnomer *(n)* : a wrong name, an unsuitable name, தவறாக வழங்கும் பெயர், ஒவ்வாத பெயர்

misplace *(v)* : to put in a wrong place, இடந்தவறி வை, வைத்து மறந்து போ

misrepresent *(v)* : to represent wrongly, give an unfaithful picture, தவறாக எடுத்துரை, பொய் விவரம் அளி

miss *(v)* : fail to hit or reach, to go without, let slip, குறி தவறு, தவற விடு, நழுவ விடு; *(n)* : an unmarried young woman, இளம் கன்னிப் பெண்

missile (*n*) : a weapon thrown out or shot, எறிபடை, ஏவுகணை

missing (*adj*) : lost, wanting, தவறிய, காணப்படாத, தேவைப்படும்

mission (*n*) : the act of sending some one to do a certain task, one's aim in life, தூதுக்குழு, வாழ்க்கைக் குறிக் கோள்

missionary (*n*) : a preacher at a church, mission, சமயப்பரப்பாளர், சேவைக்குழு

missive (*n*) : letter, a message, கடிதம், செய்தி

misspell (*v*) : spell wrongly, தவறாக உச்சரி

mist (*n*) : water vapour descending in drops near the earth's surface, thin fog, மூடுபனி

mistake (*v*) : to err, to understand wrongly, தவறு செய், தவறாகப் புரிந்து கொள்; (*n*) : an error, தவறு

mistress (*n*) : woman in authority over servants, female head of the house hold, a lady teacher, தலைவி, வீட்டுத்தலைவி, ஆசிரியை

mistrust (*v*) : disbelief, அவநம்பிக்கை; (*n*) : wanting in trust, அவநம்பிக்கை கொள்

misunderstand (*v*) : to understand words in a wrong sense, தவறாகப் பொருள் கொள்

misunderstanding (*n*) : difference of opinion, a mistake in meaning, கருத்து வேறுபாடு, தவறாகப் பொருள் கொள்ளல், தவறாக உணர்ந்து கொள்ளுதல்

misuse (*v*) : to use in a wrong way, ill-treat, தகாத வழியில் பயன் படுத்து, மோசமாக நடத்து

mite (*n*) : a small coin, a very small insect, anything very small, செப்புக் காசு, சிறுபூச்சி வகை, சிறு பிள்ளை, சிறிதளவு

mitigate (*v*) : to make less severe, மட்டுப்படுத்து, தணி

mix (*v*) : blend, mingle, கல, ஒன்று சேர்

mixture (*n*) : a mingled mass, a liquid medicine, mixing, கலவை, மருந்துக் கலவை, கலத்தல், கலப்பு

mnemonic (*adj*) : helping to remember a thing, நினைவில் கொள்ள உதவும்; (*n*) : something which helps to keep in memory, நினைவுக் குறிப்பு

moan (*v*) : to make a low sound to express physical or mental suffering, புலம்பு, முனகு; (*n*) : moans, lament, அழுகை, புலம்பல்

moat (*n*) : deep wide defensive trench surrounding a town usually filled with water, அகழி

mob (*n*) : a disorderly crowd, கும்பல்; (*v*) : to attack, assemble in mob கூட்டமாகத் தாக்கு, கும்பலாகக் கூடு

mobile (*adj*) : movable, free to move, that may be easily moved from place to place, நகரத்தக்க, எளிதில் இயங்கும், எளிதில் செயல்படுத்தும்

mobility (*n*) : quality of moving easily, activity, எளிதில் இயங்கும் தன்மை, இயக்கம்

mobilize (*v*) : collect together for use, to gather troops, ஒன்று சேர், படைக்கத்தில் கொணர், படை திரட்டு

moccasin (*n*) : soft leather made from deer skin, a shoe made from this பதனிட்ட மான் தோல், மான் தோல் செருப்பு

mock *(v)* : ridicule, make fun of, imitate, ஏளனம் செய், கேலி செய், விகடம் செய், போலச் செய்; *(adj)* : unreal, not genuine, பாசாங்கான, போலியான

mockery *(n)* : the act of making fun of somebody or something, இகழ்ச்சி, ஏளனம், நிந்தை

mode *(n)* : way of speaking or behaving, செயல் வகை, செயல்பாணி முறை, பாங்கு

model *(n)* : a copy of something, design to be copied, one who poses for sculptures and painters, example, மாதிரி, உருப்படிவம், உருமாதிரி

moderate *(adj)* : mediocre, நடுத்தரமான, மிதமான; *(v)* : to become less violent, மிதமாக்கு, குறை

modern *(adj)* : belonging to the present or recent, நவீன, புதுமையான, தற்காலத்திற்குரிய; *(n)* : new and up-to-date, நவீனம், புதுமை

modernize *(v)* : bring upto date, make suitable for present-day needs, புதுமையாக்கு, தற்காலத் தேவைகளுக்குப் பொருத்தமுடையதாக்கு

modest *(adj)* : moderate, humble, not boastful, மிதமான, பணிவுள்ள, தன்னடக்கமுள்ள

modesty *(n)* : state of being modest, நிதானம், நாணம், கன்னடக்கம், பணிவு

modify *(v)* : qualify, to make a change in, to make less severe, தரப்படுத்து, திருத்தம் செய், மட்டுப்படுத்து

modulate *(v)* : regulate, change the tone of voice, ஒழுங்கு படுத்து, குரலில் ஏற்ற இறக்கம் கொடு

moisten *(v)* : to make slightly wet, ஈரமாக்கு, நனை

moisture *(n)* : dampness, ஈரம், நனைவு

molar *(n)* : back tooth used for grinding food, பின்கடை வாய்ப் பல்

molasses *(n & pl)* : thick dark syrup obtained from raw sugar during the refining process, வெல்லப் பாகு

mole *(n)* : permanent small dark spot on the human skin, a small burrowing animal, stone wall built in the sea as a break water, மறு, மச்சம், அகழெலி, அலைதாங்கி, அணைகரை

molecule *(n)* : the smallest passive part of a substane, மூலக்கூறு

mole-hill *(n)* : heap of earth thrown up by a mole, அகழெலிப் புற்று

molest *(v)* : trouble or annoy intentionally, தொந்தரவு செய், இடையூறு செய்

molten *(adj)* : melted, உருக்கிய, உருக்கி வார்க்கப்பட்ட

moment *(n)* : very brief period of time, importance or value, கணம், நொடி, சிறப்பு, மதிப்பு

momentary *(adj)* : lasting for a moment, passing, கணநேரமே நிலைக்கிற, தோன்றி மறைகிற

momentous *(adj)* : of great importance, முக்கியத்துவம் நிறைந்த, சிறப்பு வாய்ந்த

monarch *(n)* : a supreme ruler, முடி மன்னன், பேரரசன்

monarchy *(n)* : government by a monarch, முடியாட்சி

monastery *(n)* : residence for monks, துறவி, மடம்

Monday *(n)* : second day of the week. திங்கட்கிழமை

money *(n)* : metal stamped into coins used for payments, currency note. wealth, பணம், நாணயம், செல்வம்

monger *(n)* : trader, dealer, வ்ணிகன், விற்பனையாளர்

mongoose, mungoose *(n)* : a big squirrel-like animal clever at destroying venomous snake, கீரி

mongrel *(n)* : dog of of mixed breed, plant or animal of mixed origin, கலப்பின நாய், கலப்பின தாவரம் அல்லது விலங்கு

monitor *(n)* : a pupil given authority over his fellows, one who advises, a warship with revolving gun turrets, மாணவர் தலைவன், சட்டாம்பிள்ளை, எச்சரிப்பவர், காவற்கப்பல்

monk *(n)* : a male member who takes religious vows and lives in a monastery, மடத்துறவி

monkey *(n)* : an animal closely resembling man, குரங்கு; *(v)* : act mischievously, குறும்பு செய்

monocle *(n)* : eye glass for one eye only, ஒற்றை மூக்குக் கண்ணாடி

monogamy *(n)* : practice of being married to only one person at a time, ஒரு சமயத்தில் ஒரே வாழ்க்கைத் துணையுடன் வாழும் முறை, ஒரு மணத்துணை

monogram *(n)* : two or more letters combined into a single design, கூட்டெழுத்து

monolith *(n)* : simple upright block of stone, ஒற்றைப் பாளக்கல்லில் செதுக்கப்பட்ட உருவம்

monologue *(n)* : speech in a play, etc by only one person, தனிமொழி

monoplane *(n)* : an aeroplane with one wing on each side of the fuselage, ஒரிணைச் சிறகு விமானம், ஒரு தள விமானம்

monopolize *(v)* : acquire the full rights in anything, முழு ஆதிக்கம் செலுத்து

monopoly *(n)* : sole right of dealing a thing, தனியுரிமை

monosyllable *(n)* : a word of one syllable, ஒரசைச்சொல்

monotheism *(n)* : belief that there is only one god, ஒரே கடவுள் கோட்பாடு

monotonous *(adj)* : uttered in one unchanging tone, lacking variety, uninteresting, ஏற்றத்தாழ்வற்ற குரலுடைய, ஒரே மாதிரியான, சலிப்பூட்டும்

monotype *(n)* : composing-machine that casts and sets up type, ஒரச்சுப் பொறி

monseigneur *(n)* : French title given to a person of high rank, பிரெஞ்சுப் பட்டம்

monsoon *(n)* : a periodical Indian wind, பருவக்காற்று

monster *(n)* : something unnatural, இயற்கைக்கு மாறுபட்டது; *(adj)* : huge, giant, மாபெரும்

monstrous *(adj)* : horrible, huge, unnatural, கொடிய, அச்சம் தரும், மிகப்பெரிய, இயல்மீறிய

month *(n)* : one twelfth part of a year, திங்கள், மாதம்

monthly *(adj)* : happening once a month, திங்களொரு முறை நிகழும், மாதமொரு முறைநிகழும்; *(n)* : a magazine published once in a month, திங்களிதழ், மாதமிதழ்

monument *(n)* : a memorial built in memory of a person or an event, நினைவுச் சின்னம்

monumental *(adj)* : serving as a monument, important, நினைவுச் சின்னமான, நிலைபேறான, நினைவுக்குரிய, சிறப்பு வாய்ந்த

mood *(n)* : manner, state of mind, the inflection of a verb, மனப் போக்கு, மனநிலை, வினைச் சொல்லின் பாங்கு

moon *(n)* : the heavenly body which revolves round the earth and shines at night, சந்திரன், திங்கள்

moor *(n)* : a large stretch of uncultivated land, one of a Mohammedan race, தரிசுநிலம், புதர்க்காடு, முகம்மதிய இனத்தவர்; *(v)* : to fasten a ship by ropes or by anchor, கப்பலை நங்கூரம் பாய்ச்சி நிலை நிறுத்து

moorings *(n & pl)* : permanent anchors & chains required to hold a ship in position, the place where a ship is fastened, நங்கூரச் சங்கிலி பிணைப்பு, நங்கூரமிட்டுப் பிணைக்கும் இடம்

moose *(n)* : North American deer like animal, வடஅமெரிக்க மானின விலங்கு

moot *(v)* : a discuss, to propose for debate, சர்ச்சை செய், சர்ச்சைக்குக் கொண்டு வா; *(adj)* : disputable, debatable, சர்ச்சைக்குரிய, சர்ச்சை செய்யப்பட வேண்டிய

mop *(n)* : a duster, துடைப்பான்; *(v)* : wipe, dust with a mop, துடை, துடைப்பத்தால் பெருக்கு

mope *(v)* : to be dull, மந்தமாக இரு

mopish *(adj)* : dull, spiritless, மந்தமான, கிளர்ச்சியற்ற, ஊக்கமற்ற

moraine *(n)* : rocks and gravels on the edge of glaciers, பனிப்படலப் பாறை, பனிப்படல வண்டல்

moral *(adj)* : pertaining to the right and wrong, good and bad, நன்மை தீமையுணர்வுக்குரிய, அறத்தைப் பற்றிய, நல்ல; *(n)* : principle of right and wrong, the lesson of a fable or story, நீதி, கருத்து, படிப்பினை

morale *(n)* : moral condition, ஒழுங் குணர்வு, உளஅமைதி

morality *(n)* : moral science, ஒழுக்கத் தன்மை, நீதி நெறி

morals *(n & pl)* : moral principles or behaviour, ethics, ஒழுக்கக் கோட் பாடு, ஒழுக்க நட்த்தை, அறமுறை

morass *(n)* : a marsh, சதுப்பு நிலம்

morbid *(adj)* : unsound, not healthy, கோளாறான, உடல் நலமற்ற

more *(adj)* : existing in greater quantity, amount or degree, additional, மிகுதி யான, கூடுதலான

moreover *(adv)* : in addition, மேலும்

moribund *(adj)* : dying, சாகும் நிலையிலுள்ள

morn, morning *(n)* : the first part of the day, காலைப் பொழுது

morning star *(n)* : Venus, bright planet seen at dawn, விடிவெள்ளி, சுக்கிரன்

morocco *(n)* : a fine leather made from goat skin, வெள்ளாட்டுத் தோல்

morose *(adj)* : gloomy and unsocial, வருத்தம்தோய்ந்த, சிடுசிடுப்பான

morphia *(n)* : a drug used to deaden pain or to cause sleep, வலி நீக்கி தூங்க வைக்கும் மருந்து

morrow *(n)* : tomorrow, மறுநாள், நாளை

morse *(n)* : a code of signals used in signalling and telegraphy, மோர்சுக் குறியீட்டு முறை

morsel *(n)* : a small piece, சிறு துண்டு கவளம்

mortal *(adj)* : causing death, சாகடிக்கக் கூடிய

mortality *(n)* : liability to death, death-rate, இறப்பு, இறப்புவீதம் இறப்புவிகிதம்

mortar *(n)* : a mixture of lime or cement, sand and water for joining stones or bricks, a vessel in which substances grounded, a shell throwing instrument, சாந்துக் கலவை, காரை, உரல், சிறுபீரங்கி

mortgage *(n)* : giving a property as a security for debt, அடகு

mortify *(v)* : humiliate, to vex, துன் புறுத்து, புண்படுத்து

mortise *(v & n)* : hole in a frame work designed to receive the end of some other part, துளை பொருத்து

mortuary *(n)* : a building where dead bodies are kept temporarily, சவக் கிடங்கு

mosque *(n)* : Mohammedan temple, பள்ளி, பள்ளிவாசல், மசூதி

mosquito *(n)* : a small blood-sucking insect, கொசு

moss *(n)* : wet spongy soil, lichen, புதை மணல், பாசி, காளான்

most *(adj & adv)* : superlative term of much and many, மிகப்பல, பெரும்பாலாக

mote *(n)* : a small particle of dust, தூசு

moth *(n)* : a sort of winged insect related to the butterfly but seen mostly at night, அந்துப்பூச்சி, விட்டில்

mother *(n)* : the female parent, the female head of a convent or religious house, அன்னை, தாய், தலைவி கன்னிமாடத் தலைவி

mother-in-law *(n)* : the mother of one's husband or wife, மாமியார்

motherland *(n)* : one's native land, தாய் நாடு

motherly *(adj)* : mother-like, maternal, தாய் போன்ற, தாய்க்குரிய, தாய் வழியிலான

mother-of pearl *(n)* : the hard shining material which forms inside certain shells, முத்துச்சிப்பி

mother tongue *(n)* : one's native language, தாய்மொழி

motion *(n)* : the state of moving, proposal to be discussed in a meeting, evacuation of the bowels, இயக்கம், கூட்ட நடவடிக்கை, மலம்

motive *(n)* : that which tends to action, design, நோக்கம் திட்டம்; *(adj)* : causing action, இயக்கும்

motley *(adj)* : of variot s colours, பல வண்ண; *(n)* : the multi-coloured dress, பலவண்ண ஆடை

motor *(n)* : a machine that produces motion, உந்து வண்டி, விசை உந்து; *(v)* : go by a motor car, விசை உந்தில் செல்

mottled *(adj)* : having spots of many colours, பல வண்ணப் புள்ளிகளை யுடைய

motto *(n)* : a concise sentence, an inscription, quotation, நீதிமொழி, பொன்மொழி, முத்திரை மொழி, மேற்கோள் வாக்கியம்

